தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 152 • 12.08.2018

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா

தொடர்புகளுக்கு
0768255563, 0214927561

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## தமிழரசுக்கட்சி சொன்னதா? ரெலோ வெல்லுமா?

## புதுக்குடியிருப்பில் புலிகளின் இரகசிய ஒப்ரேஷன்!

## கருணாநிதி மேல் ஏன் இத்தனை காதல்?

## "தேசிய கட்சிகள் பணம்கொடுத்தே வாங்கு பெற்றன"

சித்தார்த்தன் பரபரப்பு பேட்டி



# மாவை... விக்னேஸ்வரன் எது ப்ளஸ்? எது மைனஸ்?

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட

YARL AHI Ice Cream

யாழ் அகி ஐஸ்கிறீம்

ஒருமுறை விஜயம் செய்து
சுவைத்துப் பாருங்கள்

இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328



திருமணநாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய
விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.

குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarl ahi icecream.comஐ பார்வையிடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வினோநோகராதலிங்கம்


ஹென்றி மகேந்திரன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்


சிறிகாந்தா

## தமிழ் தேசிய கூட்டமைப்பு

# தேசியப்பட்டியல் எம்.பி யார்? என்னென்ன சிக்கல்?

வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற சர்ச்சை, பரபரப்பை பின்னுக்குத்தள்ளி இப்பொழுது அதிகம் பேசப்படும் விடயமாகி விட்டது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டில் விடயம். தேசியப் பட்டியல் எம்.பிக்களில் மாற்றம் செய்யப்படுமா? புதிதாக யாருக்கு நியமனம் வழங்கப்பட வாய்ப்புள்ளது? தேசியப்பட்டியலில் மாற்றம் செய்ய வாய்ப்புள்ளதா? இப்படி பல கேள்விகளுடன் பலரும் பரபரத்து திரிகிறார்கள்.

2015 நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு இரண்டு தேசியப்பட்டியல் உறுப்புரிமை கிடைத்தது. முல்லைத்தீவின் சாந்தி சிறிஸ்கந்தராசா, திருகோணமலையில் துரைரட்ணசிங்கம் ஆகியோர் அப்போது தேசியப்பட்டில் எம்.பிக்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்த நியமனம் சுழற்சிமுறையில் இடம்பெறுமென்று சொல்லப்பட்டது, முதல் இரண்டரை வருடம் முடிந்து விட்டமு. ஆகவே அடுத்த தேசியப் பட்டியல் நியமனத்தை தமக்கு வழங்க வேண்டுமென ரெலோ விடாப்பிடியாக நிற்கிறது. "முன்னர் எங்களுக்கு வாக்களித்தீர்கள். இப்பொழுது தந்தே தீர வேண்டும்" என்கிறார்கள்.

தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களிடம் கேட்டால், அப்படி சொல்லவே யில்லையென்கிறார்கள். அப்படி யானால் என்னதான் நடந்தது? ஒரு வேளை ரெலோவிற்கு தேசியப்பட்டியல் கிடைத்தால், யார் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது?

2015 நாடாளுமன்ற தேர்தல் சமயத்திலேயே கூட்டமைப்பிற்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ் தமிழரசுக்கட்சி லடாய் ஆரம்பித்து விட்டது. தேர்தலில் எதிர்க்கட்சிகள் மோதி, எதிர்தரப்பு வேட்பாளரை கவிழ்க்க செய்த முயற்சிகளையெல்லாம் விட இந்த இரண்டு கட்சிகளும்தான் கீரியும் பாம்புமாக வேலைசெய்தார்கள். இறுதி தேர்தல் முடிவில் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெற்றியடைய வில்லை. கூட்டமைப்பிற்கு இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைத்தன.

சுரேஷ் பிரேமச்சந்திரனிற்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படலா மென்ற எதிர்பார்ப்பொன்று அப்போது இருந்தது. அவருக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் பகிரங்கமாகவே சிலர் விடுத்தார்கள். அந்த சமயத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரமுகர்கள் சிலர் வேறொரு முயற்சியெடுத்தார்கள். புளொட் தலைவர் சித்தார்த்தனுடன் பேசி, சம்பந்தனுடன் பேசிப்பார்க்கும்படி கேட்டிருந்தார்கள். சுரேஷ் பிரேமச்சந்திரனுக்காக சம்பந்தனிடம் தூது போனார் சித்தார்த்தன். ஆனால் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்படவில்லை.

தேசியப்பட்டியல் தொடர்பாக அப்போது இதைத்தவிர கட்சிகளிற் குள் வேறு எந்த இணக்கப்பாடு, பேச்சுவார்த்தை நடக்கவில்லையென் கின்றன தமிழரசுக்கட்சி வட்டாரங்கள். ஒருவேளை தமக்கு தெரியாமல், ரெலோவிற்கு தனியாக சம்பந்தரிடம் வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லையென்கிறார்கள்.

இதைப்பற்றி ரெலோ தரப்பிடம் விசாரித்தால், சம்பந்தர் எங்களிற்கு அப்படி வாக்களித்தார் என்கிறார்கள்.

சரி, அது எப்படியிருந்தாலும் இப்போதுள்ள பெரிய கேள்வி, ரெலோவிற்கு தேசியப்பட்டியல் எம்.பி வழங்கப்பட வாய்ப்புள்ளதா? அதற்கான சூழ்நிலை உள்ளதா?

இது சிக்கலான கேள்வி. ஏனென்றால், தேசியப்பட்டியல் எம்.பி பதவியை ரெலோ மட்டுமல்ல, தமிழரசுக்கட்சிக்குள்ளும் சிலர் குறிவைத்துள்ளனர். கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம் தனக்கு தேசியப்பட்டியல் எம்.பி வழங்க வேண்டுமென கட்சிக்குள் கிளர்ச்சி செய்தபடியிருக்கிறார்.

கடந்த மாதமளவில் கட்சியின் மத்தியகுழு கூட்டம் முல்லைத்தீவில் நடந்தது. தனக்கு தேசியப்பட்டியல் எம்.பி வழங்கப்படவில்லையென அப்போது எல்லோருடனும் கோபித்துக் கொண்டு ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தார். மத்தியகுழு தொடர்பாக பேசி, கட்சியின் செயலாளர் அறிவிப்பார் என அப்போது அவருக்கு சொல்லப்பட்டது. சில வாரங்களின் பின்னர், கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கத்திடமிருந்து ஒரு கடிதம் குலநாயகத்திற்கு அனுப்பப்பட்டது. அதில், இப்போதைக்கு தேசியப் பட்டியல் எம்.பிகளை மாற்றும் உத்தேசமில்லையென்று கட்சி முடிவெடுத்திருப்பதாக சொல்லப்பட்டிருந்தது.

குலநாயகத்திற்கு இப்படி சொல்லி விட்டு, ரெலோவிற்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கலாமா? சொந்தக் கட்சிக்குள் சிக்கலை வளர்க்க தமிழரசுக்கட்சி விரும்புமா?

இந்த விடயத்தில் இன்னும் சில சிக்கலான முடிச்சுக்களும் உள்ளன. தேசியப்பட்டியல் விவகாரத்தில் ரெலோவிற்குள்ளும் சில குழப்பங்கள் உள்ளன. ரெலோவுடன் தொடர்புபட்ட சில குழப்பங்கள் தமிழரசுக்கட்சிக்கும் உள்ளது.

அதை விளக்கமாக சொல்கிறோம்.

ஆரம்பத்தில் இந்த தேசியப்பட்டியல் நியமனத்தை கிழக்கிற்கு வழங்கத்தான் ரெலோ முடிவெடுத்திருந்தது. அம்பாறையின் ஹென்றி மகேந்திரனுக்கு வழங்க கட்சி தலைமையிடம் ஒரு முடிவிருந்தது. ஆனால் கிழக்கு ரெலோவிற்குள் ஒரு சிக்கலுள்ளது. அங்கு ஒரு உறைக்குள் இரண்டு வாளை செருகி வைக்க முயல்கிறது ரெலோ. ஒருவர் ஹென்றி மகேந்திரன். மற்றவர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா). ரெலோ செயலாளர் பதவியை ஹென்றி மகேந்திரனிடம் கொடுக்க முயன்றபோது, ஜனா எதிர்த்து

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிட முயல, வில்லங்கம் இல்லாமல் சிறீகாந்தாவிடம் செயலாளர் பதவி போனது.


ஹென்றி மகேந்திரனிற்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படுவதற்கு ஜனா கடுமையான எதிர்ப்பை கட்சி தலைமையிடம் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. கட்சி தலைமையும் ஜனாவை பகைக்க விரும்பவில்லையென சொல்லப்படுகிறது.

ஆனால், கட்சி தலைமை விரும்பினாலும், ஜனாவிற்கு தேசியப்பட்டியல் நியமனத்தை வழங்க முடியாது. காரணம் பிரச்சனை ஸ்விட் போடும் இடத்தில் இருக்கிறது!

மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சியின் முன்னாள் எம்.பிக்கள் செல்வராசா, அரியநேந்திரன் இருவரும் பட்டிருப்பு தொகுதியை சேர்ந்தவர்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்தனர். ஜனாவும் பட்டிருப்பு தொகுதிதான். பட்டியிருப்பு தொகுதியில் ஜனா எம்.பியானால் தங்களை காலி செய்துவிடுவார் என அவர்கள் நினைக்கிறார்கள். கட்சி செயலாளர் துரைராசசிங்கத்துடன் அவர்களிற்கு நெருக்கம் இருக்கிறது, அவர் மூலம் ஜனாவிற்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படுவதை எதிர்க்கிறார்கள் என சொல்லப்படுகிறது.

ஏதோ ரெலோ தேசியப்பட்டியல் எம்.பியை கேட்கிறது என ஒற்றை வரியில் விசயத்தை விளங்கி வைத்திருந்தவர்களிற்கு இப்போது புரிகிறதா இதிலுள்ள இடியப்ப சிக்கலும், தேசியப்பட்டியலுக்கு என் இவ்வளவு முக்கியத்துவம் கிடைக்கிறது என்பதும்.

மட்டக்களப்பு பிரமுகர்களிற்குள் தேசியப்பட்டியல் குழப்பம் ஏற்பட்டதையடுத்து, அண்மையில் ரெலோ அரசியல்குழுவில் மாற்று முடிவொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அது முன்னாள் வன்னி எம்.பி வினோ நோகராதலிங்கத்திற்கு அந்த நியமனத்தை வழங்கலாம் என்பது!


கோவிந்தன் கருணாகரம்

கட்சி தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் அதில் விருப்பமிருப்பதாக தெரிகிறது. வன்னிக்குள் ரெலோவின் வாக்குவங்கியை அதிகரிக்க வேண்டிய நெருக்கடிக்குள் ரெலோ இருக்கிறது. செல்வம் அடைக்கலநாதனின் சொந்த கிராமமான விடத்தல் தீவை உள்ளடக்கிய மாந்தை மேற்கு பிரதேசசபை கூட இம்முறை ஐ.தே.கவிடம் வீழ்ச்சியடைந்து விட்டது. கடந்த நாடாளுமன்ற தேர்தலிலும் சாள்ஸ் நிர்மலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே வன்னியில் அதிக வாக்கெடுத்திருந்தனர். அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் சத்தியலிங்கமும் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, போட்டி பலமாக இருக்கும். வன்னியில் ரெலோவின் வாக்கு வங்கியை பலப்படுத்த வேண்டுமென செல்வம் அடைக்கலநாதன் விரும்புகிறார். வினோநோகராதலிங்கத்திற்கு தேசியப்பட்டியல் எம்.பியை கொடுத்து அதை செய்யலாமென நினைக்கிறார்.

இதேவேளை, தேசியப்பட்டியல் போட்டிக்களத்தில் ரெலோ செயலாளர் சிறிகாந்தாவும் இருக்கிறார் என்ற கருத்தும் உள்ளது. " தமிழரசுக்கட்சிக்கு கொஞ்சம் தேவைக்கு அதிகமாகவே ஐஸ் வைக்கும் வேலையை செய்கிறார். விக்னேஸ்வரன் பற்றி அவர் கூறும் கருத்துக்களும் அந்தவகையானவைதான். விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளர் அல்லவென்பது கட்சியின் முடிவல்ல. ஆனால், கட்சியின் முடிவைப்போல அவர் சொல்லி வருகிறார். தேசியப்பட்டியல் எம்.பியை அவரும் குறிவைத்திருக்கலாம். அதற்காகத்தான் இப்படி நடக்கிறாரோ தெரியவில்லை" என்கிறார்கள் ரெலோவின் முக்கியஸ்தர்கள் சிலர்.

என்னதான் கட்சியாக முடிவெடுத்தாலும், இறுதியில் த்லைவர் சில இரகசிய நடவடிக்கைகளை செய்துவிடுவார் என்கிறார்கள் அவர்கள். அதற்கு லேட்டஸ்ட் உதாரணம் வடக்கு சுகாதார அமைச்சர் குணசீலன் நியமிக்கப்பட்ட விவகாரம். புதிய அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும் என்றதும், ரெலோ தலைக்குழு கூடி விந்தன் கனகரட்ணத்தை அமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்ய பரிந்துரைத்தது. ஆனால் அமைச்சராக நியமிக்கப்பட்டவர் குணசீலன். குணசீலனை அமைச்சராக நியமிப்பதற்கு முன்னர் செல்வம் அடைக்கலநாதனும், முதலமைச்சரும் பேசியிருந்தார்கள். செல்வம் அடைக்கலநாதனின் சம்மதத்துடன்தான் அந்த நியமனத்தை முதலமைச்சர் செய்திருந்தார். ஆனால், முதலமைச்சர் தன்னிச்சையாக அந்த நியமனத்தை செய்தார் என்றுதான் கட்சிக்குள் சொல்லப்பட்டது.

ஹென்றி மகேந்திரனா, ஜனாவா, வினோநோகராதலிங்கமா என கட்சிக்குள் பேசிக்கொண்டிருக்க, 'சத்தமில்லாமல் சிறிகாந்தா நியமிக்கப்படவும் வாய்ப்புள்ளதென்கிறார்கள் அவர்கள்.

இம்முறை தனக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்படாவிட்டால், கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் என ஹென்றி மகேந்திரன் கட்சிக்குள் கூறியிருக்கிறார். ஆனால், தலைவரின் கடைக்கண் பார்வை ஜனாவின் மீது இருக்கிறது. இந்த இடத்தில் திடீர் வில்லன்களாக அவரது தொகுதி தமிழரசுக்கட்சி முன்னாள் எம்.பிக்கள் வந்து நிற்கிறார்கள். இப்படி ஒரு த்ரில் கதைக்கேயுரிய திருப்பங்களுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பி விவகாரம் அமைந்திருக்கிறது.

முடிவு எப்படியிருக்கப் போகிறது என்பதே விடை தெரியாத கேள்வியாக இருக்கிறது!







இணைய கலாட்டா













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியிருக்கும் மாகாணசபை தேர்தல் களம்? 05

# மாவை... விக்னேஸ்வரன்

## பிளஸ், மைனஸ்கள் என்ன? சம்பந்தரின் முடிவு எது?

தீபம் குழு

வடக்கு மாகாணசபை தேர்தல் களம் எப்படியிருக்கும்? தேர்தல் களத்தில் கட்சிகளின் பெறுபேறுகள் எப்படியிருக்கும்? எந்த கட்சியில், யார் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கவாய்ப்புள்ளது? இந்த தேர்தல் அலசல் தொடரின் ஹைலைட்டான பகுதிக்கு வந்திருக்கிறோம். இந்த வாரமும் அடுத்த வாரமும்தான் இந்த தொடரின் ஹைலைட்டான இரண்டு விடயங்கள் இடம்பெறுகிறது.

வடக்கு தேர்தல் என்பது பெரும்பாலானவர்களிற்கு அதிக முக்கியத்துவம் பெறுவது யார் முதலமைச்சர் வேட்பாளர் என்ற எகிறும் எதிர்பார்ப்பு ஒன்றினாலேயே. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார்? க.வி.விக்னேஸ்வரனா? மாவை. சேனாதிராசாவா? இவர்களை தவிர்த்த இன்னொருவரா?

கூட்டமைப்பில் இடமில்லையென்றால், விக்னேஸ்வரன் என்ன செய்வார்? தனி அணி அமைப்பாரா?



அப்படி அவர் தனி அமைத்தால் யாரெல்லாம் கூட்டு வைப்பார்கள்? தனிக்கட்சியாக களமிறங்குவாரா? வேறு கட்சியில் இணைந்து போட்டியிடுவாரா?

இப்படி விடைதெரியாத விக்கிரமாதித்தன் வேதாளம் கதையாக இருப்பவர்கள்தான் அனேகர்.

இந்த வாரமும் அடுத்த வாரமும் ஹைலைட்டான பகுதிகள் என்று குறிப்பிட்டுள்ளோம். ஆம்... தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு அணியாக வடக்கு தேர்தலை சந்திக்குமா, இரண்டு அணியாக சந்திக்குமா, இந்த அணிகளின் வெற்றி வாய்ப்பு என்ன என்பதை இந்த வாரமும் அடுத்த வாரமும் அலசலாம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எந்த கட்சியும்தான் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனால் கட்சிக்குள் ஓரளவு தீர்மானித்திருப்பார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள், அப்படியொரு வேட்பாளரை இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஆனால் சுவாரஸ்யம் என்னவென்றால் கூட்டமைப்பு தீர்மானிக்கவில்லையே தவிர, கூட்டமைப்பிற்குள் உள்ள கட்சிகள் மூன்றும் முதலமைச்சர் வேட்பாளரை தீர்மானித்து விட்டார்கள்!

இதுதான் கூட்டமைப்பின் வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் குழப்பத்திற்கு காரணம்!

கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் வேட்பாளரை தீர்மானித்து விட்டார்கள் என்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். "பத்திரிகைக்காரர்கள் கேட்டால் பொருத்தமான நேரத்தில் கட்சி மத்தியகுழுவை கூட்டி முடிவெடுப்போம் என்றுதானே எல்லா கட்சிக்காரர்களும் சொல்கிறார்கள்... வேட்பாளரை தீர்மானித்து விட்டதாக சொல்கிறீர்களே" என அப்பாவித்தனமாக யாரும் கேட்கலாம்.

இந்த மத்தியகுழு இருக்கிறதே, பல விடயங்களில் கட்சிகள் தப்பித்துக் கொள்ள உள்ள நல்ல கவசம். அதற்கு மேல் அதற்கு அர்த்தம் கிடையாது. மத்தியகுழுவை கூட்டுவதாக கட்சிகள் சொன்னால், அந்த விடயத்தில் இருந்து அவர்கள் தப்பிக்கிறார்கள் என்று அர்த்தம்!

தமிழரசுக்கட்சி தனது முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராசாதான் என்பதை ஓரளவு வெளிப்படையாக சொல்ல தொடங்கி விட்டது. கடந்த மூன்று மாதங்களாக மாவை சேனாதிராசாவின் நடவடிக்கைகளை கவனித்தாலே, அவர் முதலமைச்சர் வேட்பாளராக தன்னை தயார்படுத்துகிறார் என்பது புரியும். மாவையும் ஓரளவு பட்டும்படாமலும், தான் முதலமைச்சர் வேட்பாளர் களத்தில் இருக்கிறேன் என்பதை சொல்லிவிட்டார். அதனால் தமிழரசுக்கட்சி களத்தில் அவ்வளவு சிக்கலில்லை.

ஆனால் [illegible] கட்சிகளும் [illegible]

அறிவிக்கவில்லை. அவர்களின் ஆதரவு தமக்கு கிடைக்கும், கடைசிநேரத்தில் இவர்தான் வேட்பாளர் என அறிவித்துவிட்டால் போதுமென நினைக்கிறார்கள். இந்த இடத்தில்தான் ஒரு "ருவிஸ்ற்" காத்திருக்கிறது!

அதென்ன ருவிஸ்ற்?

முதலாவது தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளக நிலைமை முன்னரை விட வேறுபட்டது. முன்னர் தமிழரசுக் கட்சி ஒரு வேட்பாளரை தீர்மானித்து விட்டு, பத்திரிகைகளிற்கு அறிவித்து, மற்ற கட்சிகள் பத்திரிகைகளில் பார்த்துதான் விடயத்தை அறிந்து கொண்டாலும் எந்த பிரச்சனையும் கிடையாது. எவ்வளவு அதிருப்தியென்றாலும், கூட்டமைப்பிலிருந்து யாரும் வெளியில் செல்ல முடியாது. போனால் கதை காலி!

இப்பொழுது அப்படியல்ல நிலைமை. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் ஒரு அரசியல் அணி உருவாகும் வாய்ப்பான நிலைமை தென்படுகிறது. கூட்டமைப்பிலிருந்து யாரும் வெளியில் போகலாமென முன்னரை போல தமிழரசுக்கட்சி முன்னரைப் போல கறாராக நடந்து கொள்ள முடியாத நிலைமையுள்ளது. தமிழரசுக்கட்சி தனித்து தேர்தலை சந்திக்கலாமென, கட்சியின் ஒருதரப்பில் அபிப்பிராயமுள்ள போதும், சம்பந்தன், மாவை போன்றவர்கள் கூட்டமைப்பு தொடர்வதையே விரும்புகிறார்கள். மாகாணசபை தேர்தலில் சந்தேகத்திற்கிடமில்லாத வெற்றியை பெறுவதென்றால் கூட்டமைப்பாக தொடர வேண்டுமென அவர்கள் நினைக்கிறார்கள்.

கூட்டமைப்பு முகாமிற்குள் இருந்தாலும், முதலமைச்சர் வேட்பாளர் தமிழரசுக்கட்சிக்குரியது, [illegible] வேட்பாளரை [illegible]டுமென கூட்டமைப்பின் மற்றைய இரண்டு பங்காளிகள் சொல்லி வந்தாலும், முதலமைச்சர் வேட்பாளர் குறித்த தீர்மானமொன்று அவர்களிடம் உள்ளது. அனேகமாக அது தமிழரசுக்கட்சியின் முடிவிற்கு மாறானது!

இரண்டு கட்சிகளின் பிரமுகர்களும் பகிரங்கமாக பேசி வருவதை நுணுக்கமாக கவனித்தால் அது புரியும். மாவை சேனாதிராசாதான் நமது வேட்பாளர் என தமிழரசுக்கட்சி ஓரளவிற்கு அறுதியாக முடிவுசெய்து விட்டது. கூட்டமைப்பின் அனைத்து கட்சிகளும் கேட்டுக்கொண்டால் போட்டியிட தயாரென மாவையும் கூறிவிட்டார். பங்காளிக்கட்சிகள் தன்னை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையில், முதலமைச்சர் வேட்பாளராக செயற்படவும் ஆரம்பித்து விட்டார். ஆனால் சூட்சுமமான விடயமொன்றை பலரும் கவனிக்கவில்லை.

மாவை முதலமைச்சர் வேட்பாளர் என்பது உத்தியோகபற்றற்ற முறையில் அறிவிக்கப்பட்டாலும், அதை ஆதரிக்கிறோம் என பங்காளிகள் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. அல்லது, மாவையை முதலமைச்சர் வேட்பாளராக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை. பொருத்தமான, வெற்றி வேட்பாளரை தமிழரசுக்கட்சி முதலில் பிரேரிக்கட்டும் என்றுதான் சொல்லி வருகிறார்கள்.

இந்த இடத்தில்தான் ருவிஸ்ற் காத்திருக்கிறது.

அதாவது முதலமைச்சர் வேட்பாளரல் ஏற்படும் குழப்பங்களெதிலும் கையை நனைக்காமல், பாதுகாப்பானது என அவர்கள் உணரும் கூட்டணியை நோக்கி நகர்வதற்கான உத்தியாகவும் அது இருக்கலாம்.

மாவை சேனாதிராசாதான் முதலமைச்சர் வேட்பாளர் என தமிழரசுக்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி ஒரு முடிவை அறிவித்தால், வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிச்சயம் தனியான அணியொன்றை அறிவிப்பார். இப்படி இரண்டு முதலமைச்சர் வேட்பாளர்கள் உருவாகுவது தமிழ் தேசிய வாக்குகளை சிதறடிக்கும். இதையே ஒரு காரணமாக சொல்லி, சாதகமான கூட்டணிக்கு நாகரிகமாக நகர்ந்துவிட பங்காளிகளிற்கு வாய்ப்புள்ளது.



எனினும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் இதுவரை பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லையென்பதையும் கவனிக்க வேண்டும். அந்த முடிவை எடுக்க வேண்டியவர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். கட்சி, சமகால அரசியல், கள யதார்த்தம் எல்லாவற்றையும் கணக்கிட்டு ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைமை சம்பந்தனிற்கு உண்டு. அவர் அதை கச்சிதமாக செய்ய கூடியவர். 2013 வடமாகாணசபை தேர்தலில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் எல்லாமே விக்னேஸ்வரனை ரசிக்கவில்லை. ஆனால், அவரை அழைத்து வந்து ஒரு அலையை ஏற்படுத்தினார்.



இப்பொழுதும் அப்படியான ஏதாவது ஒரு வித்தியாசமான முயற்சியை அவர் செய்ய வேண்டிய நெருக்கடியில் இருக்கிறார். உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அவ்வளவு திருப்தியாக இல்லை. ஆபத்தானளவிற்கு உள்ளூரில் தேசிய கட்சிகளின் வாக்கு வங்கி அதிகரிக்கிறது. தேசிய கட்சியில் அங்கம் வகிப்பவர்கள் எல்லோரும் விடுதலைப்புலிகளின் பாடல்களை ஒலிக்கவிட்டபடி, தமிழ் தேசிய கூட்டமைப்பினரை துரோகிகள் என கூறும் வேடிக்கையான காலமாற்றமெல்லாம் உருவாகி வருகிறது.

உள்ளூராட்சிசபைகளை போல, "கலகலப்பான" சபையாக வடமாகாணசபையை உருவாக்கினால், தமிழ் தேசிய அரசியல் நிச்சயம் பலவீனப்பட்டு செல்லும். பலமான வடமாகாணசபையை தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்க தவறினால், கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கான முதலடியாக அமையும் அபாயமுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அண்மைய அதிருப்தி வாக்குகள் பிரிந்து இரண்டு இடங்களிற்கு சென்றிருக்கிறது. முதலாவது தமிழ் தேசிய நிலைப்பாட்டிலேயே நின்று, தமிழ் தேசிய மக்கள் முன்னணியிடம் சென்றிருக்கிறது. அடுத்தது இது உள்ளூர் அபிவிருத்தியுடன் தொடர்புடையதுதானே என்ற சுயசமாதானத்துடன் தேசிய, அபிவிருத்தி சுலோக அரசியலை ஆதரித்துள்ளது. இந்த வாக்குகளை மீள திரும்பி வர வைக்க வேண்டும்.

விக்னேஸ்வரன் மூலம் வெளியில் ஒரு அதிருப்தி அணி உருவாக கூடாது, அப்படியொரு அணி உருவாகும் நிலைமையிருந்தால்தான் கூட்டமைப்பிற்குள் இருக்கும் கட்சிகள் வெளியில் செல்லும் அபாயமிருக்கிறது. விக்னேஸ்வரன் வெளியில் செல்லாதவரை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியை பெரிய சக்தியாக உருவெடுக்கவிடாமல் கூட்டமைப்பால் தடுக்க முடியும். இதையெல்லாம் யோசித்து அனைத்தையும் சமாளிக்க சுலபமான வழியாக விக்னேஸ்வரனையே முதலமைச்சர் வேட்பாளராக்கும் ஒரு முடிவிற்கு சம்பந்தர் வரவும் வாய்ப்புண்டு.

தற்போதைய தமிழ் அரசியல் தலைவர்களில் நீண்ட போராட்ட வரலாறுடையவர் மாவை சேனாதிராசா. சிறிய வயதிலிருந்தே இன்றைய முதலமைச்சர் நோக்கம் எதுவும் இல்லாமல் போராட்ட வரலாற்றில் வழிவந்தவர். அவருக்கான கௌரவத்தை வழங்க வேண்டுமென கட்சி நினைப்பதை போலவே, சம்பந்தன் நினைக்கவும் வாய்ப்புண்டு. மாவையை தவிர்ப்பதென்றால் தமிழரசுக்கட்சியின் விருப்பத்தை மீறிய முடிவிற்கு சம்பந்தன் போக வேண்டியதாக இருக்கும்.

இதுதான் கள யதார்த்தம். இரண்டு வேட்பாளர்களும் வேறுவேறு தளங்களிலிருந்தாலும், இருவருமே முதலமைச்சர் நாற்காலிக்கு தகுதியானவர்கள்தான். ஒருவர் மட்டும் உயர்ந்தவர், திறமைசாலியென்பது கிடையாது. ஆனால், இதில் தீர்மானம் மிக்கது வெகுஜன அபிப்பிராயம். சூழ்நிலைகளின் அடிப்படையில் அது மாற்றமடைந்து கொண்டிருக்கும். அதை சரியாக கணிப்பிட்டு, வேட்பாளரை தீர்மானிக்கவே வாய்ப்புள்ளது.

மாவை தன்னை விட பலமான வேட்பாளர் அல்லவென விக்னேஸ்வரன் கருதுவதாலேயே துணிந்து, இன்னொரு அணி முயற்சியில் இறங்கியுள்ளார். மாவை சேனாதிராசா களமிறங்கினால், எதிர்முகாமில் விக்னேஸ்வரன் இருப்பார். மாவையை வேட்பாளராக்குவதென்றால், விக்னேஸ்வரனை போட்டியிலிருந்து ஒதுங்க வைக்கும் இன்னொரு முயற்சியை செய்ய வேண்டிய தேவை சம்பந்தனிற்கு உள்ளது. அது எவ்வளவு சாத்தியமானதென்றும் தெரியவில்லை. மாவையும் இல்லை, விக்னேஸ்வரனும் இல்லையென்றால், அவர் நிச்சயம் விக்னேஸ்வரனை விட பலமானவராக இருக்க வேண்டும். மிகப்பெரிய கவர்ச்சிமிக்க தமிழ் ஆளுமையொன்று கிடைத்தாலே, கட்சிக்குள்ளும் அரசியல்களத்திலும் உள்ள சிக்கல்களை சமாளித்துக்கொள்ள சம்பந்தரிற்கு உள்ள இன்னொரு வாய்ப்பு. ஆனால் தமிழ் சூழலில் இப்போதைக்கு அப்படியான ஒருவர் இருப்பதாக தெரியவில்லை. ஆகவே, மாவை சேனாதிராசா அல்லது விக்னேஸ்வரன் என்ற இரண்டிலொரு முடிவையே சம்பந்தன் எடுக்க அதிக வாய்ப்புள்ளது. ●


# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “தேசிய கட்சிகள் பணம் கொடுத்தே வாக்கு வாங்கினார்கள்”

## த.சித்தார்த்தன் பரபரப்பு குற்றச்சாட்டு

நேர்காணல்: முரளி

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவக்கட்சிகளில்ஒன்றான புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நேர்காணல் இந்த வாரம் இடம்பெறுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள அவரது வீட்டில் அவரை சந்தித்தோம். தற்போதைய அரசியல் நிலவரங்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளக விவகாரங்கள் என பல விடயங்களையும் மனம் திறந்து பேசினார்.

**தீபம்: உள்ளூராட்சிசபை தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாங்கு வங்கியில் சிறிய சரிவு இருந்தது. ஒட்டுமொத்தமாக கூட்டமைப்பின் இந்த முடிவில் புளொட்டின் பெறுபேறுகள் எப்படியிருக்கிறது?**

**சித்தார்த்தன்:** மொத்தமாக 34 வீதமான வாக்குகளைத்தான் கூட்டமைப்பாக பெற்றிருக்கிறோம். எல்லோருடைய வாக்கும் சேர்ந்ததுதான் அது. யாழ் மாநகரசபையில் எமக்கு மூன்று வேட்பாளர்கள்தான் ஒதுக்கப்பட்டது. மூவரும் வெற்றி பெற்றார்கள். மொத்தமாக வடமாகாணத்தில் புளொட் வேட்பாளர்கள் 66 பேர் உள்ளூராட்சிசபைகளிற்கு தெரிவாகியுள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பின் மற்ற கட்சிகளில் போட்டியிட்ட வேட்பாளர்களே எங்களுடைய வேட்பாளர்களிற்கு எதிராக பிரச்சாரம் செய்தார்கள். எங்கள் வேட்பாளர்களை தோற்கடிக்க வேண்டுமென கடுமையாக வேலை செய்தார்கள். உதாரணத்திற்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் நடந்த தவிசாளர் தெரிவே அதற்கு சான்று. இந்த பிரதேசசபை தவிசாளரை நாங்கள் நியமிப்பதென தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் முடிவெடுக்கப்பட்டிருந்த போதும், அதை மீறி தமிழரசுக்கட்சியை சேர்ந்த ஒருவர் தவிசாளர் பதவிக்கு போட்டியிட்டார். தவிசாளர பதவிக்கு அவர் போட்டியிடுவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு, அவருக்கு சாதகமான வேட்பாளர்கள் வெற்றியீட்ட வேண்டுமென்பதற்காக, எமது வேட்பாளர்களிற்கு எதிராகவும் வேலை செய்தார்கள்.

தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள், கூட்டமைப்பின் முடிவை மீறி செயற்பட்டார்கள். இப்படியான காலைவாருதல்களை கடந்து, எமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் கணிசமானவற்றை வென்றிருக்கிறோம்.

கட்சியின் முடிவை மீறி செயற்பட்டவர்கள் மீது தமிழரசுக்கட்சி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை கவனித்துக் கொண்டிருக்கிறோம். இப்படி காலைவாரும் நடவடிக்கைகளிற்கு தமிழரசுக்கட்சி ஆதரவளிக்குமென்றால் கூட்டமைப்பின் ஒற்றுமை நிலைப்பது கடினம். கூட்டமைப்பும் பலவீனப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்.

**தீபம்: உள்ளூராட்சிசபை ஆசனப் பங்கீட்டில் ரெலோ பெற்ற ஆசனங்களிற்கும், புளொட் பெற்ற ஆசனங்களிற்குமிடையில் நிறைய வித்தியாசமிருக்கிறது. உங்கள் கட்சிக்கு போதிய ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லையென்ற அபிப்பிராயங்கள் எதுவும் கட்சிக்குள் உள்ளதா?**

**சித்தார்த்தன்:** கட்சி மட்டத்தில் அப்படியொரு அதிருப்தி இருப்பது உண்மைதான். ஆனால், என்னைப் பொறுத்தவரையும் எண்ணிக்கைக்காக சும்மா கேட்டு வாங்குவதற்கு நான் தயாராக இருக்கவில்லை. இப்பொழுதும் அதற்கு தயாராக இல்லை. நாங்கள் நியமிக்கும் வேட்பாளர்கள் வெற்றியடைய வேண்டும். ஒரு சபையில் எத்தனை வட்டாரங்களில் வெற்றியடையக்கூடிய வேட்பாளர்கள் எங்களிடம் இருக்கிறார்கள் என்பதை கணக்கிட்டுத்தான், ஆசனங்களை கேட்டோம். ஒரு சபையில் இத்தனை வீதமான ஆசனங்கள் எமக்கு தேவையென்ற விதத்தில் இதை அணுகவில்லை. கட்சிரீதியாக சில அதிருப்திகள் இருக்கிறது. ஆனால் தனிப்பட்டரீதியில் எனக்கு அப்படியான அதிருப்திகள் இல்லை. சில சபைகளில் இன்னும் ஓரிரண்டு ஆசனங்கள் கிடைத்திருந்தால், அவற்றையும் வென்றிருக்கலாம்.

கூட்டமைப்பை விட்டு வெளியேறப் போகிறோம் என ரெலோ ஒரு பயமுறுத்தலை செய்ததால், அவர்களிற்கு அதிகமான ஆசனங்கள் வழங்கப்பட்டதோ தெரியவில்லை. தவிசாளர் பதவிகளை பங்கிட்டதில் அதிகமாக வழங்கியிருக்கலாம். ஆனால் மாகாணசபை, நாடாளுமன்ற தேர்தலில் எனக்கு அதிக வாக்கு கிடைத்த சில சபைகளின் தவிசாளர் பதவிகளை கேட்டோம். அதையும் ரெலோவுடன்தான் பங்கிட்டார்கள். அதிலும் பெரிய அதிருப்தியில்லை. ஒட்டுமொத்தமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றிபெற வேண்டுமென்[illegible] அதில் சிறிய [illegible] இம்முறை வாக்கு குறைந்ததற்கு நிச்சயமாக நாங்கள் அல்ல காரணம். அதை நான் அடித்து கூறுவேன்.

**தீபம்: கடந்த மூன்றாண்டுகளில் தேசிய கட்சிகளின் வாக்கு வங்கி வடக்கு கிழக்கில் அதிகரித்து வருகிறது. மக்கள் தீவிர அரசியல் நிலைப்பாட்டில் இருந்து மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தப்படுமா?**

**சித்தார்த்தன்:** உள்ளராட்சிசபை தேர்தலில் மக்கள் தேசிய கட்சிக்கு வாக்களித்துள்ளனர்தான். அதற்கு பல காரணங்கள் உள்ளன. வேலை வாய்ப்பை பற்றி மக்களிற்கு சொல்லப்பட்டது. கையூட்டு கொடுக்கப்பட்டது. உள்ளூராட்சி தேர்தலிற்கு முன்னர் இங்குள்ள ஐ.தே.கவின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு பெருந்தொகை அரச பணம் பிரதமர் அலுவலகத்தால் ஒதுக்கப்பட்டது. பல வேலைத்திட்டங்களிற்கு அந்த பணத்தை ஒதுக்கினார்கள். ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி இரண்டுமே,இங்குதமதுவாக்குபலத்தை அதிகரிக்கவேண்டுமென்பதில்குறியாக இருக்கிறார்கள். அதற்கான எல்லா வேலைகளையும் செய்கிறார்கள்.

அடுத்த காரணம், தமிழ் தேசிய கூட்டமைப்பில் மக்களிற்கு ஏற்படக்கூடிய அவநம்பிக்கை. அரசியல் தீர்வு ஏற்படுமென்பதில் நம்பிக்கையிழந்து விட்டார்கள். அதுதான் இல்லையென்றால், வாழ்வாதார பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் நாங்கள் தவறுகிறோம். நாங்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையென மக்கள் நினைக்கிறார்கள். அதில் உண்மையுமுள்ளது. இப்பொழுது தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களால் முடிந்தளவில் எதையாவது கேட்டுப் பெறுவது வேறு. அது சிறியளவானது. கட்சியாக சில விடயங்களை நாங்கள் வலியுறுத்தியிருக்க வேண்டும். உதாரணமாக இங்குள்ள சாதாரண சிற்றூழியர் நியமனங்களும் தென்னிலங்கையர்களிற்குத்தான் வழங்கப்படுகிறது. இதைப்பற்றி ஜனாதிபதி, பிரதமரிடம் பலமுறை முறையிட்டுள்ளோம். அவ்வளவுதான். அதற்குமேல் இப்படியாக நியமனங்களை நிறுத்த சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை. அது மக்களிடம் அதிருப்தியாக உள்ளது. அரசுக்கு தேவையான நேரத்தில் எங்கள் வாக்குகளையும் கொடுக்கிறோம். இதனால், நாம் அரசுடன் நிற்பதாக மக்கள் நினைக்கிறார்கள். அரசுடன் நிற்பவர்களால் அன்றாட பிரச்சனைகளை ஏன் தீர்க்க முடியாதுள்ளதென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

**தீபம்: தேசியகட்சிகளின் வாக்கு வங்கி அதிகரிப்பை தடுக்க, தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஏதாவது திட்டங்களை வகுத்திருக்கிறதா?**

**சித்தார்த்தன்:** எனக்கு தெரிந்த வரையில் அப்படியெதுவும் நடக்கவில்லை. உள்ளூராட்சி தேர்தலின்

தொடர்ச்சி அடுத்த பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு சரிவுக்கு என்ன காரணம், தேசியக்கட்சிகளின் வளர்ச்சியை எப்படி தடுக்கலாமென கூட்டமைப் பாக இருந்து ஆராயவில்லை. சில வேளைகளில் தனித்தனிக்கட்சிகளாக அப்படி ஆலோசனை நடத்தியிருக்க லாம். தமிழரசுக்கட்சி ஆராய்ந்ததாக சொன்னார்கள். பின்னர் என்ன நடந்தது தெரியவில்லை. கூட்ட மைப்பின் வாக்கு சரிவிற்கு, நாங்கள் காரணமல்லவென்பது எமக்கு நன்றாக தெரியும். ஆகவே, கட்சியாக நாங்கள் ஆராய வேண்டிய தேவை யிருக்கவில்லை.

**தீபம்: மக்களின் அதிருப்தியிருக் கிறதாக சொன்னீர்கள். மக்களின் இந்த மனநிலையை, கூட்டமைப்பாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறதா? பேசப்பட்டதா?**

**சித்தார்த்தன்:** கூட்டமைப்பாக முழுமையாக புரிந்ததை போல எனக்கு தெரியவில்லை. பேசும்போது, எல்லோருமே வாக்கு சரிவைப்பற்றி பேசுகிறார்கள். ஆனால் பல இடங்களிற்கும் செல்லும்போதும் மக்கள் அதைத்தான் சொல்கிறார்கள். இது வாக்காக மாறுமா இல்லையா என்பதை அப்பொழுதுதான் பார்க்க வேண்டும்.

விக்னேஸ்வரன் தனி அணியாக போவது தமிழ் தேசிய கூட்டமைப் பிற்கோ, தமிழ் மக்களிற்கோ, தமிழ் அரசியலிற்கோ நல்லதாக எனக்குப்படவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த விடயத்தை தங்களிற்குள் சரியாக ஆராய்ந்து, தமிழ் மக்களை கூறு போடாமல், தமிழ் தேசிய அடிப்படையில் செயற் படுபவர்களையெல்லாம் அரவ ணைத்து ஒருவலுவான கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். இன்றைய காலத்தின் கட்டாயம் அதுதான். இதை திரு.சம்பந்தன் அவர்களால்தான் செய்ய முடியும். அவர் அதை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

**தீபம்: ஆயுதவழியில் போராடிய அமைப்புக்களை ஒன்றிணைக்க முயற்சிப்பதாக அண்மையில் முயற்சிகளின் எதிர்காலம் எப்படி யிருக்கும்?**

**சித்தார்த்தன்:** தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்ககூடிய, மக்களின் அபிலாசையை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு எட்டப்படுமென நான் நம்பவில்லை. புதிய அரசாங்கம் அமைந்தபோது, புதிய அரசியலமைப் பிற்கான சாத்தியக்கூறு இருப்பதாக பலரும் நம்பினார்கள். இரண்டு கட்சிகள் இணைந்திருந்தது, நாடு முழுவதும் புதிய அரசியலமைப்பை விரும்பியது, மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்து ஒதுங்கியிருந்தது என பல காரணங்களால் அந்த நம்பிக்கையிருந்தது. ஆனால் இன்று மஹிந்த பலமான சக்தியாக உருவாக்கப்பட்டு விட்டார். அவரை பார்த்து பிரதான இரண்டு கட்சிகளும் அச்சப்படுகிறார்கள். இதனால் நிச்சயமாக அந்த அரசில் புதிய அரசியலமைப்பு வருமென நான் நம்பவில்லை. பொதுவாகவே சிங்கள தலைவர்கள் அதிகார பரவலாக்கலை

**சித்தார்த்தன்:** கடந்த 70 வருடங்க ளாக தமிழ் மக்கள் அரசியல் உரிமையை கேட்டு சாத்வீக , ஆயுத வழிகளில் போராடிக் கொண்டிருக் கிறார்கள். இலங்கை அரச தலைவர் களும், அரசியல்வாதிகளும் அதிகார பரவலாக்கலிற்கு எதிராக செயற்படுகிறார்கள். இதனால் நியாயமான அரசியல் தீர்வை பெறுவது கடினமானது. இப்போது எடுக்கப்படும் முயற்சிகளும் பின்னடைவான நிலையில் இருக்கின்றன. இன்றைய முயற்சி, சர்வதேச அத்தங்களின் மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு இந்த முயற்சியை குழப்பினால் சர்வதேச அழுத்தங்களை பிரயோகித்து தமிழ்மக்களின் விடுதலைக்கான இந்த பாதையில் தொடர்ந்து செயற்பட முடியும். ஆனால் இதில் மிக முக்கியமான விசயம் தமிழ்மக்களின் ஒற்றுமை. ஒற்றுமையாக இருந்தால் மாத்திரமே அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளலாம். மக்களை ஒற்றுமைப்படுத்தவும், சர்வதேச




கூட்டமைப்பாக அதை புரிந்திருந்தால், அவற்றை தடுப்பதற்கான வேலைகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை.

ஒவ்வொரு கட்சியும் மாறிமாறி குற்றம் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையான குறைபாடு என்னவென்பதை மூன்று கட்சிகளும் இருந்து ஆராய்ந்து, குறைகள் இருப்ப வர்கள் அதை திருத்த முயற்சிக்க, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**தீபம்: அடுத்த வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் மாவை சேனாதிராசா, விக்னேஸ் வரன் என்ற இரண்டு பெயர்கள் இருந்தால் உங்கள் தெரிவு யார்?**

**சித்தார்த்தன்:** எங்கள் கட்சி இன்னும் உறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை. சரியான நேரத்தில் கட்சி கூடி, முடிவொன்று எடுக்கும்.

**தீபம்: ஒருவேளை விக்னேஸ்வரன் தனி அணியாக செயற்பட்டால் அந்த அணியில் நீங்கள் இணைய வாய்ப்புள்ளதா?**

**சித்தார்த்தன்:** வடமாகாணத்தில் முக்கியமான யாழ் மாவட்டத்தில் விக்னேஸ்வரனிற்கு அதிகமான ஆதரவு இருப்பதை உணரக்கூடியதாக உள்ளது. ரெலோ கூறியிருக்கிறது. அந்த முயற்சிகள் எந்தளவில் உள்ளன, அதற்கு வாய்ப்புள்ளதா?

**சித்தார்த்தன்:** ஆயுத வழியில் போராடிய அமைப்புக்கள் என்றால் பல அமைப்புக்கள் இருக்கின்றன. அனைத்து அமைப்புக்களுடனும் பேசப் போகிறார்களா, அல்லது கருத் தொருமித்தவர்களுடன் பேசப் போகிறார்களா என்பது தெரியவில்லை. கூட்டமைப்பில் இருந்த மூன்று அமைப்புக்களிற்குள்ளேயே பல கருத்து வேறுபாடு உள்ளது. தனிப் பட்ட விமர்சனங்கள் உள்ளன. ஒருவரையொருவர் தாக்குவது நடக் கிறது. இதெல்லாம் முதலில் நிறுத்தப் பட வேண்டும். கண்ணாடி வீட்டில் இருந்தபடி கல்லெறியும் வேலைகளை யெல்லாம் நிறுத்தி விட்டு, உண்மை யான புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். முக்கியமான விசயம் கூட்டமைப்பிலிருந்து விலகி, இயக் கங்கள் ஒன்று சேர்வதாக அர்த்தப் படுத்தப்படக்கூடாது. தேர்தலை நோக்கியதாக இது இருக்ககூடாது.

இதுபற்றி ரெலோ இதுவரை எங்களுடன் பேசவில்லை. பேசினால் அதை நாங்கள் பரிசீலிப்போம்.

**தீபம்: புதிய அரசியலமைப்பு** அச்சத்துடன்தான் பார்க்கிறார்கள். இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டும், இனப்பிரச்சனை நீடித்து செல்வதற்கு சிங்கள தலைவர்களிடம் உள்ள இந்த அச்சம்தான் காரணம். இது தீரும்வரை இனப்பிரச்சனை தீர்க்கப்படும் வாய்ப்பிருப்பதாக நான் நம்பவில்லை. அதிகார பரவலாக்கலால் சிங்கள மக்களிற்கு எந்த பாதிப்புமில்லை, நாடு முழுவதற்கும் அது நன்மையான தென்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளத்தக்க பிரசாரங்கள் செய்யப் படாததும் ஒரு காரணம். சந்திரிகா வின் தீர்வு முயற்சிக்கு முன்னதாக மட்டும் மங்கள சமரவீர தலைமை யில் வெண்தாமரை இயக்கம் ஆரம்பிக் கப்பட்டது. எவ்வளவோ எதிர்ப்பின் மத்தியிலும் தீர்வு முயற்சியை நாடாளுமன்றத்திற்கு அவர் கொண்டு வந்தார். அது பெரிய விடயம். ஐ.தே.க அன்று கடுமையாக எதிர்த்து, அந்த முயற்சியை குழப்பியது. சர்வதேச அழுத்தம், உள்நாட்டில் அதற்கான வாய்ப்பை உருவாக்குவது ஆகியவற்றின் மூலம்தான் அதை சாத்தியப்படுத்தலாம்.


**தீபம்: ஒருவேளை புதிய அரசியலமைப்பு முயற்சிகள் வெற்றியடையவில்லையென்றால் அடுத்தது என்ன?**

அழுத்தங்களை தொடர்ந்து இலங்கை மீது பிரயோகிப்பதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும். அத்துடன், அதிகார பரவலாக்கள் தொடர்பாக சிங்கள மக்களிடம் உள்ள அச்சத்தையும் போக்க வேண்டும். இந்த மூன்று முயற்சியும் சமாந்தரமாக வெற்றிகரமாக நடந்தால், நியாயமான அரசியல் தீர்வை பெறலாம்.

**தீபம்: தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பான சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. தமக்கு வாக்களிக் கப்பட்டதாக ரெலோ சொல்கிறது. தமிழரசுக்கட்சி இல்லையென்கிறது. உண்மையில் என்ன நடந்தது? கூட்டமைப்பாக கூடி ஏதாவது முடிவுகள் எடுத்திருந்தீர்களா?**

**சித்தார்த்தன்:** தமிழரசுக்கட்சிக்கும் ரெலோவிற்குமிடையில் பல கலந்து ரையாடல்கள் நடந்து வருவதை பத்திரிகைகள் வழியாக அறிந்து கொள் கிறோம். அப்படியான தனியான சந்திப்புக்கள் எதிலாவது தமிழரசுக் கட்சி ஏதும் வாக்களித்ததா என்பது தெரியவில்லை. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பாக தேர்தலிற்கு முன்னரோ, பின்னரோ தேசியப் பட்டியல் தொடர்பாக எந்த கலந்துரையாடலும் நடக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# காரில் வந்திறங்கி ராஜிவ்... பதற்றத்துடன் வெளியேறிய நளினி!

## ராஜிவ் காந்தி கொலை புலிகள் சிக்கிய கதை 41

கே.ராகோத்தமன்

ஸ்ரீபெரும்புதூரில் இறங்கியதும் அவர்கள் முதலில் ஒரு சாலையோரப் பூக்கடைக்குச் சென்றார்கள். தணு தனக்குக் கனகாம்பரம் வேண்டும் என்று சொல்லி, வாங்கி வைத்துக்கொண்டார். நளினியும் சுபாவும் மல்லிப்பூ வாங்கிக்கொண்டார்கள்.

முதலில் சாப்பிட்டு விடலாம் என்று சொல்லி, சிவராசன் அவர்களை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். அது ஒரு முனியாண்டி விலாஸ்.

ஏனோ அந்த ஹோட்டல் வேண்டாம் என்று அனைவருமே நினைக்க, அக்கம்பக்கத்தில் விசாரித்து இன்னொரு முனியாண்டி விலாஸ் அதே ஊரில் இருப்பதைக் கேள்விப்பட்டு அங்கே சென்றார்கள். திருப்தியாக பிரியாணி சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டு முடித்ததும் பொதுக் கூட்டம் நடைபெறவிருந்த மைதானத்தைநோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள காந்தி சிலையருகே வந்தபோது சற்று நேரம் நின்றார்கள்.

யார் யார் என்ன செய்யவேண்டும் என்று இறுதியாக ஒருமுறை பேசிக்கொண்டார்கள்.

தணுவின் சல்வார் கம்மீஸ் ஆடைக்குள் வெடிகுண்டு பொருத்தப் பட்டிருந்தது. இரண்டு விசைகள் கொண்ட வெடிகுண்டு. மாலை போடத் தயாராகும்போது அவர் முதல் விசையை அழுத்திவிட வேண்டும். குண்டு வெடிக்கத் தயாராகிவிடும்.

அது தயாராகிவிட்டது தெரிந்ததும் தாமதிக்காமல் குனிந்து, அடுத்த விசையை அழுத்திவிட வேண்டும். தணு தன் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக்கொண்டார். 'நான் தான் பொருத்திவிட்டேன்' என்று சுபா சொன்னார்.

அனைவருமே பதற்றமுடன் இருந்தார்கள். ஹரி பாபு, தணு ராஜிவுக்கு மாலை இடுவதையும் குண்டு வெடிப்பதையும் போட்டோ எடுக்க வேண்டும்.

தணு, ராஜிவை நெருங்கும் கணத்துக்கு முன்வரை அவரையும் சுபாவையும் அடைகாக்க வேண்டிய பொறுப்பு நளினியுடையது. அவ்வண்ணமே, குண்டு வெடிப்பு நிகழ்ந்தவுடன் சுபாவை பத்திரமாகக் கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி வெளியே அழைத்து வரவேண்டியதும் நளினியின் பொறுப்பு.

எப்படியும் களேபரமாகும். அனைவரும் சிதறி ஓடுவார்கள். அந்த இடைவெளியில் தப்பித்து விட வேண்டும்.

இந்திரா காந்தி சிலை அருகே பத்து நிமிடங்கள் நளினியும் சுபாவும் காத்திருக்க வேண்டும். சிவராசன் அங்கே வந்துவிடுவார்.

ஹரி பாபுவும் உடன் வந்துவிடுவார். பிறகு நால்வரும் தப்பித்துவிடலாம். ஒருவேளை சிவராசன் வரத் தாமதமாகிவிட்டால், மேற்கொண்டு காத்திருக்காமல் மற்றவர்கள் ஒன்றாகத் தப்பிச்சென்று விட வேண்டும் என்பது திட்டம்.

அந்த இடத்தில், அந்தச் சதித்திட்டத்தில் தாங்கள் ஐந்து பேர் மட்டுமே பங்குகொண்டிருப்பதாக நளினி நினைத்தார்.

ஆனால் ஆறாவதாகவும் ஒரு நபர் அங்கே இருந்த விஷயம் அவருக்கு மட்டுமல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை முழுவதுமாக முடிகிறவரை சி.பி.ஐக்குக் கூடத் தெரியாது!

இந்திரா காந்தி சிலையருகே நின்று பேசிவிட்டு அனைவரும் பொதுக்கூட்ட மைதானத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஹரி பாபுவும் சிவராசனும் தனித்தனியே மேடையை நோக்கிப் போக, சுபா, தணு, நளினி மூவரும் பெண்கள் பகுதியில் சென்று அமர்ந்துகொண்டார்கள்.

மேடையில் சங்கர் கணேஷ் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் சிவராசன் பெண்கள் பகுதிக்கு வந்து தணுவை மட்டும் அழைத்து அவர் கையில் அந்த பிரவுன் கவரைப் பிரித்து, சந்தன மாலையை எடுத்துக் கொடுத்தார். போய்விட்டார்.

மீண்டும் திரும்பி வந்து, தணுவை மட்டும் அழைத்துக்கொண்டு மேடையின் பின்புறமாகச் சென்றார். அங்கே ஹரி பாபுவும் நின்று கொண்டிருந்தார். ராஜிவ் காந்தி விழா மேடைக்கு வருகிற வழியெங்கும் கூட்டம் இருந்தது.

அவருக்காக விரிக்கப்பட்டிருந்த சிவப்புக் கம்பளப் பாதையின் இருபுறமும் கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் தணுவைச் சொருக சிவராசன் முயற்சி செய்தார்.

ஏனெனில், நேரம் மிகவும் ஆகிவிட்டபடியால் மேடையில் அனைவருக்கும் மாலை போட சந்தர்ப்பம் கிடைப்பது சிரமம் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

சொல்லி வைத்தமாதிரி லதா கண்ணன், அவரது பெண் கோகில வாணி (இவள் ராஜிவை வாழ்த்திக் கவிதை பாடக் காத்திருந்தவள்) ஆகியோரும் மகளிர் வரிசையில் நளினிக்குப் பின்னால் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து ராஜிவ் வரும் பாதையை நோக்கிச் சென்றார்கள்.

தணு சில நிமிடங்களில் அந்தச் சிறுமி கோகில வாணியை நட்பாக்கிக்கொண்டு அவளுடன் சகஜமாகப் பேசத் தொடங்கியிருந்தார். ராஜிவ் வரும் நேரம் நெருங்கி விட்டதென்றும் மாலையிடப் பெயர் கொடுத்திருப்பவர்கள் சிவப்புக் கம்பளப் பாதை ஓரம் வரிசையாக நிற்கும்படியும் மைக்கில் அறிவித்தார்கள்.

கூட்டம் இன்னும் முண்டியடித்தது. காவலர்கள் நிறையப் பேர் இருந்தாலும் யாரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவோ, ஒழுங்கு செய்யவோ விரும்பாத மாதிரி, அவர்களும் பொதுவில் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.

வாழப்பாடி ராமமூர்த்தி திடீரென்று மேடை ஏறினார். ராஜிவ் வருகிறார் என்கிற அவரது அறிவிப்புக்குக் கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்தது.

இசைக் குழுவினர் நகர ஆரம்பிக்க, ஹரி பாபு தன்னுடைய கமராவைத் தயார் செய்துகொண்டு தணு நின்றிருந்த இடத்துக்கு ஃபோகஸ் செய்துகொண்டிருந்தார்.'

மாலை போடும்போது ஒரு ஸ்னாப். கணப்பொழுதில் பின்வாங்கி, குண்டு வெடித்ததும் இன்னொரு ஸ்னாப். அவ்வளவுதான்.

இங்கே பெண்கள் வரிசையில் அமர்ந்திருந்த சுபாவும் நளினியும் பதற்றத்தின் உச்சத்தில் இருந்தார்கள். ராஜிவின் கார் வந்து நிற்பதைப் பார்த்ததுமே அவர்கள் எழுந்து கொண்டார்கள்.

ராஜிவ் சிவப்புக் கம்பளத்தின்மீது நடந்து வரும்போது நளினி சுபாவின் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டார்.

'வா' என்று சொல்லிவிட்டுக் கூட்டத்திலிருந்து வெளியே வந்து விறுவிறு வென்று நடக்கத் தொடங்கினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதி மேல் ஏன் இத்தனை காதல்?



✎ நித்திஷ்

'நரகாசூரன் இஸ் சேஃப்' என ஸ்டேட்டஸ் தட்டும் நவயுக இளைஞனும் தலையில் கட்சித் துண்டை கட்டியபடி அப்பாவின் தோளில் ஏறி அமர்ந்து, 'தாத்தா' என முழக்கமிடும் சிறுவனும் கூட்டத்திலிருப்பதுதான் 'கலைஞர்' ஸ்பெஷல். இத்தனை இளைஞர்களை எல்லாம் எப்படி அந்த கறுப்புக் கண்ணாடிக்காரர் ஈர்க்கிறார்?

காவிரி பாயும் பூமியில் ஒன்பது தசாப்தங்களுக்கு முன்னால் உதித்த சூரியன் இன்று காவேரியில் அஸ்தமனமாகியிருக்கிறது. அவர், கடவுள் மறுப்பாளர்தான். ஆனால், இயற்கையை மறுத்தவரில்லை. அதனால், இப்போது அதன்மடி புகுந்திருக்கிறார். 'அவருக்கு சுவாசக் கோளாறில்லை' என மருத்துவமனை நிர்வாகம் முதலில் தெரிவித்த தகவலில் ஒன்றும் பெரிய ஆச்சர்யமில்லை.


'எழுந்து வா தலைவா' என வளாகத்துக்கு வெளியே கமறும் குரலில் கண்ணீர் முழக்கமிடும் ஆயிரக் கணக்கான தொண்டர்களிடமிருந்தது அவருக்கான ஒக்ஸிஜன். திராவிட இயக்கக் கொள்கைகளை தெரு முனையில் நின்று வாசித்துக்காட்டும் வாசிப்பு இயக்கத்தைச் சேர்ந்த முதியவரோ, சைக்கிளில் ஸ்பீக்கர் கட்டி ஊர் ஊராகக் கொள்கைகளைக் கொண்டுசேர்த்த பெரியவரோ அந்தக் கூட்டத்தில் இருப்பதில் வியப்பில்லை. ஆனால், அங்கிருக்கும் தெரிந்தவர்களிடம் கேட்டு, 'நரகாசூரன் இஸ் சேஃப்' என ஸ்டேட்டஸ் தட்டும் நவயுக இளைஞனும் தலையில் கட்சித் துண்டை கட்டியபடி அப்பாவின் தோளில் ஏறி அமர்ந்து, 'தாத்தா' என முழக்கமிடும் சிறுவனும் கூட்டத்திலிருப்பதுதான் 'கலைஞர்' ஸ்பெஷல்.

இத்தனை இளைஞர்களை எல்லாம் எப்படி அந்த கறுப்புக் கண்ணாடிக்காரர் ஈர்க்கிறார்? இவர்கள் கற்றுக்கொள்ள அந்த மானமிகு சுயமரியாதைக்காரரிடம் என்ன இருக்கிறது?

நிறையவே இருக்கின்றன!

### தொலைநோக்கும் கண்கள்!

பசித்த புலிக்கு போரிடும் வேட்கை அதிகம். கருணாநிதி முதல்வராகப் பதவியேற்றபோது அதீத பசியில் இருந்தார். அந்தப் பசிதான், அவரை எப்போதும் தொலைநோக்குப் பார்வையில் சிந்திக்கவைத்தது. இன்று, மாநில அரசுகள் செல்லாக்காசாக் கப்படும் கொடுமையை முன்னரே அனுமானித்ததால்தான், 1969லேயே மத்திய மாநில அரசுகளின் அதிகாரங்களை ஆராயும் ராஜமன்னார் குழுவை அமைத்தார். 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற கோஷத்தை எழுப்பினார். அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பின்னர் ஆந்திரா, அஸ்ஸாம் மாநில அரசுகளும் வழிமொழிந்தன. இன்று அந்தப் பரிந்துரைகளின் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.



லோக்பால் குறித்து இன்று விவாதங்கள் நடக்கும் நிலையில், 1973லேயே குற்ற ஒழுங்கீனங்கள் சட்டம் உருவாக்கப்பட்டது. 2005ல் மத்திய அரசு கொண்டுவந்த சட்டத்துக்கு முன்னோடி, 1997ல் கருணாநிதி கொண்டுவந்த தகவல் அறியும் சட்டம்தான். கட்டாயக் கல்வித் திட்டத்தையும் எல்லாரையும் முந்திக்கொண்டு உருவாக்கியவர் கருணாநிதிதான். இந்தச் சட்டங்களின் முக்கியத்துவத்தைப் பொதுச் சமூகம் அறிந்துகொள்ளும் முன்னரே அதை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியவர் அவர். இன்றைய இளைய தலைமுறை கற்றுக்கொள்ளவேண்டிய முக்கியப் பாடம் இது!

### அங்கத நாயகன்!

ஒரு சின்னக் குழுவை வழிநடத்தும் டீம் லீடருக்கே அவ்வளவு மன அழுத்தம் இருக்கிறது. தேசிய அரசியலின் போக்கைத் தீர்மானிக்கும் தலைவருக்கு எவ்வளவு மன அழுத்தமிருக்கும்? ஆனால், தன்னையும் தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் சிரிப்பில் மூழ்கடிக்கச் செய்வதில் கலைஞருக்கு நிகர் அவர்தான். நாடே பதற்றத்திலிருந்த எமர்ஜென்சி காலகட்டத்தில், வீட்டுக்கு வரும் கருணாநிதியிடம் துண்டுத்தாளை நீட்டுகிறார் அவரின் மருமகன் அமிர்தம். ஆட்சியைக் கலைத்துவிட்டதற்கான குறிப்பு அது. 'அப்பாடா சஸ்பென்ஸ் முடிஞ்சதுய்யா!' என சிரித்தபடி மாடிப்படியேறுகிறார் கலைஞர்.

அதே காலகட்டத்தில் கலைஞர் எழுதும் எல்லாமுமே தணிக்கைக்கு உள்ளாக, 'விளக்கெண்ணெய் உடலுக்கு நல்லது, சூட்டைத் தணிக்கும்' என சமையல் குறிப்புகள் எழுதி வெறுப்பேற்றுவார்.

சட்டமன்றத்திலும் அவரின் காமெடி கவுன்ட்டர்கள் புகழ்பெற்றவை. ஒருமுறை காங்கிரஸ் கட்சியின் அனந்தநாயகியுடனான சட்டமன்ற உரையாடலில், 'நாங்கள் ஒரே ஒருநாள் மறியலில் ஈடுபட்டதற்கே முந்தைய காங்கிரஸ் அரசு மூன்று மாதம் சிறையில் அடைத்துவிட்டது' என்கிறார். உடனே அனந்தநாயகி, 'அப்படி சிறைக்குச் சென்றதால்தான் இன்று நீங்கள் வளர்ந்து இங்கே வந்து அமர்ந்திருக்கிறீர்கள்' என்கிறார். உடனே கருணாநிதி, 'அதனால்தான் இப்போது நாங்கள் எதிர்க் கட்சிகளை ஒரேநாளில் விடுதலை செய்துவிடுகிறோம்' என கவுன்ட்டர் கொடுக்க, மொத்த அரங்கமும் அதிர்கிறது.

சுயபகடி செய்துகொள்வதிலும் கருணாநிதி வித்தைக்காரர். தன் புகழ்பெற்ற 'ஓடினாள் ஓடினாள்' வசனத்தையே பூம்புகார் படத்தில் நாகேஷை பேச வைத்திருப்பார். நடிகர் நெப்போலியனுடன் வாக்கிங் சென்றபோது கருணாநிதிக்கு நடை தடுமாற, 'என்னய்யா தள்ளாத வயதுனு சொல்றாங்க, ஆனா தள்ளுதே!' என சிரித்துக்கொண்டார். நள்ளிரவுக் கைது குறித்துப் பேசும்போது, 'என்னைக் கைதுசெய்த காவலரின் பெயர் முருகேசன். அதனால்தான் கையைப் பிடித்து முறுக்கிவிட்டார்போல!' என்றார். தன் வாழ்க்கையை சிரிக்கச் சிரிக்க அனுபவித்த மனிதரை மரணத்தால் மட்டுமே வெல்ல முடிந்தது!


### நீளும் நட்புக் கரம்!

கழகத்துக்கும் கொள்கைக்கும் கொடுக்கும் அதேயளவு மரியாதையை நட்புக்கும் கொட்டிக்கொடுப்பார் கருணாநிதி. அவருக்கும் அன்பழகனுக்குமான ஆத்மார்த்த நட்பு உலகமறிந்தது. சட்சட்டென நட்பை முறித்துக்கொள்ளும் காலத்தில், 75 ஆண்டுக்காலம் ஃப்ரெண்ட்ஷிப்பை பேணிக்காப்பது எவ்வளவு பெரிய பொறுப்பு? ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளுள் இருவராக இருந்தவர்கள், நாவலரின் பிரிவுக்குப்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பின் 'ஈருடல் ஒருயிர்' நிலைக்கு வளர்கிறார்கள். அதனால்தான், இந்த வயதிலும் கருணாநிதியைப் பார்க்க துடிதுடித்தபடி ஓடிவருகிறார் அன்பழகன். அவரின் உடல் மொழியில்... முகத்தில் தெரியும் அந்தப் பதைபதைப்பைப் பார்க்கச் சகிக்காமலாவது கருணாநிதி மீண்டு வந்திருக்கலாம். யார் கண்டது? 'நீ பட்ட இன்னல்கள் போதும், போய் வா நண்பா' எனப் பேராசிரியரே மனதார வழியனுப்பிவைத்திருக்கக்கூடும்.

அரசியலைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் எதிரும் புதிருமானவர்கள். ஆனால், அவர்களிடையே ஒரு ஸ்பெஷல் பிணைப்பிருந்தது. கருணாநிதியைக் 'கலைஞர்' என்ற அடைமொழி இல்லாமல் அ.தி.மு.ககாரர்கள் அழைத்தாலும் எம்.ஜி.ஆருக்குப் பிடிக்காது. இதை எழுதும்போது எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் நானும் திட்டு வாங்கியிருக்கக்கூடும். கருணாநிதியைப் பாதித்த மிகச்சில மரணங்களில் எம்.ஜி.ஆரின் மரணமும் ஒன்று. இரவு முழுக்க கண்ணீர்விட்டபடி அவர் தளர்ந்து போய் அமர்ந்திருந்ததைக் கோபாலபுரமே பார்த்தது அன்று. 30 ஆண்டுகள் கழித்து மீண்டும் இருளில் மூழ்கியுள்ளது கோபாலபுரம். அதன் தனிமையைப் போக்குவாரில்லையே!

**விழிப்பாய் இருப்பாய் தமிழா!**

காலத்துக்கேற்றார்ப்போல தன்னை அப்டேட் செய்துகொள்ளும் தலைவர்கள் இந்தியாவிலேயே மிகச் சிலர்தான். அவர்களில் கருணாநிதியும் ஒருவர். 'அடுத்தடுத்த தலைமுறையினர் எப்படி யோசிக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதில் அவருக்குப் பேரார்வம். அதனால்தான், அப்போது கல்லூரி மாணவனாக இருந்த என்னை அருகில் வைத்துக்கொண்டார்' என நினைவுகூர்கிறார் துரைமுருகன். இப்போதிருக்கும் தலைமுறையைச் சென்றடைய ஃபேஸ்புக்கில் நுழைந்த முதல் தலைவரும் அவர்தான். 'என்னய்யா லைக்ஸ் கம்மியாகுது?' எனத் தன் டீமை டெக்னிக்கலாக விரட்டுவதை இரண்டு ஆண்டுகள் முன்புவரை செய்து வந்தார். சாட்டிலைட் சானல்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றுக்கான வெளியை உருவாக்கியது எனக் காலத்துக்கேற்ப தன்னைத்தானே செதுக்கிக்கொள்ளும் சிற்பி அவர். அதனால்தான் இறுதிவரை தேங்காமல் ஓடியது அந்த நெருப்பாறு.

**இகழ்வாரையும் தாங்கும் சூரியன்!**

'ச்சோ' என ஒற்றை உதட்டுச்சுழிப்பில் விளிம்புநிலை மனிதர்களை மற்றவர்களைப் போலவே அவரும் கடந்து போயிருக்கலாம்தான். ஆனால், சமூக நீதி பாடி ஆட்சி அமைத்தவராயிற்றே! சமூகத்தால் ஒதுக்கப்பட்ட சுடுகாட்டில் பணி செய்யும் சாம்பல் சூழ் மனிதர்களை சட்டவரையறைக்குள் கொண்டுவந்தார் கருணாநிதி. ஏளனப் பார்வையில் புறங்கையால் தள்ளப்பட்ட மூன்றாம் பாலினத்தவர்களுக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக 'திருநங்கைகள் நல வாரியம்' அமைத்ததும் அவர்தான். அரவானின் வம்சத்தவர்களைத் திருநம்பி, திருநங்கை எனத் தமிழ் வாரியணைத்துக்கொண்டது.

ஊனமுற்றவர்களுக்காகவும் சமூக நீதி பேசியது கருணாநிதியின் பேனா. 'மாற்றுத்திறனாளிகள்' என்ற அழகிய பதத்தைக் கொண்டுவந்து 'யாவரும் சமமே' என்ற கோட்பாட்டை மீண்டுமொரு முறை நிறுவினார். இன்று 'எங்களப் பெத்த ராசா' என நெஞ்சிலடித்துக்கொண்டு அழும் திருநங்கைகளும் தொலைதூரத்திலிருந்து வந்து அவரை தொட்டு விடவா... கூட்டத்தில் முண்டியடிக்கும் மாற்றுத்திறனாளிகளுமே இதற்குச் சாட்சி.

**பற்றிக்கொள்ளும் எனர்ஜி!**

கருணாநிதியைப் பற்றி ஒரு சொல்லாடல் வழக்கத்தில் இருக்கிறது. 'கடந்த 50 ஆண்டுகளாக அவரில்லாத செய்தித்தாள்கள் இல்லை, சேனல்கள் இல்லை, சோஷியல் மீடியா இல்லை' என்பது உண்மைதான். அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழர்களின் பேசுபொருளாக அவர் இருந்திருக்கிறார். அவரின் பெயரைச் சொன்னால் தொற்றிக்கொள்ளும் பரபரப்பையும் எனர்ஜியையும் எல்லாரும் ஒருதடவையாவது அனுபவித்திருப்பார்கள். அவருக்காக தமிழகம் கண்ணீர் சிந்தியிருக்கிறது, அவரைத் திட்டித் தீர்த்திருக்கிறது, இதோ, இன்று ஓரணியில் நின்று அவர் மீண்டு வர பிரார்த்திக்கிறது. இங்கு எங்கும் எதிலும் கருணாநிதியே! அணுவசைவிலும் அவரே! அவரின் எனர்ஜியே!

**அவருக்காக தமிழகம் கண்ணீர் சிந்தியிருக்கிறது, அவரைத் திட்டித் தீர்த்திருக்கிறது, இதோ, இன்று ஓரணியில் நின்று அவர் மீண்டு வர பிரார்த்திக்கிறது. இங்கு எங்கும் எதிலும் கருணாநிதியே! அணுவசைவிலும் அவரே! அவரின் எனர்ஜியே!**



**Never Ever Give Up!**

வாழ்க்கையைக் கலைத்துப்போட்டு, திரும்ப ஜீரோவிலிருந்து தொடங்கும் தைரியம் எல்லாருக்கும் அமையாது. கருணாநிதிக்கு அமைந்திருக்கிறது. 1948ல் நடந்த தி.க மாநாட்டில் கலவரம் நடக்க, சிலர் கருணாநிதியைத் தாக்கி சாக்கடையில் வீசிவிட்டுச் செல்கிறார்கள். அதிலிருந்து வீறுகொண்டெழுந்து திரும்பவும் முன்வரிசைக்கு வந்தார் அவர். 1953ல் திருப்பத்தூரில் நடந்த விபத்தில் ஒரு கண்ணில் விழித்திறன் இழந்தார். ஆனாலும், அசராமல் அடுத்த 60 ஆண்டுகள் அவரால் எழுதித்தள்ள முடிந்தது. எமர்ஜென்சி காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டபோது, 'நெருக்கடி தாளமாட்டார் இவர்' என்றுதான் டெல்லி நினைத்தது. ஆனால், பின்னர் அவர்களே வந்து கூட்டணி வைத்துக்கொள்ளும்படி வளர்ந்தார் கருணாநிதி.

எம்.ஜி.ஆர் முதல்வரான பின் ஏறக்குறைய 13 ஆண்டுகள் ஆட்சிக்கே வரமுடியவில்லை. வேறெந்த இயக்கமாக இருந்தாலும் இவ்வளவு பெரிய இடைவெளியில் நீர்த்துப்போயிருக்கும். ஆனால், அதே உறுதியோடு இயக்கத்தை வழிநடத்தி மீண்டும் ஆட்சியைப் பிடித்தார் கருணாநிதி.

புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாக 1991ல் கலைஞரின் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அதன்பின் வந்த தேர்தலில் தி.மு.க வென்றது வெறும் இரண்டு இடங்கள் மட்டுமே. ஆனால் அதிலிருந்தும் மீண்டு வந்தார் கருணாநிதி. 1996 2001 அவரின் ஆட்சிக்காலத்தில் தமிழகம் சகல துறைகளிலும் வெற்றிநடை போட்டது.

இதோ, முதல்வர் நாற்காலியிலிருந்து அவர் இறங்கி ஏழாண்டுகள் ஆகின்றன. ஆனால், மற்ற கட்சிகளில் நடக்கும் சலசலப்புகளில் பாதிகூட தி.மு.கவில் இல்லை. அவர் மீண்டு வந்திருந்தால் சதமடித்திருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதைத்தான் எதிர்பார்த்து காத்திருந்தான் கடைக்கோடித் தொண்டன்.

விழ விழ வீறுகொண்டெழும் ஃபீனிக்ஸ் ஆயிற்றே அவர்! மீண்டும் வருவார்... தமிழகத்தைத் தாங்கும் தலைமகனாக... ஒரு மாபெரும் கூட்டத்தை வழிநடத்தும் சித்தாந்தமாக... காலத்துக்கும் ஓங்கி நிற்கும் வரலாறாக... அவர் மீண்டும் வருவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை

## 7 நீலக்கடற்கரை ஓரம் கம்பீரமான டுப்ரோவ்னிக்



சாள்ஸ் ஜெ.போர்மன்

அடுத்த நாள் காலையில் எழுந்ததுமே நீண்ட காலத்துக்குப் பின்பு காதலியைச் சந்திக்கப்போகும் குறுக் குறுப்பு எனக்குள் உருவாகியிருந்ததை உணர முடிந்தது. காரணம், நான் ஏற்கனவே எனது ஆரம்ப அத்தி யாயமொன்றில் குறிப்பிட்டி ருந்ததுபோல் அந்த நகரைப் பற்றி நிறைய வாசித்து, அதைப் பற்றிப் பலரும் விபரித்திருந்ததைக் கேட்டதும் மட்டுமல்ல. எனக்குப் பிடித்தமான "Game of Thrones" தொலைக்காட்சித் தொடரில் கண்டு பிரமித்திருந்த பழைய நகரை நேரில் காணப்போகும் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது என்பதும்தான்.

அன்றைய முழு நாளிலும் முடிந்த வரை நகரையும் அதன் முக்கிய பகுதி களையும் பார்க்கச் செலவிட்டுவிட்டு, மிகுதியாக இருப்பவற்றை அடுத்த நாள் பார்க்கலாம் என்று திட்ட மிட்டுக்கொண்டோம். வெயில் 35கு செல்சியஸைத் தொடும் என்று தெரிந்துகொண்டு அதற்கேற்றவற்றை எங்களுடன் எடுத்துக்கொண்டோம். இடையில் எங்கேயாவது ஒரு கடற்கரையில் நீந்தவும் திட்டமிட்டி ருந்ததால் பைக்குள் குளிப்பதற்கான உடைகளையும் தயார்ப்படுத்திக் கொண்டோம்.

எங்கள் தங்குமிடத்துக்கு அருகி லிருந்த பேருந்து நிறுத்தத்திலிருந்து பேருந்து எடுத்து அது நகரின் உள்ளே நுழைந்தவுடன் ஓரிடத்தில் இறங்கினோம்.

சாதாரணமான ஒரு பிரபல சுற்றுலா நகரங்களுக்கு இணையான நகராக இருந்தது அந்த நகர். படங்கள் எடுக்க உகந்த இடங்களாகத் தெரிந்தன ஒவ்வொரு பகுதியும். உல் லாசப் பயணிகள் கொத்துக் கொத் தாகப் பேருந்துகளில் வந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். இன்னும் பலர் கைகளில் நகர வரைபடங் களுடனும், கழுத்தில் தொங்கும் காமராக்களுடனும் திரும்புமிட மெல்லாம் போய்க்கொண்டிருந் தார்கள்.


நகரின் எல்லையாக இருக்கிறது அதிரியாட்டிக் கடல். அதன் கரைகளி லெல்லாம் விதம் விதமான உல்லாசப் படகுகள் நிறுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் விதம் விதமான அமைப்புக்களில் படங்கள் எடுத்துக்கொள்ளத் தூண்டுமளவுக்கு அழகாக இருந்தன. பெருபாலானவை மிக மிக விலையுயர்ந்தவை என்பதும், பெரும் பணக்காரர்களின் உடமை என்றும் புரிந்துகொள்ள முடிந்தது. சில படகுகளில் காலை உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருக்க, மேலும் சிலவற்றில் இரவுப் போதையை வெட்டக் காலையிலேயே தங்கள் போத்தல்களைத் திறந்துவிட்டி ருந்தார்கள்.

கரையோரமாகவே நடந்துசென்று நகரை ரசித்துக்கொண்டிருந்தோம். கடலுக்குப் போன மீனவர்கள் கரையேறும் பகுதியில் மீன்பிடிப் படகுகள் சிலவற்றில் பிடித்த பாரிய மீன்களை வெட்டிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த மீன்களின் வயிற்றிலிருந்த சிறு மீன்கள் கழுவப் பட்டுக் கடலுக்குள் விழ அவற்றை வேட்டையாகக் கடற்காகங்கள் போட்டியிட்டு மொய்த்துப் பறந்து கொண்டிருந்தன. மேலும் சில படகுகள் தங்கள் படகுகளையெல்லாம் சுத்தப்படுத்திவிட்டு அங்கிருந்து அகன்றுகொண்டிருந்தார்கள்.

தொடர்ந்தும் நடந்துகொண்டி ருந்தபோது பிரான்ஸிஸ்கன் மடமொன் றையும் அதன் அடுத்திருந்த ஐரோப்பாவின் பழைய மருந்துக் கடைகளில் இன்றும் செயற்பட்டுவரும் மருந்துக் கடையைக் காண முடிந்தது. ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று பழைய மருந்துக் கடைகளில் ஒன்று டுப்ரோவ்னிக் நகரில் இருக்கிறது. அந்த மூன்று கடைகளிலும் 1317 இல் ஆரம்பிக்கப்பட்ட இக்கடை இன்றும் மருந்துக்கடையாக இயங்கிவருவது இது மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸிஸ்கன் மடமொன்றுடன் இணைந்திருக்கும் மருந்துக்கடையில் பாவிக்கப்பட்ட பழைய கால ஏதனங்கள் இப்போதும் அந்த மடத்தில் இருக்கும் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

வரும் வழியில் டுப்ரோவ்னிக்கைச் சுற்றிச் சுற்றுலா அழைத்துச் செல்லும் படகுகள் சில காலை 10 மணிக்குப் புறப்பட இருப்பதைப் பற்றி விசாரித்து அறிந்திருந்தோம். கதிரின் ஆசை அப்படகுகளொன்றில் போவதுதான். அங்கே தனியாகக் கூட்டிச் சென்று எங்கள் விருப்பப்படி சுற்றிப்பார்க்கவோ, அல்லது அவர் களுடைய திட்டப்படி கரையோ ரத்தை வெவ்வேறு விதமாகச் சுற்றிப் பார்க்கவோ ஏதுவான சுற்றுலாக்கள் இருந்தன. பெரும்பாலான சுற்றுலாக்கள் "பயணத்தின்போது நீர், பழரசம் [வைன்], உணவு எல்லாமே பயணச்சீட்டு வாங்குபவர்களுக்கு இலவசம்," என்றே அறிவிக்கப்பட்டிருந்தன.

படகுச் சுற்றுலாவுக்காக நேரத்துக்கு ஏறினால்தான் வசதியாக இருந்து வெளியே பார்த்து ரசிக்கவும், படங்கள் எடுத்துக்கொள்ளவும் வாகான இடம் பிடிக்க முடியும். எனவே நாங்கள் அப்படகுகள் சுற்றுலாவை





ஆரம்பிக்கும் இடத்தை நோக்கித் திரும்பினோம். கதிர் தனக்குப் பிடித்தமான இடமொன்றைத் தெரிவு செய்துகொள்ள அவனருகில் நானும் இருந்துகொண்டேன். பணியாளர் ஒருவர் எங்களிடம் வந்து ஆளுக்கொரு போத்தலில் நீரைத் தந்துவிட்டு குடிப்பதற்குப் பழரசம் வேண்டுமா என்று கேட்டார். இப்போதைக்கு வேண்டாம் என்று நான் மறுக்க, தேவையானபோது படகுக்குள் இருக்கும் சிற்றுண்டிச்சாலையில் வந்து வாங்கிக்கொள்ளுங்கள், அங்கேயே தேவைக்கு ஏற்றபடி குடிக்க நீரும் கிடைக்கும் என்று சொல்லிவிட்டுப் போனார்.

படகுச்சவாரி ஆரம்பிக்க மேலும் சுமார் இருபது நிமிடங்கள் இருந்தன. சுமார் 400 பேர் இருக்கக்கூடிய

தொடர்ச்சி 21-ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் கவரப்பட்டுக் காதல்கொண்டு உறவில் இணைவதே ஓரினச்சேர்க்கை. இதற்கும், ஆண் பெண் உறவுக்கும் பெரியளவில் வேறுபாடில்லை. உணர்வு ரீதியாக இரண்டும்ஒன்றுதான்.ஓரினச்சேர்க்கை குறித்து சமூகத்தில் பல தவறான கருத்துகள் உலவுகின்றன. 'இது ஒரு மனநோய்', 'இது இயற்கைக்கு முரணானது', 'இவர்களுக்கு எச்.ஐ.வி வரும்' இப்படிப் பல கருத்துகள்!

இலங்கைதண்டனைச் சட்டம், 'ஓரினச்சேர்க்கை போன்ற இயற்கைக்கு முரணான உடலுறவுகளில் ஈடுபடுவது குற்றச்செயல், இந்தக் குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம்' என்கிறது. இது, 1857ம் ஆண்டு இங்கிலாந்து அரசால் கொண்டுவரப்பட்ட சட்டம். அதைத்தான் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஓரினச்சேர்க்கை என்பது, மனநோய் கிடையாது. அமெரிக்க உளவியல் சங்கம், 1978ம் ஆண்டே மனநலப் பிரச்னைகள் பட்டியலிலிருந்து இதை நீக்கிவிட்டது. உலகம் முழுவதும் இருக்கும் மருத்துவர்கள், 'இது இயல்பானதுதான்' என்றும், 'மாற்று உடலுறவு' (Alternative Sexual Orientation) என்றும் கூறுகிறார்கள். உலகின் பல நாடுகளில் ஓரினச்சேர்க்கையை அங்கீகரித்திருக்கிறார்கள்.எச்.ஐ.வி என்பது உடலுறவு கொள்ளும் இருவரில், யாராவது ஒருவருக்கு இருந்தால்தான் மற்றவருக்குப் பரவும். ஓரினச்சேர்க்கைக்கும் எச்.ஐ.விக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. இதுவரை நடந்திருக்கும் மருத்துவ ஆராய்ச்சியில், 'ஓரினச்சேர்க்கையை விட சாதாரண பாலியல் உறவு மூலமாகவே அதிகம் பேருக்கு எச்.ஐ.வி பரவியிருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஓரினச்சேர்க்கைக்கும் நாட்டில் நடக்கும் குற்றச் சம்பவங்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இயல்பான பாலியல் உணர்ச்சிபோல, ஓரினச்சேர்க்கையும் இயற்கையான பாலியல் உந்துதல் தான். ஓரினச் சேர்க்கையாளர்களைக் குற்றவாளிகளைப் போலப் பார்ப்பது முற்றிலும் தவறு.

பாலியல் உணர்வு என்பதே தனிநபர் விருப்பம் சார்ந்தது. பொது பாதிப்பு இல்லாதவரையில் அதில் எவரும் தலையிட முடியாது. மனிதர்கள் மட்டுமல்ல, விலங்குகளிடமும் ஓரினச் சேர்க்கை இருக்கிறது. ஓரினச்சேர்க்கையாளர்கள் யாருடைய தூண்டுதலாலும் இதில் ஈடுபடுவதில்லை. அது அவர்களுக்கு இயற்கையாக ஏற்படக்கூடிய உணர்வு. இயற்கையில் அனைத்தும் ஒரே மாதிரி இருக்காது, வேற்றுமைகள், முரண்கள் இருக்கத் தான் செய்யும். இதைத் தவறென்றோ, குற்றமென்றோ சொல்ல முடியாது.

ஓரினச்சேர்க்கையாளர்கள் அல்லது அவர்களின் பெற்றோர், 'இதை மாற்ற முடியுமா, இதற்குச் சிகிச்சைகள் இருக்கின்றனவா' என்று மருத்துவர்களிடம் கேட்கிறார்கள். இது நோயாக இருந்தால்தானே சிகிச்சையளிக்க முடியும்!

ஓரினச்சேர்க்கை உணர்வு ஒருவருக்கு ஏன் ஏற்படுகிறது என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஒருவர் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவதற்கான காரணங்களாக நான்கு கோட்பாடுகள் நம்பப்பட்டன. 'மரபணுதான் காரணம்' என்பது ஒரு கோட்பாடு. இதை 'ஜெனடிக் தியரி' (Genetic Theory) என்பார்கள். 'ஹார்மோன் கோளாறுதான் காரணம்' என்கிறது இரண்டாவது கோட்பாடு. இதை 'ஹார்மோனல் தியரி' (Hormonal Theory) என்பார்கள். 'சிறு வயதில் பார்த்த, அனுபவித்த சம்பவங்கள்தாம் காரணம்' என்பது மூன்றாவது கோட்பாடு. இதை 'சைக்கோ அனலிடிகல் தியரி' (Psychoanalytic Theory) என்பார்கள். 'பத்து பேர் இருக்கும் இடத்தில், எட்டு பேரின் குணாதிசயம் மற்ற இரண்டு பேருக்கும் தொற்றிக்கொள்ளும்' என்பது நான்காவது கோட்பாடு. இதை, 'பியர் இன்ஃப்ளுயென்ஸ் தியரி' (Peer Influence Theory) என்று சொல்வார்கள். ஆனால், இவற்றில் எந்தக் கோட்பாடும் இதுவரை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

ஓரினச்சேர்க்கை என்பது நோயல்ல. ஆகவே இதற்குச் சிகிச்சையும் கிடையாது. இருபால் சேர்க்கையாளர்களுக்குச் சமூகத்தில் எந்த அளவுக்கு உரிமையும் மரியாதையும் இருக்கிறதோ, அதே அளவுக்கு உரிமையும், மரியாதையும் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கும் இருக்கிறது. அவர்களும் மனிதர்கள் தாம், புறக்கணிக்க வேண்டாம்!

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கோலமாவு கோகிலா


சீமராஜா





பவானி

## நிறம் மாறாத பூக்களில் சர்ச்சை



ஜீ சனலில் ஒளிபரப்பாகிறது நிறம் மாறாத பூக்கள் சீரியல். இந்த சீரியலில் இருந்து தன்னை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள் என குமுறுகிறார் ரவி. "இந்த சீரியலின் இரண்டு நாயகிகளில் ஒருவரின் அப்பா வேடத்தில் நடிக்கும்படி கேட்டார்கள். நாகர்கோவிலிலும் சென்னையிலும் நடப்பதை போலிருக்கும் என்றார்கள். நாகர்கோவிலில் இருக்கும் நாயகி சென்னைக்கு போவதாக சொல்கிறீர்கள், இருபது முப்பது எபிசோட்தான் வருவேன் என்றால் இந்த வாய்ப்பு வேண்டாம் என்றேன். நீங்களும் குடும்பத்துடன் கிளம்பி சென்னைக்கு வருவீர்கள் என்றார்கள். அவர்கள் பேச்சை நம்பி, வேறு வாய்ப்புக்களையும் தவிர்த்து நடித்தேன். ஆனால் 15 எபிசோடின் பின் விஷ்ணுபிரியா என்ற என் பெண், சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்கு ஓடுவதாக காட்சி அமைத்தார்கள். அதன்பின் என்னை சூட்டிங்கிற்கு கூப்பிடவில்லை. போன் பண்ணினால் பதிலில்லை. ஒருமுறை சூட்டிங் ஸ்பொட்டிற்கு நேரில் செல்ல, அவமானப்படுத்தி அனுப்பினார்கள். கொஞ் சநாளில், மகள் ஊரைவிட்டு ஓடிப்போன அவமானத்தில் சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டு எங்கள் குடும்பம் ஓடிவிட்டதாக சீரியலை மாற்றியுள்ளனர். என்னை ஏன் இப்படி அவமானப்படுத்த வேண்டும்" என கொந்தளித்தார். இது குறித்து தயாரிப்பாளர் நீலிமா ராணியிடம் கேட்டபோது "கதையின் போக்கில் சீரியல் போய்க்கொண்டிருக்கிறது. தன் கேரக்டர் இனி வராதென அவர் எப்படி முடிவெடுத்தார் தெரியவில்லை" என்றார்.

## உடை மாற்றியது எனக்கு தெரியாது!



விஜய் டிவியின் பொன்மகள் வந்தாள் சீரியலின் நாயகி ஆயிஷா, அதிலிருந்து விலக்கப்பட்டது குறித்து இயக்குனரில் மேல் சரமாரி குற்றச்சாட்டு வைத்ததை கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். அந்த குற்றச்சாட்டுக்களிற்கு இயக்குனர் நம்பிராஜா சொன்ன பதில்களை இந்தவாரம் தருகிறோம். "அன்று அவர் மேக்அப் போட்டுக் கொண்டிருந்தபோது, அறைக்கதவை தட்டியது உண்மைதான். ஆனால் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போகவில்லை. அரை மணி நேரத்தில் ரெடியாகி வரச் சொன்னேன். வரவில்லை. அதனால் போய் கதவைத்தட்டி ஹேர் டிசைனரிடம் பேசினேன். ஆயிஷா பாதி ட்ரஷில் இருந்தது எனக்கு தெரியாது. அவருக்காக மற்றவர்கள் வெயிட் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இதனால்தான் கோபப்பட்டேன். அந்த சம்பவத்திற்கு பிறகு ஒன்றரை மாதம் நடித்தார். அவருக்கு நடிக்க தெரியவில்லை. ரொமான்ஸ்சீன் நடிக்கவே மாட்டேன் என கூறிவிட்டார். அதனால்தான் நீக்கினார்கள்" என்றார்.

## பிழைக்க தெரிந்த பிள்ளை!



பொன்மகள் வந்தாள் சீரியல் செய்திதான் இதுவும். ஆயிஷா விலகிய நிலையில் மேக்னா வின்சென்ட் நாயகியாக நடிக்கிறார். தெய்வம் தந்த வீடுதான் இவரது முதல் சீரியல். அதன்பின் திருமணத்திற்காக சிறிய பிரேக் எடுத்தார். மீண்டும் நடிக்க வந்து விட்டார். இந்த பாத்திரத்தில் முன்னர் நடித்த ஆயிஷா, ரொமான்டிங் காட்சிகளில் நடிக்க மறுத்ததை கூறி, அவற்றில் நடிக்க தயக்கமில்லையா என கேட்டால், இல்லை என்கிறார். "நடிப்பது என் வேலை. இயக்குனர் என்ன சொல்கிறாரோ, அதை செய்வேன். மக்கள் ரசிக்கும்படி நிச்சயம் சீரியல் அமையும்" என்றார்.

## சமைக்க தெரிந்த மாமியார்!



விஜய் டிவியின் நெஞ்சம் மறப்பதில்லை சீரியலில் நடிப்பவர் ஜே.லலிதா. முன்னர் ஒருகாலத்தில் சினிமாவில் நடித்தார். திருமணத்திற்கு பின்னர் சீரியலில் நடித்து வருகிறார். ரஜினி, கமல் உள்ளிட்ட பெரும்பாலான முன்னணி ஹீரோக்களின் படங்களில் நடித்துள்ளார். 1996 இல் திருமணம் முடிந்ததில் இருந்து சீரியலில் ஒதுங்கி விட்டார். நெஞ்சம் மறப்பதில்லை மாமியார் ரோலை பலரும் பாராட்டுகிறார்கள் என்கிறார். பரதம், சமையல் கலைகளிலும் அம்மணி வல்லவராம். விஜய் டிவியின் கிச்சன் சூப்பர் ஸ்டார் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டிருக்கிறார்.

## த்ரிஷா விளக்கம்

விக்ரம் ஹரி கூட்டணியில் உருவான படம் சாமி. சூப்பர் ஹிட்டான இப்படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாராகியுள்ளது. விக்ரமிற்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். முதல்பாகத்தில் நடித்த திரிஷா, இந்தப்படத்திலும் தொடருவார் என்று சொல்லப்பட்ட நிலையில் அவர் நடிக்க மறுத்ததால், ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்திருக்கிறார்.இந்நிலையில், தற்போது த்ரிஷா அளித்துள்ள ஒரு பேட்டியில், சாமி2 படத்தில் எனக்கான கேரக்டர் அழுத்தமானதாக இல்லை. ஏதோ சில காட்சிகளில் மட்டுமே வந்து செல்லும் வேடம் போன்று சித்தரிக்கப்பட்டிருந்தது. அதனால் தான் சாமி2 படத்தை நிராகரித்தேன் என்று தெரிவித்துள்ளார் த்ரிஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத் திரை

## திருமணம் செய்யாமலும் வாழலாம்

வை ராஜா வை, முத்துராமலிங்கம் போன்ற படங்களில் கவுதம் கார்த்திக்குடன் இணைந்து நடித்தவர் பிரியா ஆனந்த். இருவரும் காதலிப்பதாக தகவல் வந்தநிலையில் அதை மறுத்த இருவரும் நாங்கள் நல்ல நண்பர்கள் என்று பதில் அளித்தனர். தற்போது தமிழில் எல்கேஜி படத்தில் நடித்து வரும் பிரியா ஆனந்த், மலையாளம், கன்னட படத்திலும் நடிக்கிறார். பிரியா ஆனந் திருமணம் பற்றி கேட்டதற்கு தடாலடியாக பதில் அளித்துள்ளார் 'திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்ய தேவையில்லை. அந்த காலத்தில் பெண் என்றால் கட்டாயம் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று கூறுவார்கள். ஆனால் இப்போது திருமணம் செய்துகொள்ளாமலும் சில பெண்கள் வெற்றிகரமாக வாழ்கிறார்கள். என்ன படிக்க வேண்டும், எந்த வேலைக்கு செல்லவேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்று முடிவெடுக்கும் பெண்களுக்கு யாரை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்யும் பக்குவமும் இருக்கிறது. சரியான ஒரு நபர் கிடைத்தால் தாராளமாக திருமணம் செய்துகொள்ளலாம்' என்றார்.



ஷாரா கான்

ஸ்வேதா

## கமல் முத்தம்

இயக்குநர் வெற்றிமாறனின் கிராஸ் ரூட் பிலிம் கம்பெனியும், பாக்ஸ் ஸ்டார் ஸ்டுடியோ நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ள படம் 'அண்ணனுக்கு ஜே'. இப்படத்தை அறிமுக இயக்குநரான ராஜ்குமார் இயக்கியுள்ளார். இவர் வெற்றிமாறனிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர். கதாநாயகனாக தினேஷ் நடித்துள்ள இந்தப்படத்தில் அவருக்கு ஜோடியாக மஹிமா நம்பியார் நடித்துள்ளார். இந்தப் படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பின்போது அண்ணனுக்கு ஜே படத்தின் பாடல் காட்சிகளும் டிரைலரும் திரையிடப்பட்டன. தினேஷ் மஹிமா நம்பியார் காதல்காட்சியில், தனக்கு முத்தம் கொடுக்க தயங்கும் தினேஷைப் பார்த்து, 'போ.. போய் கமல் நடிச்ச படத்தைப் பார்த்துட்டு வந்து முத்தம் கொடு' என்கிற ரீதியில் ஒரு வசனம் இடம் பெற்றுள்ளது. வெற்றிமாறனின் தயாரிப்பில் வரும் படத்தில் இப்படியொரு வசனமா என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

## பிஸியாகும் நந்திதா

அட்டக்கத்தி படத்தின் மூலம் அறிமுகமானவர் நந்திதா. இவருடன் அறிமுகமான ஐஸ்வர்யா ராஜேஷ் மளமளவென முன்னேறிக் கொண்டிருக்கும்போது நந்திதாவின் கேரியர் மெதுவாக நகர்ந்தது. ஆனால் இப்போது தெலுங்கில் பிசியான நடிகை ஆகிவிட்டார் நந்திதா. தெலுங்கில் இவர் நடிப்பில் வெளியான முதல் படமான 'எக்கடக்கி போத்தாவா சின்னவாடா' என்ற படம் பெரிய வசூலைக் குவித்ததால் தெலுங்கில் வலுவாக காலூன்றி விட்டார். தொடர்ந்து சத்தமே இல்லாமல் 5 தெலுங்கு படங்களில் நடித்து முடித்துவிட்டார். இதுகுறித்து நந்திதா கூறியதாவது தெலுங்கின் முன்னணி தயாரிப்பாளரான தில் ராஜுவின் தயாரிப்பில் உருவாகியிருக்கும் 'சீனிவாசா கல்யாணம்' என்ற படத்தில் பத்மாவதி என்ற கிராமிய பின்னணியிலான கேரக்டரில் நடித்திருக்கிறேன். இந்த படத்தில் ஆக்ஷன் காட்சிகளில் டூப் போடாமல் நடித்திருக்கிறேன். தமிழில் வெளியான டார்லிங் 2 படத்தின் தெலுங்கு ரீமேக்கான பிரேம கதாசித்திரம் 2 படத்திலும் நடித்து வருகிறேன். இதற்கான படபிடிப்பு இம்மாதம் தொடங்குகிறது. தமிழில் வைபவ் உடன் ஒரு படத்திலும், நர்மதா என்ற படத்திலும் நடித்து வருகிறேன். கன்னடத்தில் முன்னணி ஹீரோவுடன் நடிக்க ஒப்பந்தமாகவிருக்கிறேன் என்கிறார் நந்திதா.

## போனி கபூர் படத்தில் அஜித்

மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் செகண்ட் இன்னிங்சில் வெளியான முதல் படம் இங்கிலீஷ் விங்கிலீஷ். இந்த படத்தில் அஜித்தும் நட்புக்காக நடித்திருந்தார். அப்படி ஏற்பட்ட நட்பு காரணமாக, ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரிக்கும் ஒரு படத்தில் நடித்துக்கொடுப்பதாக கூறியிருந்தார் அஜித். தற்போது சிவா இயக்கும் விஸ்வாசம் படத்தில் நடித்து வரும் அஜித், இந்த படத்தைத் தொடர்ந்து போனி கபூர் தயாரிக்கும் படத்தில் நடிப்பார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அதோடு, அந்த படத்தை சதுரங்கவேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று படங்களை இயக்கிய எச்.வினோத் இயக்குவார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

## சண்டைக்காரி சாய் பல்லவி!

நடிகை சாய் பல்லவி நடிக்கும் சில ஹீரோக்களுடன் அவருக்கு மோதல் போக்கு ஏற்படுவது வழக்கமாக இருக்கிறது. தற்போது, 'எங்கேயும் எப்போதும்' படத்தில் ஹீரோவாக நடித்த சர்வானந்த்துடன் புதிய தெலுங்கு படத்தில் நடித்து வருகிறார் சாய்பல்லவி. அவருடனும் மோதல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அப்படத்தின் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. இதுபற்றி சாய்பல்லவி பதில் எதுவும் கூறாமல் மவுனம் காத்து வந்த நிலையில் தற்போது விளக்கம் அளித்திருக்கிறார். 'ஏற்கனவே நான் ஒப்புக்கொண்டு கால்ஷீட் கொடுத்திருந்த படத்தில் நடித்து வருவதாலும், சர்வானந்தும் வேறு பணியில் இருப்பதாலும் இப்படத்தின் படப்பிடிப்பு நின்றிருக்கிறது' என்றார். ஆனால் மோதல் குறித்து சாய்பல்லவி குறிப்பாக பதில் எதுவும் சொல்லாததால் இருவருக்குமான மோதல் நீறுபூத்த நெருப்பாகவே இருப்பதாக திரையுலகினர் கூறுகின்றனர்.

## சிக்கல் தீர்ந்தது!

கார்த்திக் நரேன் இயக்கும் புதிய படம் 'நரகாசூரன்'. அரவிந்த்சாமி, ஸ்ரேயா நடிக்கின்றனர். இப்படத்தை இயக்குனர் கவுதம் மேனன் தயாரித்தார். படத்தின் இறுதிகட்ட பணிகள் நடந்த நிலையில் கவுதம் மேனனுக்கும், கார்த்திக் நரேனுக்கும் பிரச்னை ஏற்பட்டது. கவுதம் மேனன் பைனான்ஸ் விவகாரத்தில் தன்னிடம் பேசியபடி நடந்துகொள்ளவில்லை. இதனால் படத்தை ரிலீஸ் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கார்த்திக் நரேன் பகிரங்கமாக புகார் கூறினார். இதுதொடர்பாக தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் செய்யப்பட்டது. ஒரு கட்டத்தில் இப்படத்திலிருந்து கவுதம் மேனன் விலகிக்கொண்டார். இதையடுத்து ஷரத்தா பட நிறுவனம் படத்தை வாங்கியது. பிரச்னைகள் முடிவுக்கு வந்ததையடுத்து ஒகஸ்ட் 31ம் திகதி படம் ரிலீஸ் ஆகவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வாரம் 'சிரித்ராலயா' தொடரில் சி.வி.ராஜேந்திரன் பற்றிய அறிமுகம் இடம்பெற்றிருந்தது. சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குத் திரும்பியிருந்த சி.வி. ராஜேந்திரனைக் காணக் குடும்பத்தினருடன் சென்றிருந்தார் 'சித்ராலயா' கோபு. சென்னை பாண்டிபாஜாரை ஒட்டிய ஆர்க்காடு தெருவில் இயக்குநர் ராஜேந்திரன் வீடு. உற்சாகத்துடன் வரவேற்ற சி.வி.ஆர், "சிரித்ராலயா என்ற தலைப்பே அருமை. இந்த வாரம் என்னைப் பற்றிய அறிமுகம் அருமை. எனக்கே எதிர்பார்ப்பைத் தூண்டிவிட்டாய். உடல்நலம் குன்றியுள்ள எனக்கு இப்போது சிரித்ராலயா நல்ல மருந்து" என்று பாராட்டிவிட்டு சுமார் ஒருமணிநேரம் பழைய நினைவுகளில் மூழ்கியபடி பேசிக்கொண்டிருந்தார்.

"துரதிஷ்டவசமாக காலனும் சிரித்ராலயா படித்து வருகிறான் போலும். சி.வி ராஜேந்திரனை அறிமுகப்படுத்தி அவரது சாதனைகளைப் பற்றி எழுதத் தொடங்கியபோது, சிரித்ராலயாவைக் கண்ணீர் ஆலயமாக மாற்றி விட்டானே" என்று கண்ணீர் விட்டுக் கலங்கிய கோபுவை சி.வி. ராஜேந்திரனின் மரணம், மிகவும் பாதித்து விட்டது.

"சித்ராலயாவின் கடைசித் தூண்களில் ஒன்று சாய்ந்துவிட்டது. இப்போது நான் தனிமரம்" என்று வருத்தத்துடன் கூறியவர், "மரணம் கொடுமை அல்ல. ஆனால், கூட்டாகச் சாதனைகளைச் செய்துவிட்டு, ஒருவர் மட்டும் தனியாக மற்றவர்களைப் பற்றிய நினைவுகளுடன் வாழ்வதுதான் மிகவும் கொடுமை" என்றார். நண்பனைப் பற்றிய நினைவுகளை இன்னும் கொஞ்சம் நெருக்கமாக வாசகர்களுடன் பகிர விரும்பிய கோபு அதை ஒரு கடிதமாகவே எழுதிக் கொடுத்தார். இதோ நினைவுகளை வருடும் அந்த உருக்கமான கடிதம்.

**என் அருமை ராஜி...**

இறைவனின் வீட்டில் இந்நேரம் உனக்கு இடம் கிடைத்திருக்கும். அற்புத அமைதியில் ஆழ்ந்திருப்பாய்... அதற்காகப் பிரார்த்திக்கிறேன். அங்கே நமது சித்ராலயா நிறுவனத்தின் தூண்களான ஸ்ரீதர், வின்சென்ட், பி.என்.சுந்தரம், ஸ்டில்ஸ் அருணாச்சலம், கலை கங்கா, எடிட்டர் என்.எம் ஷங்கர், எம்.எஸ் விஸ்வநாதன், ராமமூர்த்தி, கவியரசு கண்ணதாசன், எம். பாஸ்கர், என்.சி. சக்கரவர்த்தி போன்றவர்களைச் சந்தித்திருப்பாய்.

இவர்களது மறைவுக்கு, பிறகு உனக்கு நானும் எனக்கு நீயும் என இருந்தோம். நீ ஒருவன் இருக்கிறாய் என்றே என்னை இதுவரை சமாதானப்படுத்திக்கொண்டிருந்தேன். என்னைவிட நான்கு வயது சிறியவனான உனக்கு அப்படி என்ன அவசரம்? 'இன்றைய டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் புதிய படமொன்றை இயக்கப்போகிறேன். முழுநீள நகைச்சுவை கதை ஒன்றை எழுதிக்கொடு கோபு' என்று சொல்லி விட்டு நீ இப்படி என்னைத் தவிக்க விட்டுச்சென்றது என்ன நியாயம்?

**காதலிக்க நேரமில்லை**

உனக்கு நினைவிருக்கிறதா, ராஜி! முதன்முதலாக 'மீண்ட சொர்க்கம்' படத்தில் ஸ்ரீதரிடம் துணை இயக்குநராகச் சேர ஆசைப்பட்டாய். அதற்காக அரசுப் பணியை விட்டு விட்டு வந்து நின்றாய். ஸ்ரீதரிடம் என்னை சிபாரிசு செய்யச் சொன்னாய். 'நீ அவருடைய மாமா மகன். இருந்தும் என் மூலமே ஸ்ரீதரை அணுகினாய். ஏனென்றால் என்னை உன் தோழனாய் ஏற்றுக்கொண்டவன். 'காதலிக்க நேரமில்லை' திரைப்படம்தான் நம்மை மேலும் நெருங்கிய நண்பர்கள் ஆக்கியது. அதுவரை ஸ்ரீதரிடம் பணிபுரிந்த பி.மாதவன் நமது யூனிட்டை விட்டு வெளியேறியபோது அவரது இணை இயக்குநர் பதவி தகுதிமிக்க உனக்குக் கிட்டியது. 'காதலிக்க நேரமில்லை' எத்தனை பேருக்கு வாழ்க்கையில் திருப்பத்தை உண்டாக்கியது.

ரவிச்சந்திரன், காஞ்சனா, முத்துராமன், ராஜஸ்ரீ, சச்சு, நாகேஷ் ஆகியோர் உயர்ந்த இடத்தைப் பெற்றார்கள் என்றால் நகைச்சுவை வசன கர்த்தாவாக எனக்கும் ஓர் உன்னத இடத்தைப் பெற்றுத் தந்தது அந்தப் படம். இணை இயக்குநரான உன்னுள் இயக்குநர் ஆக வேண்டும் என்ற ஆசையை ஏற்படுத்தியதும் அந்தப் படம்தான். காஞ்சிபுரத்தில் கண்ணன் டாக்கீஸ் திரையரங்க முதலாளியின் மகன்கள் நிதியுதவி செய்ய, ஒரு தயாரிப்பாளரோடு என்னைக் காண திருவல்லிக்கேணி வீட்டுக்கு வந்தாய். " கோபு! நான் முதல்முதலாக ஒரு படத்தை இயக்க வேண்டும். உன்னுடைய நகைச்சுவைக் கதை ஒன்றைத் தா. உனது எழுத்தும், எனது இயக்கமும் நிச்சயம் வெற்றியைத் தரும்..." என்று கேட்டாய்.

உனக்காக 'அனுபவம் புதுமை' என்ற நகைச்சுவைக் கதையை எழுதிக் கொடுத்தேன். முதல் படத்திலேயே உனது இயக்க முத்திரைகளையும் கேமரா ஜாலங்களையும் சிலாகித்துப் பத்திரிகைகள் எழுதின. ஆங்கிலப் படத்தைப் பார்ப்பது போல் இருந்ததாகப் பத்திரிக்கைகள் கூறின. 'அனுபவம் புதுமை' படத்தைப் பார்த்த நம் குருநாதர் ஸ்ரீதர், 'என்னடா.. ரெண்டு பெரும் அமர்க்களப்படுத்துகிறீர்களே.. என்னை அம்போன்னு விட்டுடப் போறீங்க..." என்று சொன்னதுதான் நமக்குக் கிடைத்த நிஜமான விருது.

**சிக்னலில் சிக்கிய தலைப்பு**

உடனேயே நீ இன்னொரு படத்தை இயக்க முடிவு செய்தாய். ஜெய்சங்கர், நாகேஷ், பாரதி, ஜெயந்தி நடித்த 'நில் கவனி காதலி' திரைக்கதையை முடிவு செய்த அன்று "படத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்" என்று பேசிக்கொண்டு நாம் இருவரும் காரில் சென்றபோது மவுண்ட் ரோடு, கன்னிமாரா சந்திப்பில் கார் நிற்க, அப்போது சிக்னலில் பளிச்சிட்ட 'நில்.. கவனி.. புறப்படு' என்ற சொற்கள் என் கண்ணில் பட, "ராஜி நம்ம படத்துக்குத் தலைப்பு 'நில் கவனி காதலி' " என்று நான் சொன்னபோது " சூப்பர்... படம் வெற்றி கோபு" உற்சாகமாகக் கூவி காரை புகார் ஹோட்டலில் ஓரம் கட்டி நிறுத்திச் சுடச்சுட முஸ்லிம் டீ சாப்பிட்டது நினைவிருக்கிறதா நண்பா..

நீ சொன்னபடியே படம் பெரிய வெற்றி பெற்றது அல்லவா! 'ஜில்லென்று காற்று வந்ததோ' பாட்டை முதன்முறையாக நீச்சல்குளத்தின் அடியில் படம்பிடித்து பெயர் வாங்கிய இயக்குநர் நீ அல்லவா! அதே போன்று, 'ராஜா குட்டி... ஓ மை டார்லிங்' என்ற அதே படத்தின் மற்றொரு பாடலை உயர்ந்த கட்டடத்தின் மொட்டை மாடியில் படம் பிடித்துப் பாராட்டுகளைத் தட்டிச் சென்றாயே!

**வெற்றியின் கூட்டணி**

கோபுசிவிஆர் என்றாலே வெற்றிதான் என்று திரையுலகம் கூறுமளவுக்கு நாம் தயாரித்த 'கலாட்டா கல்யாணம்' படம் பெயர் பெற்றது. நட்சத்திர இரவுக்காக நான் எழுதிய ஒரு மணி நேர நாடகத்தை சிவாஜி கணேசன் திரைப்படமாக எடுக்க விரும்பியபோது என்னைக் கதை வசனம் எழுதுவதற்கு ஒப்பந்தம் செய்தார். பிறகு வேறு ஒரு இயக்குநரை அவர் ஒப்பந்தம் செய்ய இருந்தபோது, "என் ஸ்கிரிப்ட்டை சி.வி. ராஜேந்திரன் இயக்கினால் எனது வசனங்களைச் சிந்தாமல் சிதறாமல் அப்படியே கொண்டு சேர்ப்பான்" என்று சொன்ன போது, அவர் உன்னையே இயக்குநராக

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




'கலாட்டா கல்யாணம்' படத்தில் சிவாஜி, நாகேஷ், ஜெயலலிதா


# சி(ரி)த்ராலயா

## சினிமா ராஜ்ஜியத்தை ஆண்ட ராஜேந்திரன்



சி.வி.ராஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொருளுக்கான விலை நிர்ணயம் செய்வது எப்படி?

ஏற்றுமதி செய்யும் பொருளுக்கான விலை என்பது பொருளின் உற்பத்தி முதல் அதை விற்பனை செய்யும் வரையிலான செலவினங்கள் மற்றும் லாபம் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். பொருளின் உற்பத்தி விலை மற்றும் லாபம் என்பது நமக்குத் தெரிந்திருக்கும். ஆனால், பொருள்களை விற்பனை செய்யும் வரை அதற்காக ஆகும்செலவினங்களைப்பற்றிதெரிந்து கொண்டால்தான் சரியான விலையை நம்மால் நிர்ணயிக்க முடியும்.

அதற்கு இன்கோ டேர்ம்ஸ் (IncoTerms-International commercial terms), அதாவது சர்வதேச சரக்கு வணிக விதிமுறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதில் லோக்கல் ட்ரான்ஸ்போர்ட்டும், ஷிப்மென்டும் அடங்கும். இவற்றை எளிதில் புரிந்துகொள்வதற்காக நாம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அந்த நான்கு பிரிவுகளில் மொத்தம் 11 வகைகளில் சரக்கு வணிகப் போக்குவரத்தைச் செயல்படுத்தலாம்.

E-EXWORK: இதில் இறக்குமதியாளர் நம்முடைய இடத்துக்கே வந்து பொருளை ஏஜென்ட் மூலம் எடுத்துக்கொள்வார். ஆனால், வந்து செல்வதற்கான செலவை நாம் கொடுக்க வேண்டிவரும்.

F - FCA, FAS, FOB இந்த மூன்று வகைகளும் carriage unpaid வகையில் செயல்படுத்தப்படும். அதாவது, துறைமுகம் வரை பொருளைக் கொண்டுவந்து தந்துவிட வேண்டும். இதில் கப்பல் போக்குவரத்துக் கட்டணம் (Frieght) செலுத்த வேண்டியதில்லை.

C- CFR - cost and frieght, CIF- cost, insurance and frieght, CPT- carriage paid to, CIP -Cost, insurance paid to இந்த நான்கு வகைகளும் carriage paid வகையில் செயல்படுத்தப்படும். இந்த வகைகளில் கப்பல் போக்குவரத்துக் கட்டணம் பணம் செலுத்த வேண்டும்.

அதுபோக, இன்ஷூரன்ஸுக்கான கட்டணமும் கட்ட வேண்டியிருந்தால் அதையும் கட்ட வேண்டியிருக்கும்.

D - இறக்குமதியாளரின் இடத்தில் கொண்டு போய் சேர்ப்பது. இதில் மூன்று வகை உள்ளன. 1. Delivary at terminal: துறைமுகத்தில் சேர்ப்பது, 2. delivary at place: இறக்குமதியாளரின் இடத்தில் சேர்ப்பது. 3. DTP - delivery duty paid இறக்குமதியாளரிடம் பொருளைச் சேர்ப்பதோடு, அவர் செலுத்த வேண்டிய வரியையும் செலுத்துவது.

இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப் படுபவை மூன்று வழிமுறைகள். அவை FOB, CNF மற்றும் CIF. இந்த சரக்குப் போக்குவரத்து முறைகளின்படி நாம் செய்யும் செலவினங்களைக் கணக்கிட்டு அவற்றை, பொருளின் விலையை நிர்ணயம் செய்யும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளவும்.சர்வ தேச அளவிலான சரக்கு வணிகத்தில் என்னென்ன கட்டணங்கள் உள்ளன என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்.

1. பொருளை நம் இடத்திலிருந்து துறைமுகத்துக்குக் கொண்டுசெல்லத் தேவையான போக்குவரத்துச் செலவு, 2. சி.எச்.ஏ (Customs House Agent) பணிகளுக்கான கட்டணங்கள், 3. துறைமுகத்தில் ஹேண்ட்லிங் கட்டணங்கள், 4. பொருள்களை கன்டெய்னரில் ஏற்றுவதற்கான கட்டணங்கள் 5.டொக்குமென்டேஷன் கட்டணங்கள், 6. சேர்ட்டிஃபிகேட் கட்டணங்கள் ஆகிய அனைத்தும் நாம் அனுப்பும் பொருளின் விலையில் சேர்க்கப்பட வேண்டும்.

சி.எச்.ஏ பணிகள் குறித்தும், டொக்குமென்டேஷன் குறித்தும் பின்னர் விரிவாகப் பார்க்கலாம். என்னென்ன சேர்ட்டிஃபிகேட் தேவை என்பதை முன்னரே கூறியிருக்கிறேன். இப்போது விலை நிர்ணயம் செய்வது எப்படி என்பதைப் பார்க்கலாம்.

பொருளுக்கு விலை நிர்ணயம் செய்வதை மூன்று வகைகளில் ஏற்றுமதியாளர்கள் செய்து வருகிறார்கள். ஃபிக்ஸட் இன் வால்யூ (Fixed in Value), மாறக்கூடிய விலை (Variable Cost) மற்றும் ஃபிக்ஸட் இன் பர்சன்டேஜ் (Fixed in Percentage).

### ஃபிக்ஸட் இன் வால்யூ (Fixed in Value)

ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள அரிசிக்கு ரூ.120 லாபம் போதும் என்று முடிவு செய்து ரூ.1,120க்கு விற்பதுதான் ஃபிக்ஸட் இன் வால்யூ விலை நிர்ணய முறையாகும். இந்த முறையில் செலவுகள் குறித்து பெரிதாகக் கவனம் செலுத்தமாட்டார்கள். இவ்வளவுக்கு இவ்வளவு லாபம் வந்தால் போதும் என்ற கணக்குத்தான்.

### மாறக்கூடிய விலை (Variable Cost)

இந்த வகை விலை நிர்ணய முறையில்தான் மேற்சொன்ன கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள் எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டு அதற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படும். பொருளின் ஆதார விலையும் சேர்த்து, பேக்கிங் பை, பேக்கிங் கட்டணம், சி.எச்.ஏ கட்டணம், இன்ஷூரன்ஸ் கட்டணம் மற்றும் லாபம் ஆகிய அனைத்தையும் சேர்த்தால் இறுதியில் கிடைக்கும் தொகைதான் அந்தப் பொருளுக்கான விலையாக நிர்ணயிக்கப்படும்.

### ஃபிக்ஸட் இன் பர்சன்டேஜ் (Fixed in Percentage)

ரூ.1,000 மதிப்புள்ள அரிசிக்கு 12% லாபம் என்று வைத்து ரூ.1,120க்கு விற்பது தான் ஃபிக்ஸட் இன் பர்சன்டேஜ் விலை நிர்ணய முறையாகும்.

உங்களுக்கு இறக்குமதியாளரிடமிருந்து ஓர்டர் கிடைத்தபின், சி.எச்.ஏ ஏஜென்டை அணுகி, என்னென்ன கட்டணங்கள், செலவுகள் என்பதை அறிந்து, பின்னரே பெர்ஃபார்மா இன்வாய்ஸ் (Performa Invoice) தயார் செய்ய வேண்டும். அதன் பிறகே பிற ஏற்றுமதி வேலைகளைச் செய்ய முடியும். **(ஜெயிப்போம்)**

---

ஒப்பந்தம் செய்தார். அந்தப் படத்தின் வெற்றியைப் பார்த்த பிறகு, “ராஜேந்திரன் இனி நமது ராம்குமார் மற்றும் சிவாஜி பிலிம்ஸ்சின் ஆஸ்தான இயக்குநர்” என்று அறிவிப்பே செய்தாரே சிவாஜி கணேசன். நாம் இருவரும் சேர்ந்து தொடர் வெற்றியை அளித்துக்கொண்டிருந்தோம் அல்லவா...!

‘கலாட்டா கல்யாணம்’ டீமைவைத்து மற்றொரு படம் தயாரிக்க வேண்டும் என்று சிவாஜி சொன்னபோது, நாம் பேசிய கதைதான் ‘‘சுமதி என் சுந்தரி’. நானும் நீயும் ஜெயலலிதாவுக்குக் கதை சொல்லப் போனபோது ‘எனது மனநிலையைப் பிரதிபலிக்கும் கதை! இதில் நான் நடிக்காமல் யார் நடிக்கப் போகிறார்கள்?” என்று ஒப்புக்கொண்டு நடித்தது நினைவிருக்கிறதா. “என்னுடைய அபிமான இயக்குநருக்கும், எழுத்தாளருக்கும் ஒரே நேரத்தில் கலைமாமணி விருதைக் கொடுத்து கௌரவிக்கும் பாக்கியத்தை நான் பெற்றேன்” என்று கூறி முதல்வர் ஜெயலலிதா நம் இருவருக்குமே 1992ல் கலைமாமணி தந்து கவுரவப்படுத்தியதை மறக்க முடியுமா?

### துக்கம் விசாரிக்கப்பட்டேன்

‘திக்கு தெரியாத காட்டில்’ என்ற எனது நாடகத்தைப் பார்க்க வந்திருந்த நீ, “இந்தநாடகத்தை எனக்குக் கொடு. நான் படமாக எடுக்கிறேன்” என்று உரிமையுடன் எடுத்துக்கொண்டாய். இன்றுவரை பாராட்டப்படும் படம் அந்தப் படத்தை எடுத்து முடித்து முதல் பிரதி பார்த்தபோது “என்ன ராஜி படம் இவ்வளவு நீளமாக இருக்கு!” என்றேன். “உன் வசனங்களைக் குறைக்கவே மனசு வரலை கோபு!” என்றாய். “உன் நகைச்சுவை ஸ்ரீதருக்கு ஊறுகாய். எனக்கு அதுதான் சோறு” என்று கூறி என்னைக் கலங்க வைத்தவனல்லவோ நீ.

சிவாஜி மகன் பிரபுவை ‘சங்கிலி’ படத்தின் மூலம் நடிகனாக்கினாய். ‘ராஜாவீட்டுக் கன்னுகுட்டி’ படத்துக்கு கோபு கதை வசனம் எழுதினால் நன்றாக இருக்கும் என்று நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் நாம் இருவரும் ஒன்றாகப் பணியாற்ற வழி செய்தாய். “நீ உரத்த குரலில் பேசியது கிடையாது. அமைதியானவன், எதிரிகள் இல்லாதவன்” என்று கவிஞர் வைரமுத்து இப்போதுதான் தொலைபேசியில் தனது வருத்தங்களைப் பகிர்ந்து கொண்டார். கவிஞர் வைரமுத்து உன்னை போற்றிக் கூறி, யாரிடம் துக்கம் விசாரிப்பது என்று யோசித்தேன். பிறகு உங்கள் ஞாபகம் வந்தது” என்றபோது நம் இருவரின் நட்புக்குக் கிடைத்த பெருமையாகவே இதைக் கருதுகிறேன்.

ஸ்ரீதர் ராஜராஜ சோழன் என்றால் நீ ராஜேந்திர சோழன். அவரது படங்கள் பெரிய கோயில் என்றால் உனது படங்கள் கங்கை கொண்ட சோழபுரம். பழுவேட்டரையர் போன்று நான் இருவருக்கும் மதியூகியாக இருந்தேன் என்பதுதான் எனக்குக் கிடைத்த பெருமை.

புகழுடன் வாழ்ந்து புகழுடன் மறைந்து விட்டாய். சித்ராலயா என்னும் ஆலயத்தின் கடைசித் தூணாக நான் இருக்கும் வரை உனது நினைவுகளும் என்னோடு இருக்கும்.

உலராத விழிகளோடு

‘சித்ராலயா’ கோபு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அணு இரகசியத்துடன் விமானமேறிய அப்பாவி!

## மொசாட் செய்த "பேப்பர் ஒப்ரேஷன்" 04

இஸ்ரேலின் அணுதொழில்நுட்ப இரகசியங்களை அறிந்த ஒருவர் நியூசிலாந்தில் இருக்கிறார். நியூசிலாந்தில் எங்கேயிருக்கிறார், என்ன செய்கிறார் எதுவுமே மொசாட்டிற்கு தெரியாது. அவரிடம் என்ன ஆதாரம் இருக்கிறது என்பதும் தெரியாது. விடயத்தை எப்படி கையாளலாம்? மொசாட் இதற்கு ஒரு ஐடியா தயாரித்தது என்று கடந்த பாகத்தை முடித்திருந்தோம்.

அதென்ன ஐடியா?

நீங்கள் நினைப்பதை போல, மோசாயை கடத்தி வருவதல்ல. அவர் இன்னும் சில இரகசிய ஆட்களிடமும் ஆவணங்களை பத்திரப்படுத்தி வைத்திருக்கலாம். முக்கியமாக அவர் என்ன நோக்கத்திற்காக அந்த ஆவணங்களை லீக் செய்தார் என்பது தெரியாது. அதனால் மோசாயை அவருக்கே தெரியாத விதத்தில் தமது கட்டுப்பாட்டில் எடுப்பதற்கு மொசாட் தீர்மானித்தது!

இது கொஞ்சம் ரிஸ்கியான ஐடியா. தனியே மொசாட்டுடன் மட்டும் சம்பந்தப்பட்ட திட்டமல்ல இது. வேறு ஆட்களின் ஒத்துழைப்பு இல்லா விட்டால் இந்த திட்டம் சாத்தியமேயில்லை. முக்கியமாக டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியரின் ஒத்துழைப் புடன் ஒரு திட்டத்தை மொசாட் தயாரித்தது.

திட்டத்தின் முதல் கட்டம் மோசாயை பிரித்தானியாவிற்கு அழைப்பது!

டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியருடன் மொசாட் துணை இயக்குனர் Shabtai Shavit தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசயத்தை விளங்கப்படுத்தினார்.

"மோசாய் அப்பொழுது இஸ்ரேலுக்கு வேண்டப்பட்ட விருந்தாளி. உண்மையில் அவர் இந்த விசயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறாரா என்பதை அறிய மொசாட் விரும்புகிறது. அது உங்களால் மட்டுமே சாத்தியமான விசயம்"

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"மோசாயை எங்கள் கண்காணிப்பில் வைத்திருக்க விரும்புகிறோம். ஆனால் பயப்பிடும்படியான எதுவும் நடக்காது. அவரை நாங்கள் கஸ்டடியில் எடுக்கவில்லை. லண்டனிலேயே அவர் தங்கியிருக்கட்டும். அவர் இந்த நாட்களில் எங்கள் கண்ணுக்கு முன்பாகவே இருப்பது நல்லது."

"அவரை எப்படி லண்டனிற்கு வரவைக்கப் போகிறீர்கள்?"

"அதை நாங்கள் செய்ய முடியாது. உங்களால்தான் முடியும்"

"என்ன செய்ய வேண்டும்?"

"அந்த எகிப்பு ப்ரீலான்சர் தன்னிடம் அணுதொழில் நுட்ப இரகசியம் இருப்பதாக உங்களிடம் சொல்லியிருக்கிறார். அவர் ஒரு ப்ரீலான்சர். நீங்கள் பத்திரிகை ஆசிரியர். அவரிடமுள்ள அணுத்தொழில்நுட்ப இரகசியம் சரியானதா என்பதை இரண்டு பேராலும் உறுதிப்படுத்த முடியாது. இந்த சமயத்தில் நீங்கள் பத்திரிகை ஆசிரியராக என்ன செய்வீர்களோ, அதை செய்யுங்கள்"

"புரிகிறது. எகிப்து ப்ரீலான்சரிடம் உள்ள ஆதாரத்தை பரிசோதிக்க இங்கு ஒரு அணுத்தொழில்நுட்பம் தெரிந்தவரை ஏற்பாடு செய்துள்ளோம். அவரிடம் ஆதாரங்களை கொடுக்க இருக்கிறோம். நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?"

"நீங்கள் ஏற்பாடு செய்யும் ஆளுடன், நியூசிலாந்தில் இருக்கும் மோசாய் பேச வேண்டும் என்று சொல்லுங்கள். மோசாய் இந்த ஆதாரங்களை எங்கேயாவது திருடியிருக்கலாம். அல்லது வேறு புலனாய்வு அமைப்புக்கள் அவர் மூலம் விசயத்தை லீக் செய்திருக்கலாம். ஆகவே, அவருடனும் நீங்கள் ஏற்பாடு செய்யும் நிபுணர் பேச வேண்டுமென்று சொல்லுங்கள். ஆதாரம் மட்டுமல்ல, அதன் நோக்கத்தையும் அறிய வேண்டுமல்லவா"

"சரி... அந்த நியூசிலாந்து காரரரை அழைக்கலாம். இங்கு அவர் வந்ததன் பின்னர் என்ன நடக்கும்?"

"சில நாள் அவர் பிரித்தானியாவில் இருந்து விட்டு போகட்டும். அதற்குள் அவரிடமிருந்து அந்த விசயம் வேறு ஆட்களிடம் லீக் ஆகவில்லையென்பதை மட்டும் உறுதிசெய்து கொள்வோம். அவ்வளவுதான். அவர் பிரித்தானியா வருவதற்கான பயண செலவை தேவையென்றால் நாம் கவனித்து கொள்கிறோம்"

எகிப்திலிருந்து ப்ரீலான்சர் அப்துல் ரடாஹியிடம் இந்த விசயத்தை தெரியப்படுத்தினார் டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியர் டேவிட் மக்னெல். மேசாயின் பயண ஏற்பாட்டை தமது பத்திரிகையே கவனித்துக் கொள்வதாகவும், ஒக்லாண்ட் நகரிலுள்ள மதுச்சாலையொன்றில் குறிப்பிட்ட திகதி நேரத்தில் விமான டிக்கெட்டுடன், நீல உடையில் ஒருவர் காத்திருப்பார், அவரை சந்தித்து டிக்கெட்டை பெற்றுக்கொள்ள சொன்னார். ரடாஹிக்கு இருப்பி பயணச்செலவை பத்திரிகையே பொறுப்பெடுத்துக் கொள்ளுமென்றால் மோசாயை எப்படியாவது கிளப்பி, பிரித்தானியாவிற்கு கொண்டு வரலாமென நம்பினார். அடுத்த வாரமோ, அதற்கடுத்த வாரமோ பிரித்தானியாவில் மோசாய் நேரில் வந்து சந்திப்பார் என டேவிட் மக்னெலிடம் சொன்னார்.

ஆனால், ரடாஹிக்கு ஒரு குழப்பம் இருந்தது. தன்னையும் மோசாயையும் இணைத்து விட்டவர் மார்ட்டின். மார்ட்டின் வேறு ஏதாவது உளவு அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகம் ரடாஹியிடம் இருந்தது.

ஆனால் அதை பகிரங்கமாக மார்ட்டினிடம் கேட்கவில்லை. மார்ட்டின் மூலம் சில வாய்ப்புக்கள் வந்து கொண்டிருந்தன. அதை வைத்து பணமாக்கிக் கொண்டிருந்தார். இதோ, இப்போது மோசாய் மூலம் கிடைத்த தகவல்களை போலத்தான்.

மார்ட்டினிற்கு தெரிந்தால், மோசாயை நியூசிலாந்திலிருந்து வெளியில் வர அனுமதிக்கமாட்டார் என்பது ரடாஹிக்கு தெரியும். எப்படியாவது மோசாயிடமிருந்து விசயத்தை கறந்து, பணமாக்கி விட வேண்டுமென நினைத்தார்.

மீண்டும் மக்னெலிற்கு தொலைபேசி அழைப்பெடுத்தார். "சேர்... மோசாய் நியூசிலாந்திலிருந்து புறப்பட அவ்வளவாக ஆர்வப்படவில்லை போல தெரிகிறது. வேறு ஏதாவது ஒப்ஷன் இருக்கிறதா?" என்றார்.

"இல்லையில்லை... அவர் கட்டாயம் நேரில் வர வேண்டும். அதற்கு பயண ஏற்பாடு செய்கிறோம் தானே"

"இல்லை.. அவர் பெரிதாக எதிர் பார்க்கிறார் போல"

"ம்... எவ்வளவு"

"நானும் இதில் இருக்கிறேன் அல்லவா. இரண்டையும் சேர்த்துதான் சொல்லலாம்"

"சொல்லுங்கள்"

ஒரு கணமும் யோசிக்காமல் சொன்னார். அந்த தொகை அப்போது ஒரு பத்திரிகையையே ஆரம்பிக்கக்கூடிய தொகை!

மக்னெல் ஒரு தயக்கமுமின்றி சம்மதித்தார்.

அடுத்தடுத்த வாரத்தில் மோசாய் பிரித்தானியாவிற்கு புறப்பட்டார். அவர் நியூசிலாந்தில் இருந்து புறப்பட்ட பின்னர்தான் மார்ட்டினிற்கு விசயம் தெரிந்தது. ஏதோ விவகாரமென்பதை புரிந்து, ரடாஹிக்கு தொலைபேசி அழைப்பேற்படுத்தி, மோசாய் பற்றி கேட்டார். தனக்கு எதுவும் தெரியாதென ரடாஹி சத்தியம் செய்தார்.

கே.ஜி.பி நெற்வேர்க் உசாரடைந்து மேசாயை தேட தொடங்கியது. அதே சமயம், பிரித்தானியாவிற்கு சென்ற மோசாயை தொடர்புகொள்ள முயன்றார் ரடாஹி. பலனில்லை. டெய்லி நியூஸ் ஆசிரியரை தொடர்பு கொள்ள முயன்றார். பலனில்லை. பத்திரிகை அலுவலகத்தை தொடர்புகொண்டால், ஆசிரியர் வெளியில் சென்று விட்டார்கள் என்றபடியிருந்தார்கள்.

எங்கோ தவறு நடந்து விட்டதென ரடாஹியின் உள்மனம் சொல்ல தொடங்கியது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உதவிக்கு வரும் உயிரியல் - 12

# மட்க வைப்பதில் மன்னன் ஆக்டினோமைசஸ்!

முனைவர் அ.உதயகுமார்

இந்த உலகம், மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உள்படக் கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம். நாம்தான், உலகை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சிகளும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தாம்.

நுண்ணுயிர்கள் என்றாலே மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படியில்லை. தனது அனைத்துப் படைப்பிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது இயற்கை. ஒரு வாசல் அடைத்தால், இன்னொரு வாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்தச் சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நுண்ணுயிர்களைப் பற்றிய புரிதலே இந்தத் தொடர்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்திச் சாகுபடி செய்யும்போது விளைபொருள்கள் நஞ்சாகின்றன என்ற விழிப்பு உணர்வு தற்போது மக்களிடம் பெருகி வருகிறது. நம்முடைய நலம் பற்றி யோசிக்கும் நாம், மண்ணுடைய நலம் பற்றி யோசிப்பதில்லை என்பதே உண்மை.

'இரசாயன உரங்களை இட்டு விவசாயம் செய்தால், மண் மலடாகும் என்று சொல்கிறார்கள். நிலத்துக்கு வளம் சேர்க்கத்தானே பணத்தைச் செலவு செய்து உரங்களை இடுகிறோம். அதனால், நிலம் வளமாகத்தானே வேண்டும். ஏன் மலடாகிறது' என ஒரு வெள்ளந்தி விவசாயி என்னிடம் கேட்டார். அவர் உரம் போட்டால் நிலம் வளமாகும், பயிருக்குத் தேவையான சத்துகள் கிடைக்கும் என்ற புரிதலில் இருக்கிறார். இப்படித்தான் பலரும் நினைப்பார்கள். இயற்கை உரமோ, இரசாயன உரமோ எதைப் பயன்படுத்தினாலும் பயிருக்குச் சத்துகள் கிடைக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், மண்ணை உயிர்ப்புடன் வைத்திருப்பவை நுண்ணுயிர்கள்தாம். இரசாயன உரம் போடும்போது அதிலுள்ள வேதிப்பொருள்களின் வீரியத்தைத் தாங்க முடியாமல் நுண்ணுயிர்கள் மடிந்து விடுகின்றன. இயற்கை உரங்களில் நுண்ணுயிர்கள் உயிர்வாழத் தேவையான பொருள்கள் அடங்கியிருப்பதால், நுண்ணுயிர்கள் மடிவதில்லை. இதுதான் இரசாயன உரத்துக்கும் இயற்கை உரத்துக்கும் உள்ள வித்தியாசம்.

மண்ணை வளமாக்கும் நுண்ணுயிர்களில் முக்கியமானது ஆக்டினோமைசஸ் (Actinomyces). இது ஒரு செல் வகை நுண்ணுயிர். பக்டீரியாக்களால் மட்க வைக்க முடியாத பொருள்களையும்கூட மட்க வைக்கும் திறன் வாய்ந்தது இந்த ஆக்டினோமைசஸ். எனவே, எளிதில் மட்காத பொருள்களை மட்க வைக்க இந்த நுண்ணுயிரியைப் பயன்படுத்தலாம். பச்சை இலைகளைக்கூட விரைவாக இது மட்க வைக்கும். மண்ணிலுள்ள பொருள்களை மட்க வைப்பதுடன், மண்ணில் ஹியூமஸை அதிகப்படுத்தும் பணியையும் சிறப்பாகச் செய்கிறது. அனைத்து வகை மண்ணிலும் இது இயற்கையாகவே இருக்கும் என்றாலும், அதிகத் தண்ணீர் தேங்கும் மண்ணில் இருப்பதில்லை. அதேபோல, மண்ணின் கார அமிலத்தன்மை 6 முதல் 8 புள்ளிகள் வரை இருக்கும் இடங்களிலும் இருப்பதில்லை.

அதிக வெப்பநிலையுள்ள (தோராயமாக 65 டிகிரி செல்சியஸ்) இடங்களிலும் இது உயிர்வாழும். மழை பெய்யும்போது மண்ணிலிருந்து வருகிற சுகந்தமான மண் வாசனைக்கு இந்த நுண்ணுயிரும் ஒரு காரணம். இலங்கையை பொறுத்தவரை இந்த நுண்ணுயிர் பற்றிய விழிப்பு உணர்வும் விவசாயத்தில் அதன் பயன்பாடும் துளி அளவிலும் இல்லை. இந்த நுண்ணுயிரை வியாபார ரீதியாக யாரும் உற்பத்தி செய்வதாகவும் தெரியவில்லை.

அடுத்து மண்ணிலுள்ள நுண்ணுயிர்களைப் பாதுகாக்கும் முறைகளைப் பார்ப்போம். பூங்காக்களிலோ, சரணாலயங்களிலோ வைத்து நுண்ணுயிர்களைப் பாதுகாத்துவிட முடியாது. மண்ணில் அங்ககத் தன்மையை அதிகரிப்பதன் மூலமாகத்தான் நுண்ணுயிர்களை ஓரளவு பாதுகாக்க முடியும். களைக்கொல்லிகள், இரசாயன உரங்கள், இரசாயனப் பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைத் தவிர்த்தாலே, மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் பாதுகாப்பாக இருக்கும்.

தோட்டங்களில் ஆங்காங்கே மரங்களை வளர்ப்பது, ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதைத் தவிர்ப்பது, ஊடுபயிர் பயிரிடுவது போன்ற செயல்கள் மூலமாக நுண்ணுயிர்களை மண்ணில் அதிகரிக்கச் செய்யலாம். தாவரக் கழிவுகளை நிலத்தில் மூடாக்காக இடுவதன் மூலமாகவும் இயற்கை இடுபொருள்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் நுண்ணுயிர்களைப் பாதுகாக்கலாம். இம்முறைகளை விடுத்து, ஆய்வுக்கூடங்களில் மட்டுமே நுண்ணுயிர்களைப் பாதுகாக்க முடியும்.

ஜப்பான், அமெரிக்கா, மலேசியா ஆகிய நாடுகளில், ஆய்வுக்கூடங்களில் நுண்ணுயிர்கள் வளர்க்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. இலங்கையில் அப்படி


இயற்கை கொடுத்துள்ள அருட்கொடையான, ஊதியம் இல்லாமல் ஊழியம் செய்யும் நுண்ணுயிர்களை நாம் பாதுகாக்காவிட்டாலும், அவற்றைத் தொந்தரவு செய்யாமல் இருந்தாலே மண் வளமாகும். சாகுபடி அதிகமாகும்.

பரவும்...

### இ.எம் திரவத்தை எத்தனை நாள்கள் இருப்பு வைக்கலாம்?

ஒரு லிட்டர் இ.எம் தாய்த் திரவத்திலிருந்து 100 லிட்டர் செறிவூட்டப்பட்ட இ.எம் திரவம் தயாரிக்கலாம் எனத் தெரிவித்திருந்தேன். செறிவூட்டப்பட்ட இ.எம் திரவத்தை எத்தனை நாள்கள் இருப்பு வைக்கலாம் என்று பலரும் கேட்கிறார்கள்.

செறிவூட்டப்பட்ட இ.எம். திரவத்தை 90 நாள்கள் வரை வைத்திருக்கலாம். தயாரித்து 90 நாள்கள் கடந்தும் இ.எம் திரவம் மீதம் இருந்தால், 20 லிட்டர் செறிவூட்டப்பட்ட இ.எம் திரவத்துக்கு ஒரு கிலோ வெல்லம் என்ற விகிதத்தில் சேர்த்து ஏழு நாள்கள் வைத்திருந்து மீண்டும் பயன்படுத்தலாம். ஆனால், ஒருமுறை தயாரித்த செறிவூட்டப்பட்ட இ.எம் கரைசலை 90 நாள்களுக்குள் பயன்படுத்தும்போதுதான் அதன் முழுமையான பலன் கிடைக்கும். மீண்டும் மீண்டும் செறிவூட்டிக்கொண்டே போகும்போது வீரியம் குறைய வாய்ப்பிருக்கிறது.






ஆக்டினோமைசஸ் நுண்ணுயிர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய்ப், சமார் பதாவி ஆகிய இருவரும் சவூதி அரேபியாவில் மனித உரிமைக்காகக் குரல்கொடுக்கும் சகோதர, சகோதரிகள். சவூதி அரேபியாவின் சட்டங்களின்படி குடும்பத்தின் ஆண் உறுப்பினர்கள் தான் அக்குடும்பப் பெண்களின் பாதுகாவலர்கள். பாதுகாவலர்களுடைய விருப்பத்துக்கெதிராகப் பெண்கள் எதையும் செய்யமுடியாது.

சமார் பதாவிக்கு எதிராக அவரது தந்தை "தன்னை எதிர்த்து நடக்கிறார்," என்று நீதிமன்றம் சென்றார். மகளோ தந்தைக்கு எதிராக "என்னைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கிறார் இல்லை என் அப்பா," என்று வழக்குப் பதிவு செய்தார். தந்தைக்கு அடங்காததற்காக மகளைச் கைது செய்தது அரசு.

வழக்குக் காலத்தில் தனது வழக்கறிஞரான வலீத் என்பவர் மீது காதல் கொண்டு பின்பு அவரைத் திருமணம் செய்துகொண்டார் சமார். அவர்களிருவருமே சவூதி அரசு மனித உரிமைகளை மீறுவதை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள்.



# உலக யன்னல்

தேசமித்ரன்

சமாரின் சகோதரன் ரய்ப் பதாவி ஒரு புளொக் பக்கம் ஆரம்பித்து அதன் மூலம் சவூதி அரசு நாட்டு மக்களுக்கு நாட்டின் அரசியலில் ஈடுபட இடம் கொடுக்கவேண்டும், நாட்டின் அரசியல் விடயங்கள் பகிரங்கமாக விவாதிக்கப்படவேண்டும் என்று குரல் கொடுத்தார். அவரை அரசு கைதுசெய்தது. அவருடைய வழக்கறிஞராகக் குரல் கொடுத்தவர் சமாரின் கணவர் வலீத் அப்துல்கைர். அரசாங்கமோ வழக்கறிஞரையும் சிறையில் போட்டது.

2013 14 இல் நடந்த வழக்குகளில் ராய்ப் 10 வருடச் சிறைத் தண்டனை அனுபவித்து பொது மேடையில் 1,000 கசையடிகள் பெறவேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. அத்தீர்ப்பின்படி 2015 இல் முதல் தடவையாக 50 கசையடிகள் ராய்ப்புக்குக் கொடுக்கப் பட்டன. சர்வதேச ரீதியில் கடுமையாக விமர்சிக்கப்பட்ட அத்தண்டனையின் பின்பு பல தடவைகள் பின்போடப்பட்ட கசையடித் தண்டனை தொடர்ந்தும் நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்தும் சிறையில்வைக்கப்பட்டிருக்கும் அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

ராய்ப் பதாவியின் மனைவி என்சாப் ஹைதார் தனது மூன்று குழந்தைகளுடன் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து இவ்வருட ஆரம்பத்தில் கனடியக் குடிகளானார்கள். அவர் கனடாவில் இருந்துகொண்டு சவூதி அரேபியாவின் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துவருகிறார்.

சவூதி அரேபியாவுடன் ஆயுதங்கள் உட்பட பல வர்த்தகங்கள் செய்துவரும் கனடா கடந்த வருடங்களில் சவூதி அரேபிய அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றிக் குரல் கொடுத்துவந்தது. தங்களுக்கு சுமார் 15 பில்லியன் டொலர்களுக்கு ஆயுத விற்பனை செய்து மற்றும் பல தொழில் நுட்பங்களையும் விற்பனை செய்யும் கனடா தங்களது அரச குடும்பத்தையும் அதன் நடவடிக்கைகளையும் விமர்சிப்பதை சவூதி அரேபிய அரசு விரும்பவில்லை.

இன்னொரு பக்கத்தில் தனது மக்கள் மீதும், பக்கத்து நாடுகள் மீதும் சவூதி அரேபியா பாவிக்கும் ஆயுதங்களை விற்பனை செய்தமைக்காகக் கனடாவின் மீது பல மனித உரிமை அமைப்புக்கள் விமர்சனம் செய்து வந்தன. அவ்விமர்சனங்களை எதிர்நோக்க சவூதி அரேபியாவுடன் கனடா செய்யும் வர்த்தக விபரங்களை கனடிய அரசு பகிரங்கப்படுத்தும் நிலையும் உண்டாகியது. அதையும் சவூதி அரேபியா விரும்பவில்லை.

சவூதி அரேபியாவின் இளவரசர் முஹம்மது பின் சல்மான் பெண்ணுரிமைகள் பற்றிக் குரல் கொடுத்து நாட்டில் பெண்களுக்குப் புதிய உரிமைகள் கொடுத்தாலும் மனித உரிமைகள் மீறுவதில் சவூதிய அரசு தனது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை, என்பதைப் பல சவூதி அரேபிய மனித உரிமைவாதிகளும் விமர்சித்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் சமார் பதாவி.

அரசை விமர்சிப்பவர்களைச் சிறையில் அடைத்து வந்த சவூதிய அரசு சில வாரங்களுக்கு முன்பு மீண்டும் சமார் பதாவியையும் மற்றும் சில பெண்ணுரிமை இயக்கத்தினரையும் கைது செய்து விட்டதாகத் தெரியவந்தபோது பல நாடுகளும் அமைப்புக்களும் சவூதி அரேபியாவை விமர்சித்தன. கனடியப் பிரதமரும் "சவூதி அரேபியா அரசின் மனித உரிமைக்கெதிரான நடவடிக்கைகள், மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது," என்று பகிரங்கமாக விமர்சித்தார்.

கனடாவின் விமர்சனத்தால் கோபமடைந்த சவூதி அரேபிய அரசு அங்கிருக்கும் கனடியத் தூதுவர் 24 மணிக்குள் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. அத்துடன் கனடாவுடனான வர்த்தகங்கள் சகலதும் துண்டிக்கப்படும் என்றும், புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படாது என்றும் அறிவித்திருக்கிறது. கனடாவில் உயர்கல்வி கற்கும் சவூதி அரேபிய மாணவ, மாணவிகளுக்கு வேறு நாடுகளில் கல்வி கற்க உதவி செய்யும் என்றும் சவூதி அரேபியா அறிவித்திருக்கிறது.

---

கடந்த அறுபது வருடங்களாக நடந்த அரசியல் வன்முறைகளால் கொலம்பியாவில் கொல்லப்பட்டவர்கள் தொகை சுமார் 260,000 பேர் என்று நம்பகரமான ஒரு கணக்கெடுப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

காணாமல் போனவர்கள் என்று அறிவிக்கப்பட்ட 80,000 பேர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதைத் தவிர இதற்கு முன்பு 1948 1958 காலத்தில் நடந்த அரசியல் வன்முறைகளில் இறந்தவர்கள் மேலும் 200,000 பேர்கள் என்று குறிப்பிடப்படுகிறது.




---

பல நாடுகள் ஏற்கனவே ஈரானுடனான வர்த்தகத் தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டிருப்பதாலும், அமெரிக்கா கொடுத்துவரும் வர்த்தக, அரசியல் அழுத்தங்களாலும் ஏற்கனவே ஈரான் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஈரான் நாட்டின் நாணய மதிப்பு அமெரிக்கா அறிவித்த அணுத் தொழில்நுட்ப ஒப்பந்த முறிவு நாள் முதல் விழ ஆரம்பித்துத் தனது பாதி மதிப்பை இழந்து, தொடர்ந்தும் வீழ்ந்து வருகிறது.

வைகாசி மாதத்தில் டிரம்ப் அறிவித்த அணுத்தொழில்நுட்பஒப்பந்தமுறிவின் முதலாவது கட்டமான வர்த்தகக் கட்டுப்பாடுகள் 06.08 திங்களன்று அமுலுக்கு வருகின்றன. இதுவரை கடந்த மூன்று "தயார்ப்படுத்தும்" மாதங்களில் பெரும்பாலான உலக நாடுகள் ஈரானுடன் வர்த்தகம் செய்வதை வெகுவாகக் குறைத்துக்கொண்டு விட்டன.

தங்கம், இரும்பு, அலுமினியம் போன்ற உலோகப் பொருட்களை ஈரானிடமிருந்து உலக நாடுகளெதுவும் இறக்குமதி செய்யலாகாது என்ற வர்த்தகக் கட்டுப்பாடுதான் முதலாவது கட்டத்தில் அ[illegible] மூன்று மாத[illegible]





கட்ட வர்த்தகக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அது ஈரானுடன் எவரும் எவ்வித பொருட்களையும் வாங்கவோ விற்கவோ கூடாது என்பதாகும்.

ஈரான் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பாவோ, மற்றைய நாடுகளோ ஆதரவு கொடுக்காவிட்டாலும் ஈரானுடன் வர்த்தகம் செய்பவர்களை அமெரிக்கா "தண்டிக்கும்" என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் [illegible] பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவின் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப் பட்டிருக்கின்றன. சமீப வாரத்தில் பாரசீக வளைகுடாவில் ஈரான் தனது இராணுவப் பயிற்சிகளைச் செய்துவந்ததாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்காவும், ஈரானும் தங்களிடையே காட்டமான போர் அறிவிப்பு எச்சரிக்கைகளைப் பரிமாறிக்கொண்டிருந்தாலும் "ஈரானியத் தலைவர்கள் விரைவில் என்னைச் சந்திப்பார்கள்," என்று டிரம்ப் தெரிவித்திருக்கிறார்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





12-ம் பக்க தொடர்ச்சி...

மூன்று தளங்களைக் கொண்ட படகு அது. நாங்கள் அதன் நடுத்தளத்தில் இருந்தோம். மேலே இருக்கும் தளம் ஏற்கனவே நிறைந்திருந்தது. அதிலே இருப்பவர்களுக்கு பார்க்க வசதியாக இருப்பினும்வெயிலின் காட்டத்தையும் அனுபவிக்கவேண்டியதாக இருக்கும். அத்தளத்தின் ஒரு பகுதி மட்டும் கூரையின் கீழிருந்தது.

"நான் படகைச் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்," என்று சொல்லிவிட்டு உற்சாகத்துடன் கதிர் மேல்தட்டை நோக்கி ஏறிப்போனான். அங்கிருந்து ஓடிவந்து தான் பார்த்த வற்றையெல்லாம் என்னிடம் சொல்லி விட்டு நாங்களிருந்த தளத்தையும் அதன் கீழுள்ள தளத்தையும் பார்க்க ஓடிவிட்டான்.

படகு இயந்திரம் உறுமலுடன் ஆரம்பிக்கும் நேரம் திரும்பி ஓடிவந்த கதிர் பக்கத்தில் இருந்து ஆர்வத்துடன் கவனித்தான். அடுத்திருந்த இரண்டு படகுகளிடையே ஒதுங்கிக்கொண்டு துறைமுகத்திலிருந்து வெளியே வந்த எங்கள் படகு மெதுவாக வேகம்பிடித்து அதிரியாட்டிக் கடலுக்குள் ஓட ஆரம்பித்தது.

பிரயாணத்தின் முதல் கட்டத்தி லேயே கண்ணைக் கவரும்படியாகத் தெரிந்தது டுப்ரோவ்னிக் நகருக்குள் நாங்கள் நுழையும்போது பயணித்த பிராங்கோ துஜ்மன் பாலம். கனமான இரும்புக் கம்பிகள் தாங்கும் இப்பாலம் அந்த நகரின் முக்கிய அடையாளங்களில் ஒன்று. எங்களது படகு அதன் பக்கமாகப் போய் இடதுபக்கம் இருந்த நகரின் பபின் குக் பக்கமாகத் திருமியது.

சுமார் அரைக்கிலோ மிற்றர் நீளமான அப்பாலம் நீர் மட்டத்திலிருந்து 50 மீற்றர் உயரத்தில் தொங்குகிறது. செலவைப் பொறுத்தவரை அதுதான் கிரவேஷியாவின் மிக விலையு யர்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. நான்கு வருடக் கட்டுமானப் பணியின் பின்பு 2002 இல் கட்டி முடிக்கப்பட்ட அப்பாலத்தின் செலவு சுமார் 250 மில்லியன் கிரவேஷிய குணாக்கள் [ஒரு அமெரிக்க டொலர் = 6,5 குணாக்கள்] என்று குறிப்பிடப்படுகிறது.

"டுப்ரோவ்னிக் பாலம்" என்ற பெயருடன் 1990 இலேயே திட்ட மிடப்பட்டு பாலம் யூகோஸ்லாவி யாப் பிளவுப் போர் ஆரம்பித்த தால் தடைப்பட்டது. அது கட்டி முடிக்கப்பட்டபோது அப்பிராந்தி யத்தில் இருந்த பல அரசியல் போட்டி களால் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு பெயர்ப் பலகைகளுடன் காணப்பட்டது. அதனால் அப்பிரச் சினைகளைத் தீர்க்க கிரவேஷி யாவின் முதலாவது ஜனாதிபதியின் பெயரை அதற்கு வைக்க டுப்ரோவ் னிக் மேயர் முடிவுசெய்தார். அது தான் பிராங்கோ துஜ்மன் பால மாகியிருக்கிறது.

இப்போது மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருக்கும் ஆரம் பத்தில் டுப்ரோவ்னிக் நகர் ஒரு தீவாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இத்தீவுக்கும் கிரவேஷிய நிலப்பகுதிக் கும் இடையே இருந்த ஜலசந்தி 1000 ம் ஆண்டுப் பகுதியில் இயற்கை யான நில உயர்வால் நிரவியது.

எங்கள் வலப்பக்கமாக கிரபேனி என்றழைக்கப்படும் சிறு தீவுகளும் பாறைகளுமான பகுதி தெரிய ஆரம் பித்தது. அப்பாறைகளின் வெவ்வேறு வடிவங்களைச் சுட்டிக்காட்டி எனது மகன் வெவ்வேறு மிருகங்கள், பறவைகள் போல இருப்பதாகச் சொல்லிக்கொண்டு வந்தான். தீவுகள் நடுவே பச்சைப் பசேலென்றும் கரைப்பகுதிகள் பாறைகளாகவும் தெரிந்தன.

அச்சிறுபாறைகளொன்றில் ஒரு கலங்கரை விளக்கம் தெரிந்தது. அதனுடன் இணைத்துக் கட்டப்பட்டி ருக்கும் கட்டடத்தில் தங்குவதற்கு வாடகைக்கு எடுக்கக்கூடிய உல்லாச அறைகள் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உல்லா சப் பயணிகள் வரும் உச்சக்கட்டக் காலத்தில் ஒரு இரவுக்குச் சுமார் 1,500 டொலர்கள் செலவில் இருவர் தங்குவதற்கான அறைகள் கிடைக் கின்றன.

கிரபேனித் தீவுகளைத் தாண்டி யவுடன் மீண்டும் எங்களைச் சுற்றி நீலக்கடல்தான் தெரிந்தது. சிற்றுண்டிச் சாலையில் சென்று கதிர் தனக்கு ஒரு ஐஸ் கிரீம் வாங்கிக்கொண்டு வந்தான். நான் ஒரு கிளாஸில் வெள்ளை வைன் எடுத்துக்கொண்டு வந்தேன். சுவைத்தபோது அது மிகவும் மலிவான பழரசம் என்று புரிந்தது. மிகவும் புளிப்பாக இருந்தது. இன்னுமொரு முறை குடிக்க ஆர்வமில்லாமல் போனது. இதுபோன்ற சுற்றுலாக்களில் வேண்டுமளவுக்கு வைன் குடிக்கலாம் என்று விளம்பரம் செய்வதன் உத்தி புரிந்தது.

அச்சமயத்தில் எங்களது இடது பக்கமாக டுப்ரோவ்னிக் பழைய நகரம் தெரிய ஆரம்பித்தது. **தொடரும்...**



விரும்பாத தனிமையை அனுபவிப் பவர்களின் ஆரோக்கியம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகிறது என்று பல ஆராய்ச்சிகளும் குறிப்பிடுகின்றன. சேர்ந்து வாழ விரும்பியும் அதற்கான சந்தர்ப்பமின்றித் தவிப்பவர்களின் ஆரோக்கியம் நாளுக்கு 15 சிகரட்டுக்கள் புகைப்பவர்களின் நிலைக்கு ஈடாகப் பாதிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் மக்களில் ஏழில் ஒரு பங்கினர் பகுதி நேரத்திலோ அல்லது முழுவதுமாகவோ தனிமையால் பாதிக்கப்படுகிறார்கள். நாட்டின் மருத்துவ நிலையங்களுக்கு விஜயம் செய்பவர்களில் இருபது விகிதமான வர்கள் விரும்பாத தனிமையால் வாடுபவர்களாக இருக்கிறார்கள்.

அதனால் பல மருத்துவர்களும் தனிமையால் பாதிக்கப்பட்டுத் தங்க ளிடம் வருபவர்களுக்கு அவர்கள் வாழும் பகுதியிலிருக்கும் சங்கங்கள், குழுக்கள் போன்றவற்றில் சேர்ந்து கொள்ளும்படி எழுதிக்கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். நாட்டின் 25 விகிதமான மருத்துவர்கள் அப்படியான ஆலோசனைகளை எழுதித் தங்களிடம் வரும் தனிமை நோயாளிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

அதன் விளைவாக மீண்டும் மீண்டும், மருத்துவரை நாடுபவர்கள் குறைந்து வருவதுடன் நாட்டின் ஆரோக்கிய சேவைக்கான அரசின் செலவுகளும் குறைவதாகக் கணிப் பிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் அரசு தனது குடி மக்களில் விருப்பமில்லாமல் தனிமை யால் வாடுபவர்களின் நிலையை மாற்றச் சுமார் 25 மில்லியன் பவுண்டு களைச் செலவிடப்போவதாக அறிவித்திருக்கிறது. அதன் மூலம் பல சிறு குழுக்கள் வெவ்வேறு இடங்களில் உருவாக்கப்படும். தனிமையில் வாடுபவர்களை ஒன்றுசேர்த்து விளை யாட்டு, பொழுதுபோக்கு போன்ற பொழுதுபோக்கு அம்சங்களில் இணைக்க ஒழுங்குகள் செய்யப்படும்.

நியூசிலாந்தின் 38 வயதுப் பெண் பிரதமர் ஜஸிந்தா ஆர்டெய்ன் பிரசவ விடுமுறையாக ஆறு வாரங்களை அனுபவித்துவிட்டு வேலைக்குத் திரும்பியிருக்கிறார். அரசியலில் உயர் பதவிகளில் இருக்கும் பெண்கள் தங்கள் கடமைக் காலத்தில் கர்ப்பம் தரித்துப் பிள்ளை பெற்றுக்கொள்வது சாதாரணமாக நடப்பதில்லை.

1990 இல் பாகிஸ்தான் பிரதமராக இருந்த பெனாசிர் புட்டோ தான் பதவியிலிருக்கும் காலத்தில் கர்ப்ப மடைந்து பிள்ளை பெற்றுக்கொண்ட முதலாவது பிரதமராகும். ஜஸிந்தா அவ்வரிசையில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறார்.

ஜஸிந்தா மீண்டும் தனது கடமைக்கு வருவதைஎதிர்நோக்கி பாராளுமன்றக் காரியாலயம் குழந்தைகளுக்கு உகந்ததாக மாற்றப்பட்டிருக்கிறது. கைக்குழந்தையான அவரது மகள் காரியாலயத்தில் தேவையானபோது தனது தாயைச் சந்திக்கும்படியான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நீண்ட காலமாக பலமான தலைமையில்லாமல் இருந்த நியூசிலாந்தின் தொழில் கட்சியின் தலைவராக நாட்டின் பொதுத் தேர்தலுக்கு ஒரு சில வாரங்களுக்கு முதல் பதவியேற்றுக்கொண்டவர் ஜஸிந்தா. அவரது ஒரு வருட ஆட்சியின் பின்பு நாட்டில் முன்பு எந்தத்தலைவரும் பெறாதவரவேற்பை அவரது தலைமை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் புலிகளின் இரகசிய ஒப்ரேஷன்!

## எங்கே... ஏன் சறுக்கியது தெரியுமா?

பீஷ்மர்

யுத்தத்தின் இறுதிக்கட்டம். புதுக்குடியிருப்புத்தான் புலிகளின் கடைசி கோட்டை. புதுக்குடியிருப்பை விட்டு பின்வாங்குவதில்லையென பிரபாகரன் முடிவெடுத்ததையும், அதற்கேற்ப புலிகளை இரண்டாக பிரித்து ஒரு அணியை புதுக்குடியிருப்பில்நிலைகொள்ள வைத்ததையும் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். புலிகளின் அனேகமான தளபதிகள் புதுக்குடியிருப்பில்தான் நிலைகொள்வதென திட்டமிடப்பட்டது: அந்த அணியை பிரபாகரனே நேரடியாக வழிநடத்துவார்.

மற்றைய அணி, மாத்தளன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான சிறிய நிலப்பரப்பில் நிலை கொண்டிருந்தது. இந்த அணிக்கும் பிரபாகரன் தலைமையில் புதுக்குடியிருப்பில் நிலைகொண்டிருந்த அணிக்குமிடையிலான தரைவழி தொடர்பை இராணுவம் துண்டித்தாலும், இரண்டு இடங்களிலும் அணிகள் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நீரேரிக்கு அப்பால் நிலைகொண்டிருந்த அணிகள் யாருடைய கட்டளையின் கீழ் செயற்பட்டன என்பதை இந்த வாரம் குறிப்பிடுவதாக, கடந்த பாகத்தை முடித்திருந்தோம்.

இந்த தொடரின் ஆரம்ப பகுதியில் நாம் குறிப்பிட்ட விடயமொன்று விடுதலைப்புலிகளின் கணினி பிரிவு பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனியின் கீழ் உருவாக்கப்பட்டது. எல்லா படையணிகளில் இருந்தும் ஆளணியும், வளங்களும் அந்த படையணிக்கு கொடுக்கப்பட்டது.




வன்னியில் அப்போது தீவிரம் பெற்றிருந்த கட்டாய ஆட்சேர்ப்பில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க, கணினி பிரிவில் தமது பிள்ளைகளை பெற்றோர் ஒப்படைத்தனர். மற்ற படையணிகளில் இணைக்கப்பட்டால் நேரகாலத்துடன் யுத்தமுனைக்கு அனுப்பப்பட்டு விடுவார்கள் என நினைத்தார்கள். கணினி பிரிவில் இணைக்கப்பட்டால் இப்போதைக்கு சண்டைக்கு போகத் தேவையில்லையென்ற நிலைமையை புலிகளும் ஏற்படுத்தியிருந்தனர்.

இப்படி கணினி பிரிவில் பெரும்பாலானவர்கள்இணைய,அதுமிகப்பெரிய படையணியாகியது. ஆனந்தபுரம் ஙிளிஙீ உருவான சமயத்தில் கணினி பிரிவு போராளிகள் மாத்தளன், பொக்கணை, முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நிலைகொண்டிருந்தனர். மற்றைய படையணிகளின் தீவிரமான சண்டை போராளிகள் ஆனந்தபுரத்தில் நிலைகொண்டிருந்தனர்.


பிரபாகரன் - சாள்ஸ் அன்ரனி

மாத்தளன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான நிலப்பகுதியில் நிலைகொண்டிருந்த புலிகளின் மற்றைய அணிக்கு பொட்டம்மானும், சாள்ஸ் அன்ரனியும் தலைமைதாங்கினார்கள். வேலவன், குமரன் போன்ற இளநிலை தளபதிகளும் அங்குதான் தங்கியிருந்தனர். நந்திக்கடலோரமாக இராணுவம் ஊடறுத்து, புலிகளை இரண்டாக பிளவுபடுத்தி, தரைத்தொடர்பை துண்டித்தால் இரண்டு அணிகளும் சுயாதீனமாக இயங்க வேண்டும், நெருக்கடியில் சிக்காமல் தாக்கு பிடிக்க வேண்டுமென்பதற்காக உணவு தொடக்கம், வளங்கள் வரை அனைத்தையும் இரண்டாக பிரித்தார்கள். ஆனந்தபுரம் கடுமையான போர்க்களமாக இருக்கும் என்பதால் அங்குதான் அதிகளவான போராளிகளும், போராயுதங்களும் நிலைகொள்ள வைக்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் நெருக்கடியான சமயங்களில் தங்கள் அமைப்பை இரண்டு நிர்வாகங்களாக பிரித்த சம்பவம் இது முதல்முறையல்ல. இதற்கு முன்னரும் அப்படியொரு சம்பவம் நடந்தது.

1997 இல் ஏ9 வீதியை கைப்பற்றி வன்னிக்குள் புலிகளை இரண்டு கூறாக் பிரிக்கும் நோக்கத்துடன் இராணுவம் பிரமாண்டமாக ஜெயசிக்குறு படைநடவடிக்கையை ஆரம்பித்தது. அதற்கு எதிராக புலிகளும் கடுமையாக போரிட்டார்கள். ஈழப்போரின் அதுவரையான காலப்பகுதியில் மிகப்பெரும் படைநடவடிக்கையாக அதுதான் இருந்தது. "சமர்களிற்கெல்லாம் தாய்ச்சமர்" என பிரபாகரன் அந்த மோதல் பற்றி சிலாகித்து உரையாற்றியிருந்தார் என்றால், அதன் இராணுவ முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுங்கள்.

ஆனையிறவில் இருந்து முன்னேறி வந்த இராணுவம் கிளிநொச்சி நகரை கைப்பற்றியிருந்தது. வவுனியாவிலிருந்து முன்னேறி வந்த ஜெயசிக்குறு இராணுவம் மாங்குளம் சந்தியை கைப்பற்றிவிட்டது. ஏ9 வீதியில் தொட்டுவிடும் தூரத்தில் இரண்டு இராணுவ முனைகளும் இருந்தன. இராணுவம் ஏ9 வீதியை முழுமையாக கைப்பற்றும் நிலைமை உருவாகலாமென்று கணித்து, அதற்கேற்ப சில முன்னாயத்த நடவடிக்கைகளில் புலிகள் இறங்கினார்கள்.

ஏ9 வீதியை இராணுவம் கைப்பற்றினால் வன்னியின் கிழக்கிலுள்ள புலிகளிற்கும், மேற்கிலுள்ள புலிகளிற்கும் தரைத்தொடர்பு துண்டிக்கப்பட்டு விடும். இராணுவம் ஊடறுக்கிறது என்பதற்காக, ஏதாவதொரு பக்கத்திலிருந்து பின்வாங்கவும் புலிகள் விரும்பவில்லை. ஒரு மாற்று ஏற்பாடு செய்தனர்.

புலிகளின் நிர்வாகத்தை வன்னி கிழக்கு, மேற்கு என பிரித்தார்கள். இரண்டு பகுதியிலும் மருத்துவமனை, சமையல்கூடங்கள், ஆயுதகளஞ்சியங்கள் நிறுவி, படையணிகளையும் பிரித்து, நிர்வாக செயற்பாட்டையும் [illegible]. ஆனால் அதற்கு தேவை ஏற்படவில்லை. இராணுவத்தால் ஏ9 வீதியை கைப்பற்ற முடியவில்லை.

இதேபோலத்தான் ஆனந்தபுரத்திலும், நீரேரிக்கு அப்பாலும் புலிகள் தமது கட்டமைப்பை இரண்டாக பிரித்தார்கள்.

இந்த பகுதியின் ஆரம்பத்தில் கணினி பிரிவை பற்றி குறிப்பிட்டிருந்ததால், அதையொட்டி இன்னொரு முக்கியமான சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும்.

இறுதியுத்தம் ஆரம்பித்த பின்னர் புலிகளால் சொல்லிக் கொள்ளும்படியான வலிந்த தாக்குதல்களை இராணுவத்தின் மீது நடத்த முடியவில்லையென்பதை இந்த தொடரின் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டு வருகிறோம். அதற்கான அவகாசமும், ஒன்றுகூடும் வாய்ப்பும் இராணுவத்தால் வழங்கப்படவில்லை. இதையும் மீறி புலிகள் இறுதியுத்த காலத்தில் நான்கு வலிந்த தாக்குதல்களை செய்தார்கள் என்பதை குறிப்பிட்டோம். அந்த நான்குமே வெற்றியளிக்கவில்லை.




முதலாவது, அம்பகாம காட்டுக்குள் நிலைகொண்டிருந்த இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல். சாள்ஸ் அன்ரனி அந்த தாக்குதலை வழிநடத்தினார். தாக்குதலிற்கு சென்ற அணிகள் இராணுவத்தின் முற்றுகைக்குள் சிக்கியது, முறையான திட்டமிடல்கள் இன்மை என சண்டை சொதப்ப,பாதியில்சாள்ஸ்அன்ரனியை சும்மா உட்கார வைத்துவிட்டு,பானுவை கட்டளை தளபதியாக்கி, அணிகளை பாதுகாப்பாக இராணுவத்தின் பிடியில் இருந்து வெளியில் எடுத்தார்கள். சாள்ஸ் அன்ரனி யுத்தகள அனுபவமற்றவர். அந்த துறை சார்ந்தவரும் அல்ல. என்றாலும், அவர் முன்னுரிமையளிக்கப்பட்டார். இறுதி யுத்தத்தில் புலிகளின் சில சொதப்பல்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


58வது டிவிசன் கட்டளை தளபதி சவேந்திர சில்வாவும், வன்னி நடவடிக்கை தளபதி ஜகத் ஜயசூரியவும்...




களிற்கு இதுவுமொரு காரணம்.

இதற்கடுத்தது, புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவில் இராணுவத்தின் மீது ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல். இதில் ஒரு கிலோமீற்றர் அளவிற்கு இராணுவம் தனது நிலைகளை பின்னகர்த்தி, இழப்புக் களை தவிர்த்தது. அது ஒரு தந்திரோ பாய நடவடிக்கை. புலிகளால் இராணு வத்திற்கு இழப்பை ஏற்படுத்தவோ, நிலப்பகுதியை மீட்கவோ முடிய வில்லை. ஜெயசிக்குறு அனுபவத்தின் அடிப்படையில், இறுதி யுத்தத்தில் இராணுவம் முன்னேறியதால் புலிகளின் வலிந்த தாக்குதல்களை இலகுவாக கையாண்டது.

இந்த இரண்டு தாக்குதல்களையும் பற்றி இந்த தொடரில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இறுதி யுத்தத்தில் புலிகள் செய்த மூன்றாவது, நான்காவது வலிந்த தாக்குதல்களை பற்றி பின்னர் எழுதுவதாக சொல்லியிருந்தோம். இப்போது, புலிகளின் மூன்றாவது வலிந்த தாக்குதலை பற்றி குறிப்பிடுகிறோம்.

காலஒழுங்கின்படி குறிப்பிட்டால், இது ஆனந்தபுரம் ஙிளிஙீ இற்கு சற்று முன்னராக காலப்பகுதியில் நடந்தது.

2009 மார்ச் மாதம். புதுக்குடி யிருப்பு சந்தியை இராணுவம் கைப்பற்றியிருந்தது. புதுக்குடியிருப்பின் உள்முனைகளை நோக்கி நகர முயன்று கொண்டிருந்தது. புதுக்குடியிருப்பை விட்டு, பின்நகர மாட்டேன் என பிரபாகரன் உறுதியாக அறிவித்த தால், தளபதிகளும் போராளிகளும் புதுக்குடியிருப்பை விட்டு பின்நகர் வதில்லையென்ற விடாப்பிடி மனநிலையுடன் போரிட்டு கொண்டி ருந்தார்கள். அதனால் புதுக்குடியிருப் பின் மேற்கு பகுதியிலிருந்து நகரை கைப்பற்ற முயன்று கொண்டிருந்த 53, 68வது டிவிசன் படையணிகள் முன்னேற முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள்.

இந்த சமயத்தில் இராணுவம் இன்னொரு உத்தியை பாவித்து, தேவிபுரத்தில் நிலைகொண்டிருந்த 58வது டிவிசனை புதுக்குடியிருப்பின் பின்பகுதியை நோக்கிஇரணைப்பாலை சந்தியை நோக்கி நகர வைத்தார்கள் என்பதை குறிப்பிட்டிருந்தோம். 58வது டிவிசன் படையினர்தான் இறுதி யுத்தத்தில் புலிகளிற்கு பேரிழப்பை ஏற்படுத்திய டிவிசன். போர்த்திறனும், அனுபவமும் உடைய படையினர். அவர்களிடம் புலிகளின் படையணிகளைவிட பலமடங்குஅதிக சூட்டுவலுவும் இருந்தது. தேவிபுரத்தின் பின்பகுதிக்கும், இரணைப்பாலை சந்திக்கும் இடைப்பட்ட பகுதி வித்தியாசமான நிலப்பரப்பு. வீதியின் ஒரு பகுதி அமர்ந்த காடு. இன்னொரு பகுதி சதுப்பு வெட்டை. அதிக சூட்டு வலுவுள்ள 58வது டிவிசன் படையணியை நேருக்குநேராக சந்திப்பதற்கு புலிகளிற்கு அவ்வளவு வாய்ப்பில்லாத களம். அதனால் விரைவாக அந்த முனையில் இராணுவம் முன்னேறி வந்தது.

அந்த முனையில் இராணுவத்தின் நகர்வை நிறுத்தவும், புதுக்குடியிருப்பு பகுதியை மீட்கவும் புலிகள் ஒரு திட்டம் தீட்டினார்கள். உண்மையில் பக்கா திட்டம் அது. ஆனையிறவை மீட்க குடாரப்பில் தரையிறங்கி புலிகள் மேற்கொண்ட தாக்குதலை போன்ற நல்ல திட்டம். ஆனால் இம்முறை காலமும், சூழலும் புலிகளிற்கு கைகொடுக்கவில்லை.

மாத்தளனிற்கும், சாலைக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள நந்திக் கடல் நீரேரியால் இரகசியமாக நகர்ந்து தேவிபுரத்தில் 58வது டிவிசன் படை யினருக்கு பின்பகுதிக்கு சென்று, அங்கு திடீரென பெரும் தாக்குதலை நடத்தி, பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, பின்னர் புதுக்குடியிருப்பில் நிலை கொண்டிருந்த இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்துவதுதான் திட்டம்.

இராணுவத்தின் முன்னரனை ஊடறுக்காமல், வேறு மார்க்கத்தால் இராணுவத்திற்கு பின்பகுதியில் செல்வது, அங்கிருந்து தாக்குதலை ஆரம்பிப்பதுதான் திட்டம். இப்படி நடந்தால் இராணுவம் நிச்சயம் திகைக்கும். ஓயாத அலைகள் 3 வெற்றி தாக்குதலை போலவும் இது அமையலாமென புலிகள் எதிர்பார்த்தார்கள்.

அப்படி பெருமெடுப்பில் தாக்குதல் நடத்த முடியாவிட்டாலும் கூட பரவாயில்லை, சிறுசிறு அணிகளாக பிரிந்து இராணுவத்தின் பின்தள பகுதியில் தொடர் தாக்குதல்கள் நடத்தி, இராணுவத்தை நிலைகுலைய வைக்கும் இன்னொரு மாற்று திட்டமும் புலிகளிடம் இருந்தது.

இந்த தாக்குதலிற்கான பிரதான கட்டளை தளபதிகள் இருவர். ஒருவர் மூத்த தளபதி சொர்ணம். மற்றையவர் பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனி. இதுதவிர, மூத்த தளபதி பானுவும் சென்றிருந்தார். இதில் இன்னொரு விசேசம் சாள்ஸ் அன்ரனி தன் கீழ் செயற்பட்ட கணினி பிரிவு போராளிகளை அதிக மாக இந்த தாக்குதலில் இணைத் திருந்தார். இந்த தாக்குதலில் புலிகள் சறுக்கிய புள்ளிகளில் ஒன்று இது. இந்தபெரும்தாக்குதலிற்குஅதிகளவான போராளிகள் தேவை. அப்போது புலிகளிடம் இருந்தது மிகக்குறைவள வான படையணிகள். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் கட்டாயமாக படைக்கு சேர்க்கப்பட்டவர்கள். அவர்களால் யுத்தம் புரிய முடியாது. தாக்குதல் விபரங்களை தொடர்ந்து படிக்கும்போது, வாசகர்களிற்கே அது புரியும்.

சுமார் 450 500 வரையான போராளிகள் இரண்டு முனையால் தேவிபுரத்திற்குள் நகர்ந்தார்கள். முதல் முனைஇரகசிய நகர்வு.நீரேரிக்குள்ளால் நகர்ந்து தேவிபுரத்தின் பின்பகுதிக்கு சென்றார்கள். தேவிபுரத்திலிருந்து முன்னேறிய 58வவது டிவிசன் இராணுவம் இரணைப்பாலைக்கு சமீபமாக முன்னேறியிருந்தது. இரணைப்பாலைக்கும், நந்திக்கடல் நீரேரிக்குமிடைப்பட்ட சிறிய பகுதிதான் புலிகளின் அணிகள் நிலைகொண்டிருந்தன.

அது சிறிய நிலப்பரப்பு. என்றாலும், தேவிபுரம் நடவடிக்கைக்கு தேவை யென்பதால் பின்வாங்காமல் தக்க வைத்திருந்தனர். அதாவது நீரேரிக்கு இந்தப்பக்கம் எல்லா அணிகளும் பின்நகர்ந்த பின்னரும், இரணைப் பாலை புதுமாத்தளன் வீதியை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, இரணைப்பாலை பக்கம் சுமார் எட்டு காவல்நிலைகளை புலிகள் அமைத்து வைத்திருந்தார்கள். சாதாரணமாக யாரும் இப்படியான நிலைகளில் நிலைகொண்டிருக்க முடியாது. எந்த பின்தள உதவியும் இல்லாத இடம். வெறும்எட்டுகாவல்நிலைகள் மட்டுமே. இதனால் அங்கு புலிகளின் கரும்புலி படையணியை சேர்ந்தவர்கள்தான் நிலைகொண்டிருந்தனர். எந்த நேரமும் இறப்பதற்கு தயாராகவே அங்கு நிலைகொண்டிருந்தனர்.

கிட்டத்தட்ட யுத்தசூனியப்பிரதேசம் போன்றது அது. பயங்கர ஆபத் தான பயணங்களை செய்தே அவர் களிற்கு உணவு, ஆயுதத்தளபாட சப்ளை களையெல்லாம் செய்ய வேண்டும். ஆனாலும், தேவிபுர ஒப்ரேசனை மனதில் வைத்து, அங்கு அணிகளை நிறுத்தி வைத்திருந்தனர்.

அந்த பகுதியால் இராணுவத்தின் முன்னரணை உடைத்து சில கனரக ஆயுதங்களை நகர்த்தும் திட்டமும் இருந்தது. ஏனெனில் கடல்நீரேரிக்குள் ளால் கனரக ஆயுதங்களை ஆட்கள் தூக்கியோ, இழுத்தோ செல்ல முடியாது. குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே கொண்டு செல்ல முடியும்.

இந்த தாக்குதலிற்கு போதுமான ஆளணி கிடைக்காமல் போனதும், அந்த நாட்களில் கட்டாயமாக இணைக்கப்பட்டவர்களையும் இணைத்தார்கள். கிட்டத்தட்ட மொத்த ஆளணியில் அரைவாசிப்பேர் கட்டாயமாக இணைக்கப்பட்டவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு வாரம் மட்டுமே இராணுவப்பயிற்சி வழங்கப்பட்டவர்கள். ஒரு துப்பாக்கியை கையில் கொடுத்து, இதை எப்படி சுடலாம் என்பதை மட்டும் சொல்லிக் கொடுக்கப்பட்டவர்கள்.

இளம் பெண்களை மனதில் வைத்து பாருங்கள். ஒரு துப்பாக்கியால் எப்படி சுடலாம் என்பதை மட்டும் அறிந்து வைத்துள்ளவர்களால், களத்தில் போரிட முடியாது. இராணுவ ரீதியில் உடலும், மனதும் தயாராக்கப் படாதவர்கள். வெறும் துப்பாக்கியை மட்டும் கையில் வைத்திருப்பதால், அவர்கள் போரிடும் ஆற்றலை பெறமாட்டார்கள். போராளியாக மனதளவில் தயாராக மாட்டார்கள். ஆனால், பெரும் ஆளணி சிக்கலில் மாட்டிக் கொண்ட புலிகளிற்கு வேறு மார்க்கம் தெரியவில்லை. இப்படியான அணிகளையே நம்பியிருக்க வேண் டிய நிலைமை. கட்டாயமாக பிடிக்கப் பட்டவர்களையே களமிறக்கினார்கள்.

இந்த அணிகளால் எந்த களமுனை யிலும் உறுதியாக போரிட முடிய வில்லை. அது யதார்த்தமும் கூட. சில தற்காலிக ஆறுதல்களை புலி களிற்கு கட்டாய ஆட்சேர்ப்பு கொடுத் தாலும், நிரந்தரமான வெற்றியை கொடுக்கவில்லை.

இறுதி யுத்தம் 2006 இல் ஆரம்பித்த போது, முதல் ஒன்றரை வருடங்களிற்கு புலிகளின் படையணிகளை சிதைப் பது, ஆளணியை குறைப்பதுதான் இராணுவத்தின் திட்டமாக இருந்தது. ஒப்பீட்டளவில் இராணுவத்திடம் பெருமளவு ஆளணி இருந்ததால், புலிகளின் ஆளணி இழப்பு ஒப்ரே சனில் ஒரு தொகை இராணுவத்தை ஈடுபடுத்த முடிந்தது. மன்னாரில் படைநடவடிக்கை ஆரம்பித்த சமயத்தில், நிலங்களை கைப்பற்றுவது இராணுவத்தின் நோக்கமாக இருக்கவில்லை. புலிகளின் ஆளணியை அழைப்பதே நோக்கம். அதை கச்சிதமாக செய்தார்கள்.

யுத்தமென்பது, ஒவ்வொரு களமுனை யிலும் தீட்டப்படும் திட்டங்களை மட்டும் கொண்டதல்ல. அதற்குமப் பால் பரந்து விரிந்தது. சர்வதேச அணுகுமுறைகளும் அதில் சம்பந்தப் பட்டது. புலிகளை அழைப்பதற்கான மூலோபாய உத்திகள் வகுக்கப்பட்ட போது, கவனம் செலுத்தப்பட்டவை புலிகளின் ஆயுத வரவை தடுப்பது, ஆளணியை அழிப்பது, இராணுவத்தின் சூட்டு வலுவை அதிகரிப்பது ஆகிய மூன்றும்தான். மூன்றையும் இராணுவம் கச்சிதமாக செய்தது.


சரி, தேவிபுர ஒப்ரேசனில் என்ன நடந்தது? அங்கு உள்நுழைந்த படை யணிகள் என்ன செய்தன? அவற்றின் முடிவுகள் என்ன? இதையெல்லாம் அடுத்த வாரம் சொல்கிறோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, இங்கிலாந்திற்கு ஸ்லிப்பில் கண்டம்!

இங்கிலாந்து இந்தியா டெஸ்ட் அந்த இரண்டு நாட்டு ஊடகக் கவனத்தையும் அதிகமாக பெற்றிருக்கிறது. ஏதோ உலகப்போர் மாதிரி இந்திய ஊடகங்கள் அந்த தொடரை வர்ணிக்கின்றன. அதற்கு காரணம் விராட் கோலி என்ற பிராண்டட் பெயர். இந்திய டெஸ்ட் அணிக்கான முக்கியத்துவமாக அல்லாமல், விராட் கோலியென்ற பெயரிற்கான முக்கியத்துவமாக தொடர் அமைந்திருக்கிறது. எட்ஜ்பாஸ்டன் முதல் டெஸ்டில் சதம், அரைச்சதம் அடித்து அணியின் கௌரவமான தோல்விக்கு உதவினார் கோலி. அதேசமயம் இரண்டாவது இன்னிங்ஸில் அரைச்சதமடித்த சாம் குர்ரன் இங்கிலாந்தின் வெற்றிக்கு உதவினார். குர்ரனின் ஆட்டம் பற்றி குறிப்பிடும்போது, இந்திய கிரிக்கெட் பண்டிதர்கள் "இந்திய வீரர்கள் பிடியொன்றை நழுவவிட்ட வாய்ப்பை பயன்படுத்தி அரைச்சதமடித்தார்" என மறக்காமல் சுட்டிக்காட்டினார்கள். அதேசமயத்தில் அவர்கள் விதந்தோதிய விராட் கோலியின் துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து வீரர்கள் நழுவவிட்ட இரண்டு இலகுவான பிடியை பற்றி மூச்சுக்கூட விடவில்லை.



இந்த தொடரில் இரண்டு அணிகளிலுமே ஒரு ஒற்றுமையான பலவீனம் வெளிப்பட்டது. அது ஸ்லிப் பீல்டிங். இந்தியாவின் ரஹானே, தவண் இங்கிலாந்தின் அலிஸ்டர் குக், மாலன் ஆகியோர் ஒட்டைக்கையுடன் அந்த பொஸிஸனில் நிற்பார்கள். இரண்டு அணிகளிற்குமே ஒரேவிதமான பிரச்சனையேற்பட்டிருப்பது கொஞ்சம் சுவாரஸ்யமான விசயம்தான்.

துடுப்பாட்டத்திலும் சொதப்பி, களத்தடுப்பிலும் சொதப்பினால் தவணிற்கு அடுத்தடுத்த டெஸ்டில் இடம் கிடைக்குமா தெரியவில்லை. இன்றைய இந்திய அணியில் விராட் கோலி இராணுவத்தனமான அணுகுமுறையை பேணுகிறார். ஒரு ஆட்டத்தில் சொதப்பினால் ஆடும் லெவனிலிருந்து தூக்கி, வெளியே உட்கார வைக்கிறார். விஜய், தவண், புஜாரா, ராகுல் என முன்வரிசை வீரர்கள் கொஞ்சம் அளவிற்கு அதிகமாகவே உட்கார வைக்கப்படுகிறார்கள். இதனால்தான் இந்திய டெஸ்ட் அணியில் நிலையான தொடக்க ஜோடியொன்றை கட்டமைக்க முடியவில்லை. கடந்த இரண்டுவருடத்தில் உள்நாட்டில் அதிக டெஸ்ட்டை இந்தியா ஆடியதால், நிலையான தொடக்க ஜோடியில்லாத குறையை அதிகமாக உணரவில்லை. இங்கிலாந்து தொடரில் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். அண்மையில் சௌரவ் கங்குலியும் இதை பகிரங்கமாக சுட்டிக்காட்டியிருக்கிறார். வீரர்களை அடிக்கடி தூக்கி எறியாமல், அவர்களிற்கு போதிய வாய்ப்பளித்திருக்கிறோமா என்பதை கோலி சிந்திக்க வேண்டும் என கூறியுள்ளார்.

முதல் டெஸ்டில் நடந்த இன்னொரு சம்பவம் அவ்வளவாக வெளியில் பேசப்படவில்லை. என்னதான் நட்சத்திரமாக மாறியிருந்தாலும், களத்தில் மோசமாக நடக்கும் இயல்பை கோலி இன்னும் மாற்றவில்லை. முதல் இன்னிங்ஸில் அபாரமாக ஆடி வந்த இங்கிலாந்து கப்டன் ஜோ ரூட், கோலியின் த்ரோவிற்கு ரன் அவுட் ஆனார்.

உடனே கோலி, சில அசிங்கமான வார்த்தைகளை வெளியிட்டு, மோசமான செய்கை செய்தார். இதை அவதானித்த ஆட்ட நடுவர் ஜெஃப் குரோவ், கோலியை அழைத்து எச்சரிக்கை தொனியில் சில அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறார். நல்ல டெஸ்ட் போட்டியொன்றை இப்படியான அநாகரீகமான நடத்தையால் சர்ச்சையாக்க வேண்டுமென முகத்திற்கு நேராகவே கூறியிருக்கிறார்.

# இலங்கைக்கு கிரிக்கெட்டே கண்டம்!

தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் தொடரை இலங்கை வென்றபோது ரசிகர்கள் துள்ளிக் குதித்தார்கள். அப்பொழுதே சிலர் அபாய எச்சரிக்கை செய்தார்கள். "ஓவராக துள்ளாதீர்கள். ஒருநாள் தொடரில் கதற கதற அடிக்கப் போகிறார்கள்" என. இப்பொழுது அதுதான் நடந்திருக்கிறது. தென்னாபிரிக்கா போன்ற பலமான ஒரு அணியுடன் ஆடும்போதுதான், ஒரு அணியாக சகல துறைகளிலும் இலங்கை பலவீனப்பட்டிருப்பது தெரிகிறது. வெட்கத்தை விட்டு சொன்னால், இந்த அணி தற்போதைய சர்வதேச ஒருநாள் போட்டிகளிற்கு தகுதியானதா என்பது சந்தேகம்தான்.



இதுவரை இலங்கையின் துடுப்பாட்டமும், பந்துவீச்சும்தான் மோசமென்றிருந்தது. இந்த தொடரில் களத்தடுப்பும் மகா மோசமாக இருக்கிறது. 3வது ஒருநாள் போட்டி முடிந்ததும், அணித்தலைவர் மத்யூஸே வெறுத்துப் போய், "நமது களத்தடுப்பு பாடசாலை அணியின் தரத்தில் இருந்தது" என்றார்.

ஒரு காலத்தில் பந்துவீச்சில் கலக்கிய இலங்கையின் இன்றைய நிலைமை இரத்த கண்ணீர் வரவைப்பது. தாக்கம் செலுத்தக்கூடிய வேகப்பந்து வீச்சாளர்கள் யாருமே இல்லாமலிருக்கிறார்கள். எல்லா நாட்டு பந்துவீச்சும் அண்மைய காலத்தில் மெருகேறி, இன்னொரு தளத்திற்கு நகர்ந்து கொண்டிருக்க, இலங்கைதான் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிறது. பந்துவீச்சில் வெரைட்டியே கிடைப்பதில்லை. எதிரணி துடுப்பாட்டக்காரர்களிற்கு உத்திரீதியான அழுத்தங்களை கொடுக்க முடியாத பந்துவீச்சாளர்கள்தான் தற்போது இலங்கையிலுள்ளனர்.

தென்னாபிரிக்கா போன்ற வலுவான பந்துவீச்சை ஒருநாள் தொடரில் சந்திக்க இலங்கை துடுப்பாட்டக்காரர்களாலும் முடியவில்லை. இரண்டு டெஸ்ட், முதலிரண்டு ஒருநாள் போட்டிகளில் சொதப்பிய நிரோசன் டிக்வெல மூன்றாவது போட்டியில் ஒரு அரைச்சதமடித்தார். இரண்டாவது போட்டியின் பின்னர், டிக்வெலவின் துடுப்பாட்ட உத்திகளில் சிறிய மாற்றத்தை பயிற்சியாளர் ஹத்துருசிங்க செய்திருந்தார். மூன்றாவது போட்டியில் அதற்கு பலனிருந்தது. எனினும், இளம் வீரர் குஷால் மெண்டிஸ் பலமான அணிகளிற்கு எதிராக உத்திரீதியில் பலவீனமாக இருக்கிறார். சிறந்த வீரராக வளர்வதற்கான எல்லா அறிகுறியும் மெண்டிஸில் ஆரம்பத்தில் வெளிப்பட்டது. எனினும், அது தற்போது மங்கி வருகிறது. ஒருகாலத்தில் தினேஷ் சந்திமால் அறிமுகமான காலத்தை மெண்டிஸ் நினைவூட்டுகிறார்.

இன்றைய இலங்கை ஒருநாள் அணியில் யாருமே மட்ச் வின்னர்களாக தம்மை நிரூபித்தவர்கள் கிடையாது. ஆனால் திசர பெரேரா, குஷல் ஜனித் பெரேரா, தரங்க, மெண்டிஸ், தனஞ்ஜென ஆகியோர் ஆங்காங்கே போட்டிகளில் மெல்லிதாக ஜொலிப்பார்கள். அணி சுனாமியில் சிக்கி சின்னாபின்னமாவதில் அவர்களின் பங்களிப்பு தெரிவதில்லை. இலங்கை அணி வெற்றிபெறுவதென்றால், இந்த வீரர்கள் சீரான பெறுபேற்றை வெளிக்காட்டி, அவற்றில் ஒருங்கிணைந்த தன்மையிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**பிளாஸ்டிக் அரிசி என்று பத்திரிகைகளில் குறிப்பிடுகிறார்களே... அது என்ன?**

*உ.கௌதமன், குஞ்சர்கடை*

பிளாஸ்டிக் அரிசி என்றதுமே, அது பிளாஸ்டிக்கில் செய்யப்பட்டது என்று நினைக்க வேண்டாம். வயலில் விளையும் நெல்லை, இயந்திரத்தில் அரைத்து அரிசியாக்குவது வழக்கமான முறை. அப்படி அரிசியாக்கும்போது உடையும் அரிசியை, குருணை என்பார்கள். இந்தக் குருணையை அரைத்து மாவாக்கி, அச்சில் வைத்து மீண்டும் முழு அரிசியாக்குவது ஒரு வகை. இன்னொரு வகை... மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கை அரைத்து, அவற்றுடன் சில வேதிப் பொருட்களைக் கலந்து உருவாக்கப்படுவது. இதில், ஒருவித பிசினும் கலப்பதாகக் கூறப்படுகிறது. இவை, பெரும்பாலும் சீனாவில் தயாராகிறது. மாத்திரை தயாரிப்பது போல விற்றமின்களைச் சேர்த்து அரிசி தயாரிக்கும் முறையும் இருக்கிறது. இந்த மூன்று வகை அரிசிகளுமே பிளாஸ்டிக் தன்மைகொண்டவைதான். இந்த வகை அரிசிகள், பெரும்பாலும் தனியே விற்பது இல்லை. வழக்கமான அரிசியுடன் கலந்து, கலப்பட முறையில் விற்கப்படுகிறது. சாதாரணமாகப் பார்த்துக் கண்டுபிடிப்பது கடினம். இவற்றை வேகவைக்கும்போது, வழக்கமான அரிசிகள் போல இல்லாமல் விரைப்பாக இருக்கும். இதைச் சாப்பிட்டால், எளிதில் ஜீரணமாகாது. உடல் நலத்துக்கு பல்வேறு கெடுதல்களை உண்டாக்கும்."







**பிரான்ஸ் நாட்டு வாசனைத் திரவியங்களுக்கு மட்டும் உலகம் முழுவதும் பெரும் வரவேற்பு கிடைப்பது ஏன்?**

*கே.தாரிகா, சாவகச்சேரி*

# கேள்வி பதில்



மன்னர்கள் காலங்களிலேயே சந்தனம், ஜவ்வாது போன்ற வாசனைப் பொருட்கள்ளை உபயோகித்தார்கள். அதன் தரத்தை மெருகேற்றியவர்கள், பிரான்ஸ் நாட்டினரே. 16ம் நூற்றாண்டில் பிரான்ஸை ஆண்டு வந்த ராணி, பாத்திரத்தில் நீர் ஊற்றி, அதில் வாசம் மிகுந்த மலர்களைத் தூவியும், அதன் சாறைப் பயன்படுத்தியிருக்கிறார். இன்று, நவீனத் தொழில்நுட்பங்கள் மூலம் நீண்ட நாட்கள் கெட்டுப்போகாத வாசனைத் திரவியங்களைத் தயாரிக்கிறார்கள். பிரான்ஸ் வாசனைத் திரவியங்களின் சிறப்புக்கு, இயற்கை மலர்களே காரணம். பிரான்ஸ் நாட்டின் காலநிலையும் இதற்கு உதவுகிறது. குறிப்பாக, க்ராஸ் (Grasse) எனும் நகரில், மல்லிகை போன்ற மலர்களை விளைவிக்க ஏற்ற காலநிலை உள்ளது. அதனால், இயற்கையான மலர்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பிரான்ஸ் நாட்டு வாசனைத் திரவியங்களுக்கு, உலகம் முழுவதும் வரவேற்பு இருக்கிறது.

**உணவு சாப்பிடாமல் தண்ணீரை மட்டும் குடித்து, ஒருவரால் எத்தனை நாட்கள் உயிர் வாழ முடியும்?"**

*க.சாருஜன், திருநகர்*


தண்ணீரில் தாதுக்கள் மட்டும்தான் இருக்கின்றன. கலோரிகளோ, கொழுப்போ, விற்றமின்களோ கிடையாது. ஒருவரின் உடலில் உள்ள எதிர்ப்பு சக்தியைப் பொறுத்துதான் எத்தனை நாட்கள் உயிர் வாழ முடியும் என்பது தெரியும். உடலில் சேமித்துவைத்த கொழுப்பு, மாவுச்சத்து, க்ளைகோஜென், புரதம் ஆகியவற்றை உடல் எரித்து, சக்தியாக மாற்றிக்கொள்ளும். இவை தீர்ந்த பிறகு, தண்ணீர் மட்டுமே அருந்தினால், உடல் பலவீனமாகும். பிறகு, குறைந்தபட்சம் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்துக்கு மேல் உயிர் வாழ முடியாமல் போகும்.

**காயம் ஏற்பட்டால் அந்த இடத்தில் தழும்பு வருவது ஏன்? அந்தத் தழும்பு மறைவதற்கு என்ன வழி?**

*லி.ஆன் மேரி, விடத்தல்தீவு*

காயம் ஏற்பட்ட இடத்தில், டெர்மிஸ் (Dermis) என்ற சருமத்தின் உட்பகுதி பாதிக்கிறது. பெரிய காயமாக இருந்தால், சருமத்தினுள் உள்ள கொலஜன், எலாஸ்டின் போன்ற சருமப் புரதங்கள் பாதிக்கின்றன. இயற்கையாகவே, அடிபட்ட இடத்தைச் சரிசெய்யும் புரதம், கொலஜன். அது, மீண்டும் அடிபட்ட இடத்தில் தசையை வளரச் செய்யும். அடிபட்ட இடத்தை ஆறச் செய்யும் செயல்தான் ஹீலிங் புரோசஸ். காயம் ஆறியதும் அந்த இடத்தில் தழும்பு ஏற்படுகிறது. தழும்பைப் போக்க, சரும மருத்துவரின் ஆலோசனைப்படி, தரமான மருந்துகளை தொடர்ந்து மூன்று மாதங்கள் தடவவேண்டும்.



**யானை ஒரு நாளைக்கு எவ்வளவு உணவு சாப்பிடும் ஜீபா?**

*ம.அருநிலவன், விசுவமடு*


யானையின் உருவத்தைப் போலவே அது சாப்பிடும் உணவின் அளவும் அதிகம். சைவப் பிராணியான யானை... கரும்பு, தென்னைமட்டை, மூங்கில் போன்றவற்றை விரும்பிச் சாப்பிடும். காட்டில் இருக்கும் யானைகள், ஒரு நாளைக்கு 16 மணி நேரம் உணவுத் தேடலில் இருக்கும். நன்கு வளர்ந்த யானை, ஒரு நாளைக்கு 140 கிலோ முதல் 270 கிலோ 'வரையான உணவை உட்கொள்ளும்.

**நீர்மூழ்கிக் கப்பல், கடலில் எவ்வளவு ஆழத்துக்குச் செல்லும்? அதன் பயன் என்ன?**

*பி.வைஸ்ணவி, சுதுமலை*

நீர்மூழ்கிக் கப்பல், பெரும்பாலும் போரின்போதே பயன்படுகிறது. சில மணி நேரங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை பயணிக்கும் அளவு திறன்கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கப்படுகின்றன. நீர்மூழ்கிக் கப்பல்கள் பொதுவாக, 490 மீட்டர் ஆழம் வரை சென்றால், இயல்பாகப் பயணிக்க முடியும். 730 மீட்டருக்கு கீழும் சென்றால், கப்பல் சேதமடைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Cosy

## HOTEL & RESTAURANT

North Indian, Punjabi, Chinese
&
Jaffna Foods



Free Home Delivery (Limited Area)
**Hotlines: 021 222 7100 / 021 222 5899**

Open Daily : 11.00 a.m. to 11.00 p.m.
272, Stanley Road, Jaffna.
15, Sirambiyadi Lane, Jaffna.

**We Accept all credit cards**

www.cosylanka.com
info@cosylanka.com
www.facebook.com/cosy.cosy.167

| COSY HOTEL & RESTAURANT | Non A/C | A/C |
|---|---|---|
| Single bed | Rs. 2,000 | Rs. 2,500 |
| Double bed | Rs. 3,000 | Rs. 3,500 |
| Triple bed | Rs. 4,000 | Rs. 4,500 |
| Four bed | Rs. 4,500 | Rs. 5,000 |

10% Service charge will be added

Restaurant / party Hall
Roof Top Beer Garden
Ample Parking
Generator Backup
Wi - Fi Facilities
24 Hrs Security Service

Gift Vouchers Rs. 1,000 Rs. 2,000 Rs. 500
**Available here**

# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)

ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்



தொடர்புகளுக்கு
**தீபம்**
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 12.08.2018 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org